
1947-2007

# Theresian Flavour



## J/ St. Theresa's Girls' College

ATCHUVELY



## கல்லூரிக் கீதம்

புனித தெரேசா புனித தெரேசா
புனித தெரேஸ கன்னியின் மகிமையை நாமும்
போற்றிடுவோமே என்றும் வாழ்த்திடுவோமே

I

இல்லம் மூன்றின் இணையற்ற சேவைகளும் நிலைத்திடவே
நித்தம் தமிழ் மணக்கும் நிலையான கற்சிறக்கும்
சத்தியம் தனிச்சிறக்கும் சன்மார்க்கம் போல் சிறக்கும்
கல்விச் சேவை மிளிரவே கன்னியர் புகழ்ந்துரைக்கும்

II

அறிவினாற்றல் மீதும் அருட் செயலால் தினமும்
ஆவியுடன் பொருளும் அர்ப்பணித்தே தினமும்
தேச சேவை எங்குமே பெருமையை நோக்கும்
தீராத பரம்பொருள் திருவருளை வேண்டிடுவோம்

## School Song

*I*

*Little flower of Carmel*
*Parton of our school*
*Lovingly we come to you*
*To learn your little way*

*Chorus*

*I*

*Dear St. Therese*
*Do not turn away*
*Drop down just one little rose*
*The rose we need today*

*II*

*Make us pure and truthful*
*In all we do or say*
*Drawing us in loyalty*
*To all who teach your way*

*III*

*Help us to seek God alone*
*Live in love sincere*
*Seeking unity and love*
*Until our end is near.*

ST. TNERESA'S GIRLS' COLLEGE ATCHUVELY

PURE AND TRUE

1947

**VISION :-** Blooming the values and prospering knowledge and skills.

**நோக்கு :-** மானிட விழுமியத்தை மலரச் செய்து அறிவோடு திறமையையும் மாண்புறச் செய்தல்.



St. Therese

# Our School Founder



CHEVALIER SIR CHITTAMPALAM ABRAHAM GARDINER
The dornor of the School convent land
and THE MAIN BLOCK.
called to serve. 06.01.1899. called to rest. [illegible].12.1960

# பொருளடக்கம்


| இல. | விடயம் | பக்க இல. |
|---|---|---|
| 01. | Mission Vision - பணி நோக்கு | I |
| 02. | பாடசாலைக் கீதம் ஆங்கிலம் | II |
| 03. | பாடசாலைக் கீதம் தமிழ் | III |
| 04. | பாடசாலைப் பாதுகாவலியின் படம் | IV |
| 05. | ஸ்தாபகர் கட்டுரை | V |
| 06. | அதிபர் செய்தி | VI |
| 07. | ஆசிச் செய்திகள் | VII |
| 08. | Editorial | 01 |
| 09. | Editorial Board | 02 |
| 10. | Jubilee Song | 03 |
| 11. | அருட்சகோதரிகள் பழைய அதிபர்களின் பெயர்ப்பட்டியல் | 04 |
| 12. | Year at St. Theresa | 06 |
| 13. | Birth and Growth of St. Theresa's | 07 |
| 14. | Our Academic Staff | 10 |
| 15. | நடராஜ வடிவம் உணர்த்தும், சமயம், தத்துவம், கலை ஒரு நோக்கு | 11 |
| 16. | கல்லூரி அன்னைக்கு ஒரு கவிமாலை | 16 |
| 17. | ஆசிரியரின் பெயர்ப்பட்டியல் (1975 - 2007) | 17 |
| 18. | An Evening in the Beach | 19 |
| 19. | Great Lasses of St. Theresa | 20 |
| 20. | நான் யார் தெரியுமா? | 21 |
| 21. | தமிழ் மொழியின் சிறப்பு | 22 |
| 22. | அன்னைக்கு நிகருண்டோ | 23 |
| 23. | Academic Achievement Results Gr5, O/L, A/L. | 24 |
| 24. | வாழ்வின் ஆரம்பப் படிகள். | 28 |
| 25. | எமது பாதுகாவலியின் பாதச்சுவட்டில்.... | 29 |
| 26. | பெண் வீடுதலை - கவிதை | 31 |
| 27. | விஸ்கி. | 32 |
| 28. | My Life in the School | 33 |
| 29. | Our Principal | 34 |
| 30. | என் நினைவலைகள்... | 35 |
| 31. | மனம்மகிழ நடனக்கலை. | 37 |
| 32. | நினைவுப்பதிவேடுகளிலிருந்து... | 38 |
| 33. | சங்க இலக்கியங்கள் சுட்டும் பண்பாட்டுக் கோலங்கள். | 40 |
| 34. | Theresian called to Serve the Lord. | 43 |
| 35. | Teacher pupil interaction. | 44 |
| 36. | பழைய மாணவி ஒருவரின் மனப்பதிவிலிருந்து... | 45 |

| | | |
|---|---|---|
| 37. | வசந்த காலம் திரும்புமா? | 46 |
| 38. | The A.C.Sisters who rendered their dedicated Services to our College. | 47 |
| 39. | வைர விழாக் காணும் அச்சுவேலி புனித தெரேசாள்.ம.கல்லூரி | 48 |
| 40. | கற்றதனால் ஆன பயன்... | 51 |
| 41. | புனித தெரேசாள் புகழ் பாடுவோம். | 52 |
| 42. | பூலோக கற்பக தரு. | 53 |
| 43. | முயற்சியே முதுகெலும்பு. | 55 |
| 44. | பாடசாலைச் சூழலில் கற்பித்தல் அணுகுமுறை. | 56 |
| 45. | My Best Friend, My School | 58 |
| 46. | Theresian who served and are gone to their eternal reward. | 59 |
| 47. | தைப்பொங்கல். | 60 |
| 48. | இசைதந்த இன்பம். | 61 |
| 49. | Current Development in Media Communication. | 62 |
| 50. | இரத்த ஒவ்வாமை ஒரு நோக்கு. | 63 |
| 51. | ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதில் கிறிஸ்தவர்களின் பங்கு. | 65 |
| 52. | நிலம் மாசடைவதால் ஏற்படும் சூழற் பிரச்சினைகள். | 67 |
| 53. | வியாபாரம் வந்த வழி. | 69 |
| 54. | எம் மூத்தோரை அரவணைப்போம். | 70 |
| 55. | ஆக்கச் செயற்பாடுகளைக் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் தீர்ப்பதற்கான வழிவகைகளும். | 71 |
| 56. | எனது பாடசாலை. | 73 |
| 57. | ஐ.நா. வின் மணியொலி | 74 |
| 58. | நாம் கி.பி. 2007இல் வாழ்கின்றோம் என்பதற்கான அடையாளங்கள். | 75 |
| 59. | கல்லூரி நாட்கள். | 77 |
| 60. | நீர்ப்போர் - ஒரு கண்ணோட்டம். | 79 |
| 61. | Natural Disasters. | 81 |
| 62. | வாழ்விலே சந்தோஷக் காற்று... | 82 |
| 63. | அன்னை தெரேசா. | 83 |
| 64. | எல்லைக் கிரயவியல். | 84 |
| 65. | Head Girls of St. Theresa's Girls' College from year 2000 | 87 |
| 66. | A past Student writes. | 89 |
| 67. | கல்விப் பணியில் அறுபதாண்டுகளாக மகுடம் சூட்டும் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி | 91 |
| 68. | நன்றி நவிலல் | 93 |
| 69. | விளம்பரங்கள் | |
| 70. | Thanks | 94 |

# Senator Chevalier Sir Cittampalam Abraham Gardiner



As we are celebrating the Jubilee of St. Theresa's Girls' College, we are filled with gratitude to God for his abundant graces bestowed upon this school for the last hundreds years. As we thank God we know that God's works in human history through his creatures. He makes use of his creatures to untold his glory in this world. In this way God made use of for Cittampalam Abraham Gardiner in many beautiful ways to reveal his glory at Atchuvely. One of the beautiful ways is by giving him an inspiration to begin a school for Atchuvely girls. God did not stop with that, but he also inspired Gardiner to bring down the Apostolic Carmel sisters to look after the school and to make valuable contributions in the field of education. It goes without saying that the Apostolic Carmel sisters have been always in the forefront in the field of education. So Gardiner was inspired not only to start a school but also to bring the Apostolic Carmel sisters to Atchuvely.

In this way the school is very much indebted to Gardiner for his initiative in starting a school.

As we go through his life we find that he was a man who always radiated the Love of God through his life. It is interesting to know that he at times came to school for Christmas and distributed gifts to the poor children in the school hall and celebrated a meaningful Christmas celebration. Thus he has given real meaning to Jesus teaching on love. Jesus said that it is through the love we have for one another, the world will come to know that we are his disciples (Jn 13:35) Now all the people of Atchuvely including the Hindus know Gardiner as a Catholic mainly by his works of charity.

He had not done such wonderful works of charity we would not be remembering him. But since he has done marvelous works of love we still enshrine him in our hearts and we are sure for centuries together people will remember him and through him they will give praise to the creator.

Thus Gardiner is leaving a beautiful message to all of us. All what we have come from God and we must always use our resources not only for our advantage but also to spread the name of God by sharing with the poor and needy, and also by making our contribution for the common good of the society. So at this moment, I give praise and thanks to the almighty God for the gift of Gardiner and pray to God that He may give him the everlasting life which he firmly believed during earthly existence.

*Rev. Fr.M. David,*
*Professor, St.Xavior's Seminary,*
*Colombagam.*

# அதிபரின் செய்தி



கல்வியிலும் இறைபக்தியிலும் எமது மாணவர் வளர்ந்து வர சேர். சிற்றம்பலம் காடினர் அவர்களினதும், வண அருட்தந்தை ஜீ. ஜீ. பாலசுந்தரம் அடிகளாரினதும் முயற்சியால் இப்பாடசாலை 1946 களில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் புளியடிப் பள்ளிக்கூடம், திண்ணைப் பள்ளிக்கூடமாக வளர்ச்சி பெற்று கார்மேல் கன்னியரிடம் ஒப்படைக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சி கண்டது.

இக்கல்லூரி துளிர்விட்டு பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. கோப்பாய்க் கோட்டத்தில் தனித்துவம் மிக்க ஒரேயொரு பெண்கள் கல்லூரியாக ஆளுமை நிறைந்த அதிபர்களின் வழிநடத்தலினால் இன்று பல துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. அந்த வகையில் தொடர்ந்தும் எமது நிர்வாகத்தின் கல்விச் செயற்பாடுகளில் பல துறைகளிலும் நிறைவு பெற்று வர ஆண்டவரின் ஆசி என்றும் கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

பதினைந்து ஆண்டுகளில் யுத்தங்கள் பல தடவை கண்ட எமது கல்லூரி பாரிய அழிப்புக்களுக்கு மத்தியிலும் இன்று வளர்ந்து நிற்கின்றது என்றால், அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எடுத்த பெரு முயற்சியே காரணமாகும்.

எமது கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் அதிகமானவர்கள் அடிப்படை வசதியற்ற குடும்பங்களிலிருந்து வந்தபோதிலும் அவர்களை வளர்த்தெடுத்த பெருமை இக் கல்லூரியையே சாரும். இக் கல்லூரியில் கற்று வெளியேறிய மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக,கல்விமான்களாக, உயர்பதவி வகிப்பவர்களாக சிறந்த விழுமியங்களைக் கடைப்பிடிப்பவர்களாக எம் நாட்டிலும். வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருவதைக் கண்டு கல்லூரி பெருமிதம் அடைகிறது.


இக் கல்லூரி வளர உறுதுணையாக இருந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித்திணைக்களம் சார் உத்தியோகத்தர்கள், மேதகு ஆயர் பெருந்தகைகள். அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், பொறியியலாளர்கள், G.T.Z, NECORD போன்ற சமூக நிறுவனத்தினர், பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரினதும் உதவிகளையும் எமது கல்லூரியின் அறுபதாவது அகவையில் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

உண்மையும் தூய்மையும் என்ற மகுட வாசகத்தை அடித்தளமாகக் கொண்டு வளர்ச்சி கண்டுவரும் எமது பாடசாலையின் 60வது ஆண்டு நிறைவு விழாவினை சிறப்பிக்க வெளியிடப்படும் இம்மலரானது மலர்ந்து மணம் வீச உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மலர் வெளியீட்டுக்காக ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், கருத்தாளம் மிக்க கட்டுரைகள், விளம்பரங்கள் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

நிறைவாக கல்லூரியின் வளர்ச்சிக்கு அன்று தொட்டு இன்றுவரை உதவிய அனைத்து நல் உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டி அறுபதாவது ஆண்டு வைரவிழாக் கொண்டாடும் புகழ்பூத்த இவ்வாண்டிலே பணிபுரிய இறைவன் எனக்களித்த நன்மைத்தனங்களுக்கும் நன்றிகூறி எம் கல்லூரி கல்வியிலும், ஒழுக்கத்திலும் உண்மையிலும், தூய்மையிலும் ஓங்கி வளர வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி. மரிய றோசாறியோ அ.க**
**அதிபர்.**

# Felicitation Message



It is an honour to be asked for a message of felicitation for the Diamond Jubilee of St. Theresa's Girls' College, Atchuvely. It is one of the privilages for being the Holy Father's Representative and, perhaps, for you a relished sign of your feeling part of the universal Church, the mysterious Body of Christ, entrusting to you the vital role of helping her children to grow to maturity and become really the salt of the earth, the leaven in the dough of humanity, the light of the world. For your generous accepting of this role and your life – long commitment to the cause of education we are grateful to you and the Lord and ask for his abundant blessings upon you.

I have come to know how severely your work at St.Theresa's has been affected all these long years of the conflict and it is a wonder that you have been continuing your efforts and are now experiencing a resurgence and a new hope. As you are resuming in full your educational activities with the growing number of students and families entrusting to you their formation, it might be good to look at the challenge we face in a fresh way.


The war situation we have been suffering all these years is a tragedy we share with you with great pain as we realize our complete helplessness, utterly unable to help to bring an end to the conflict, only confined to the hopeless and endless work of giving relief. And all along we face the nagging doubt that we are all victims because we may have overlooked something in the process of education. We have not succeeded in preparing for society the people it needs. And this, unavoidably would apply to family, school and church – primary, official, trusted institutions for the formation of fully suitable members of our society. The paradox is that most of those in some way connected with our situation of suffering are people whom we have brought up, people whom our society has nurtured. We are asked to try and bring children and youth up to the measure of Christ. Are we sure that working in a traditional society like ours, we have clarified the kind of formation we have to impart, the kind of persons we are trying to shape, women of the Kingdom, concerned primarily and directly with the divine plan for all persons to be helped to be images of God, members of the one Body of Christ - above race and caste and class and creed? Are we shaping women who go beyond the ideal of a good wife and mother of family and extend their role to be with Mary mothers in the family of God, occupied in the common good, the issues of poverty, justice and peace, involved in ensuring for all, structures of service, genuine solidarity and love?

We pray ardently that at St. Theresa's we may all face this challenge. That our wonderful gifts of God, our girls, may gradually be awakened to the wonder and beauty of their vocation and practically initiated to play their active role in our violent world. May they, precious channels of love and life, be trained to do their part in giving birth to a new humanity.

+ Mario Zenari

✠ *Mario Zenari,*
*Apostolic Nuncio*

# ஆயரின் வாழ்த்துச் செய்தி



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் பொறுப்பேற்று 60 ஆண்டுகளை நிறைவு செய்வது ஒரு மகிழ்வான விடயமாகும். 1943 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டுவரை இப்பாடசாலையில் பணியாற்றிய திருக்குடும்பக் கன்னியர்கள் பாடசாலை கட்டிடத்தை அழகுற அமைத்து அப்போஸ்தலிக்க கார்மேல் சபை கன்னியர்களிடம் கையளித்தனர்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்களின் அர்ப்பணிப்புமிக்க கல்விப் பணியால் இக்கல்லூரி வளர்ந்து இப்பகுதி மாணவிகளின் அறிவுக் கூடமாக திகழ்ந்துள்ளது. ஏழாம் வகுப்போடு இருந்த இப்பாடசாலை இன்று க.பொ.த உயர்தர வகுப்புக்களை நடாத்துகின்ற அளவு படிப்படியாக வளர்ந்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

ஆயிரத்திற்கு அதிகமான மாணவிகளுக்கு கல்வி அறிவை ஊட்டி அப்பிரதேசத்தின் தலைசிறந்த மகளிர் கல்விக்கூடமாக விளங்கிய இக்கல்லூரி நாட்டு நிலைமைகள் காரணமாக எழுநூறு மாணவிகளோடு இன்று இயங்கி வந்தாலும் கல்வியிலும் கட்டுப்பாட்டிலும் என்றுமே தரங்குறைந்ததாக அறியப்படவில்லை.

இவ்வேளையில் இக்கல்லூரியை உருவாக்குவதற்கு அயராது உழைத்துப் பங்களிப்புச் செய்த சேர்.சிற்றம்பலம் கார்டினர் அவர்களையும், கடந்த 60 ஆண்டு காலப் பணியில் இங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள் அனைவரையும் நாம் முதலில் நன்றியோடு நினைவுகூர வேண்டும்.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் கவனமும் கரிசனையும் கொண்டு அன்றாடம் உழைத்துவரும் அதிபர், ஆசிரியர்களையும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்களையும் பாராட்டுவதுடன் அச்சுவேலி பிரதேசத்தின் சிறந்த மகளிர் கல்விக் கூடமாகத் தொடர்ந்து பணியாற்றும்படி அழைப்பு விடுக்கின்றோம்.

+ Thomas Savundaranayagam

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,**
**யாழ் ஆயர்.**

# ஆதீன முதல்வரின் அருளாசி



அன்பு சார் பெருந்தகைமீர்,

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி வைரவிழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மிகவும் பழமையானதும், பெருமையானதும் பல சிறப்புக்களைக் கொண்டதுமான இப் பாடசாலை ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை நல்ல சமுதாயத்தை உருவாக்கிய பெருமையில் இன்று வைரவிழா காணுகின்ற சிறப்பை கொண்டிருப்பது கல்விச் சமூகத்தை மனம் குளிர வைத்துள்ளது. மனித குலத்தின் உயர்நிலையைப் பெற்றுத் தருவது கல்வியாகும். இக்கல்வி இல்லாதவனுடைய வாழ்க்கை இருட்டறையில் நிற்பது போன்றதாகும். இதனை வள்ளுவரும்


**"கண்ணுடையார் என்போர் கற்றார். முகத்திரெண்டு**
**புண்ணுடையார் கல்லாதவர்"**

குறள் மூலமாக நமக்கு உணர்த்துகின்றார். இந்நாட்டில் தமிழனுடைய தனிச் சொத்து கல்வியாகும். இக்கல்விக்காகவே நாட்டின் பல பாடசாலைகள் பணியாற்றுகின்றன. இவ்வரிசையில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி புனிதமான கல்விப்பணியினூடாக ஒழுக்கமான மாணவ சமுதாயத்தை உருவாக்கி வருவது எல்லோருடைய மனதையும் மகிழ்வித்துள்ளது. இக்கல்லூரி இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து ஒழுக்கமும் சிந்தனையும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க இறையாசியை வேண்டுகின்றோம். இப்புனிதப் பணியைச் செய்யும் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*"வாழ்க வளமுடன்"*
*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

# குரு முதல்வரின் ஆசிச்செய்தி



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி குடும்பம் தன் பணிவாழ்வில் ஆறு தசாப்தங்களைக் கடந்து வைர விழா கொண்டாடு வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்ட 60 வருட மிகச் சிறப்பான கல்விப் பணியில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி பல வளர்ச்சிப்படிகளைத் தாண்டி வந்துள்ளது. 1940ல் சிறிய புளியடிப் பள்ளிக் கூடமாக மொட்டரும்பிய இக்கல்லூரி இன்று கோப்பாய் கோட்டத்தில் தனித்தியங்கும் பெண்கள் பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.

இக்கல்லூரி புனிதமான கல்விப்பணியினூடாக ஒழுக்கமான மாணவ சமுதாயத்தை உருவாக்கி வருவது பாராட்டுக்குரியது. இவ்வேளையில் இக்கல்லூரியை உருவாக்குவதற்கு அயராது உழைத்துப் பங்களிப்புச் செய்த சேர் சிற்றம்பலம் கார்டினர் அவர்களையும் வண. அருட்தந்தை ஜி.ஜி. பாலசுந்தரம் அடிகளையும், கடந்த 60 ஆண்டு காலப்பணியில் இங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள் அனைவரையும் நாம் முதலில் நன்றியோடு நினைவு கூர வேண்டும்.

இக்கல்லூரிக் குடும்பம் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து ஒழுக்கமும், சிந்தனையும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க இறையாசியை வேண்டுவதோடு, வைரவிழாவை முன்னிட்டு வெளிவரவுள்ள மலர் அழகாய் மலர்ந்து நறுமணம் பரப்ப என் அன்பான ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அருட்பணி. ஜஸ்ரின் B. ஞானப்பிரகாசம்,**<br>**குருமுதல்வர்,**<br>**ஆயர் இல்லம்,**<br>**யாழ்ப்பாணம்.**

# அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி



ஒவ்வொருவரும் தத்தமது தனிமனித ஆளுமைகளை வளர்த்தெடுப்பதோடு சமூகக் கடமைகளையும் செவ்வனே செய்யவேண்டியவர்களாகின்றனர். அவ்வகையில் சமூகத்தின் அடிப்படைஅலகு குடும்பம். குடும்பத்தின் அச்சாணி குடும்பத்தலைவி, தாய் அவளை நற்பண்பு உள்ளவளாய், நல்லறிவு உடையவளாய் வளர்த்தெடுப்பது சமூகத்தின் கடமை. இந்தச் சமூகத்தின் கடமையை நிறைவேற்றுவதில் பெண்கள் பாடசாலையின் பணி அளப்பரியது. அறுபது ஆண்டுகளாக அரும்பணியாற்றும் யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் பணி மதிப்பிற்குரியது.

பல்வேறு காரணங்களினாலும் சமூகம் சீர்குலைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இப்பாடசாலையின் வைரவிழா என்பது சமூகத்தின் புனர்நிர்மாணத்திற்கே உதவும் பெரும்பணி எனலாம். அறிவையும், அன்பையும் ஒருசேர வளர்க்க வேண்டிய தருணம் இது.

மாணவர் ஒவ்வொருவரும் மாணவர் பருவத்தில் மட்டுமல்ல வளர்ந்தும், நல்லறிவும் நல்லாரோக்கியமும் உள்ள நற்பிரஜைகளாக வாழவும், வளரவும் நல்லாசிகளை நல்குவதோடு விழாச் சிறப்புறவும் ஆசீர்வதிக்கின்றேன்.

**திரு. க. கணேஸ்**
**மாவட்ட செயலாளர்,**
**யாழ்மாவட்டம்.**

# Message of Felicitation



It is with immense joy and gratitude that I send you my warm felicitations on the occasion when St. Theresa's Girls' College, Atchuvely celebrates the Diamond Jubilee of its foundation. I praise and thank God for His bountiful graces and blessings on the institution all through these 60 years. My hearty congratulations and prayer filled greetings to the Management, Principal Staff and Students of St. Theresa's Girls' College.

This is an occasion to recall with gratitude God's blessings, a moment to go down the years and thank God for the hard work and toil of our sisters since 1947 when the school was handed over by the Holy Family Sisters with classes up to Grade 7.It has now reached the Advanced Level in Arts and Commerce .

I pray that this institution may grow from strength to strength and may your selfless service continue to impart value based education forming enlightened students who will go out with a sense of service upholding values of peace, justice and love with integrity of character.

May this jubilee inaugurate yet another milestone in your history giving you a still brighter vision of the educational service you are rendering

With every good wish,

M. Vincent A.C.
**Sister. M. Vincent A.C**
**Superior General.**

# Message from the Former Provincial Superior of the Apostolic Carmel (Sri lanka)



It is with great pleasure and deep gratitude to God that I send my message of warmest felicitations to St. Theresa's Girls' College, Atchuvely which is celebrating its Diamond Jubilee in the year 2007. I praise and thank God for all His bountiful graces, blessings and protection showered on this institution during the past 60 years.

This School which was established as a Parish School in 1943 and was directly under the Bishop through the Holy Family sisters ran the school for a period of 4 years. In 1946 it was handed over to the Congregation of the Apostolic Carmel and continued to be under our loving care. When the late Sr. Alacoque, A.C the first Principal took charge of the schools there were classes up to grade 7. By 1949, the school was allowed to prepare students for the Senior School Certificate. The founder of the school was the late Sir Sittampalam Gardiner. He laboured generously and selflessly to get the school started and it continued to make great progress in every field.

The situation changed with the outbreak of war and the soon underwent many ups and downs since then for the rest of the years of existence. Hence we thank God for his Providential care of the inmates and His powerful protection during that terrible, fearful period. Although the school had a glorious past with successes in every field of activity with a student population of over a thousand, today it caters to less than 700 students.

This is an occasion to thank God for the hard work, tireless toil of the pioneers and also those who toiled through the years with commitment and generosity in spite of the many challenges they had to face. This institution has rendered yeoman service for the formation of the young women in the Jaffna District of whom many are religious in congregations especially the Apostolic Carmel. These sisters who have been formed and groomed within the portals of St. Theresa's College, now serve in many districts of Sri Lanka.

May the dedication of those who have toiled in this institution during the past sixty years be the inspiration of those who are toiling now amidst the challenges and difficulties they face at present, and continue the good work began for the greater glory of God and the spread of His Kingdom.

Finally, I beg God's blessings on the Principal, Staff and Students of St. Theresa's College and pray that it may continue to provide that great service to the children around its environs.

*Sr. M. Sunitha, A.C*
*The Provincial Superior,*
*Apostolic Carmel,*
*Sri Lanka.*

# கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி



யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி பல தசாப்தங்களாக வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் அச்சுவேலியையும், அதனால் சூழவும் உள்ள பெண்பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வத்தை வழங்கி அவர்களை இச்சமூகத்திற்கு இயல்பினராக்கியுள்ளது. யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை அப்போஸ்தலிக்க கார்மேல்சபை அருட்சகோதரிகள் அதிபர்களாக இருந்து இப்பாடசாலையைப் பரிபாலித்து வருகின்றனர். அருட்சகோதரிகள் இதனைப் பரிபாலிப்பதால் பெண்பிள்ளைகளுக்கு ஒழுக்கம், மனைமுகாமைத்துவம். திறன்கள், நேர்நிலையான உரையாடல் ஆகியவற்றிற் பயிற்சி வழங்கப்படுவதால் சிறந்த சமூகப் பிரஜைகள் உருவாக வழிவகுத்துள்ளது. பாடசாலையில் புறச்சூழல் மிகச் சிறப்பாக இருப்பதால் இங்கு கல்வி கற்கும் மாணவிகள் தமது வீட்டையும், தம்மையும், சிறப்பாக வைத்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. "வருந்திச் சுமை சுமப்போரே அனைவரும் என்னிடம் வாருங்கள்" என்னும் யேசுகிறிஸ்துநாதரின் வாக்கியப்படி, வறுமைப்பட்டுள்ள அனைத்துக் குழந்தைகளும் இப் பாடசாலையை அணுகி கல்வி மூலம் தமது உளத்தேவைகளைப் பூர்த்தியாக்கியுள்ளனர். இக்கல்வி வலயத்தின் கோப்பாய்க் கோட்டத்தில் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இப்பாடசாலை பரிசில்கள் வாங்கியதை நினைத்துப் பார்க்கும்போது பாடசாலையில் கல்வி அபிவிருத்தியும் சிறப்பாக நடைபெறுகிறது எனலாம். தற்போது இப்பாடசாலையின் அதிபரின் சிறந்த முகாமைத்துவத்தினாலும் ஆசிரியர்களின் அர்ப்பணித்த சேவையினாலும் பாடசாலை மெருகேற்றப்பட்டு தொண்டாற்றுகிறது. இப்பாடசாலை சகல வளங்களையும் பெற்று பெண்பிள்ளைகளுக்கு கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

**திரு. வே. தி. செல்வரத்தினம்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# முன்னாள் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தனது வைர விழாவை இன்று கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சேர் சிற்றம்பலம் காடினர் அவர்களினதும், வண.அருட்தந்தை ஜி.ஜி.பாலசுந்தரம் அடிகளாரினதும் முயற்சியினால் 06.01.1946 இல் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. புளியடிப்பள்ளிகூடம் என்ற பெயரால் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட இப்பாடசாலை, திண்ணைப் பள்ளிக்கூடமாக வளர்ச்சி அடைந்து, முறையே திருக்குடும்பக் கன்னியரிடமும், கார்மேல் சபைக் கன்னியரிடமும் ஒப்படைக்கப்பட்டுப் படிப்படியான வளர்ச்சியைக் கண்டதுடன் ஆண்டு 1 – 13 வரை கலை, வர்த்தகப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலையாக விளங்கும் இப் பாடசாலை தரம் 1 – 5 வரை ஆண், பெண் இருபாலர்க்கும் முழுமையான கல்வியூட்டி, கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் 6–13 வரை பெண்களுக்குக் கல்வியூட்டும் ஒரேயொரு பெண்கள் பாடசாலையாக விளங்கும் இந்நிறுவனம், கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டு ஆகிய பல துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இதற்கு இங்கு பல ஆண்டு காலம் தன்னலமற்ற சேவை மனப்பாங்குடன் கற்பித்த ஆசிரியர்களும், வழிகாட்டிய அதிபர்களும் காரணகர்த்தாக்களாவர். தொடர்ந்தும் இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி உழைக்கும் ஒரு நிறுவனமாக வளர இறைவனின் அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி.செ.மகாலிங்கம்**
**இளைப்பாறிய மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்மாவட்டம்.**

# Felicitation Message From The Emeritus Vicar General



It is indeed a great joy for me to join in felicitating Rev. Sister Principal, Staff and Students of St. Theresa's Girls' College, on the occasion of their DIAMOND JUBILEE of their College.

I thank and praise God that I am among the living witnesses of this Respected Institution from its foundation. I happened to have been there on location when the Foundation was blessed by the late Rev. father. G.T. Balasundaram OMI, the parish Priest of St. Joseph's Atchuvely in the year 1943 and witnessed the completion of the School building in early 1944, when the Holy Family Sisters arrived to take charge of the School Rev. Sr. Mary Regina, who is yet alive, living at the Holy Family Convent, Madhu Church, was the first Principal. The School and convent were handed over to the Sisters of the Apostolic Carmel who arrived there in December 1947.


The Good Lord has immensely blessed this school, now named St. Theresa's Girls' College. In many ways to be a leading place of learning and formation of Young Ladies as envisaged by its Founder, the late Sir Chevalier Chittampalam Gardiner. His cherished ideals have been well realized to a great extent.

I am happy to greet them and to wish them continued Blessings from the Lord and many more Laurels and lasting fruits for their loving and dedicated labours of the Sisters of the Apostolic Carmel.

**ALL FOR THE GREATER GLORY OF GOD ALONE.**

Rev. Fr. J.P.E. Selvarajah.
Emeritus Vicar General.

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து......



யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் கோட்டத்தில் தனித்துவமாக இயங்கி கொண்டிருக்கும் ஒரே ஒரு பெண்கள் பாடசாலையாகிய புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் வைர விழா சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதற்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை பெரு மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கின்றேன். அச்சுவேலி கிராமத்தின் கல்விக் கண்களை திறந்த பெருமை இக் கல்லூரிக்கு உண்டு. திண்ணைப் பாடசாலையாக இக் கிராமத்தில் உதயமாகி பின் படிப்படியாக தனது வளர்ச்சியின் படிகளாக பங்குப் பாடசாலையாக, திருக்குடும்ப கன்னியர் பாடசாலையாக, கார்மேல் கன்னியர் பாடசாலையாக படிப்படியாக வளர்ந்து அரசாங்கப் பாடசாலையாக இன்று தரம் 1 - 13 வரை - அதில் தரம் 1 - 5 வரை ஆண்களும், பெண்களும் கற்கும் நிறுவனமாக இயங்கிக் கொண்டு இருக்கின்றது.

இக் கல்லூரியின் முதலாவது அதிபராக அருட்சகோதரி மேரி அலகொக் பதவி ஏற்றது முதல் வளர்ச்சிப் பாதையைச் செப்பனிட்ட அதிபர்கள் வரிசையில் இன்று அதிபராக இருக்கும் எனது அன்புக்கும் பெரு மதிப்பிற்கும் உரிய அருட்சகோதரி மரிய றோசாறியோ அவர்கள் காலத்தில் இப்பாடசாலைக்குத் தனித்துவமான பல கட்டமைப்புக்களை அறிமுகம் செய்து அத்துடன் அவருடைய சேவை மனப்பான்மை, ஆளுமை, வழிகாட்டல்திறன் போன்ற நற்பண்புகள் காரணமாக இப்பாடசாலையின் வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்து வருகிறது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியும், அப்பாடசாலை சமூகத்தில் பெற்ற நன்மதிப்பும் கல்வி கற்கின்ற கற்பிக்கின்ற மாணவர்கள் ஆசிரியர்கள் திறமையிலும், அவர்களைத் திறமையாக வழிகாட்டும் அதிபரையும், அப்பாடசாலை சமூகத்தையும் பொறுத்ததாக அமையும். இது புனித தெரேசாள் மகளிர் கல்லூரிக்கு மிகவும் பொருத்தமானது. இப்பாடசாலையில் கல்வி பயின்று அம்மண்ணிற்கே பெருமை தேடிய பல நூற்றுக்கணக்கான கல்விமான்களைத் தந்து இக் கல்லூரி மேலும் பல சிறப்புக்களைத் தனதாக்கி வளர என் மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

மேலும் பல கல்வியாளர்களை உருவாக்கும் நற்பணியில் ஈடுபடவும், ஒழுக்கம், பண்பாடு நிறைந்த சமூகத்தை இக்கிராமத்துக்குத் தருவதுடன் சிறந்த பாரம்பரியங்களையும் தனதாக்கி மேலும் மேலும் வளர்ச்சி பெற்று யாழ் மாவட்டத்தில் புகழ் பூத்த கல்லூரியாக மிளிர என் மனமார்ந்த ஆசிகளையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ. சிவஞானசுந்தரம்,**
**ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**கோப்பாய்.**

# Felicitation Message from the A.C Councillor for Education.



Dear Sisters, Staff and Students,

It is with great joy and full of gratitude that I send you my sincere wishes and hearty congratulations on this auspicious occasion of the 60th Anniversary celebration of our A.C. Sisters' presence in Atchuvely. We have travelled a very long way from the day the first group of sisters Clare and others arrived in Atchuvely. As I trace back the steps of this long journey, I recall the blessings that this institution has received. I thank God for the marvels He had done through all those who have preceeded us and who are now carrying on the flame lighted by our pioneers.

Since 1947 under the inspiration, zeal, prayerful life and experience of our sisters in the past, the convent and school rose in the estimate of the people. It became a much sought institution and soon ranked among the foremost Girls' Colleges in the Jaffna District. As a past students of this school I recall the sweet memories of its glory. Unfortunately, the war situation in the country for the past twenty five to thirty years has diminished the activities of the school in every aspect and reduced it to the present condition.

The greatest glory of the sisters is that in the past years, they have moulded the character of thousands of students to be good citizens imbued with a sense of all that is noble and pure in life. The strength of the nation lies in the purity of its womanhood, and their finest achievement is that those who passed through their hands have been trained to lead virtuous life and to adorn every facet of social life in which their lot is cast. Many past students are Sisters of the Apostolic Carmel today in Sri Lanka. Many others have joined other congregations too. They are working in Sri Lanka and abroad.

Today, despite so many challenges St. Theresa's School stands firm to witness to the values of Christ and to the Charism of our Foundress Mother Veronica, whose 100th death anniversary we remember this year. A history of sixty years in education bears witness to a relentless and dedicated service. I thank God for all that has been accomplished by our sisters, collaborators and well wishers of our sisters and our Institution. I pray that the spirit of our pioneers live on in us and we go ahead with energy and enthusiasm to bring peace to our country, to make Sri Lanka a better place by sharing God's love with everyone we meet. May St. Theresa's College grow from strength to strength in the coming years.

Asking God's blessing on the Principal, Staff, Students past, Present and the school community.

M. Therese Ranee. Ac

Sr.M. Therese Ranee. A.C (Past student)
(Councillor for Education)
Congregation of the Apostolic Carmel.

# Message From Emeritus Principal




It was God's loving plan to bring me to Atchuvely to take over St. Theresa's School in the year 1952. Not longer after my arrival here, I was previleged to meet the Founder Sir Chittampalam Gardiner. He visited the School and Convent every year bringing us all many gifts besides supporting us in every way. His encouragement boosted our efforts to go forward.

His Lordship the late Bishop Emilianuspillai OMI also visited us often to guide and bless us regularly. I also had the fortune of having Rev. Father G.T. Balasundaram the Parish Priest with us when I began my work here. With the support and assistance from all these eminent people our school progressed in every field and was well recognised as one of the leading Insitutions for Girls much sought after and respected. My best teaching years - seventeen in all - were at St. Theresa's. I had the love of the people, the support of a faithful and dedicated band of Teachers and our own Sisters and the Lord blessed our work in every way. Thanks and Glory to God and to His loving mercy.

I am so very happy to send my heartiest Congratulations to Sister Principal, Staff and Students of St. Theresa's on the occasion of their Diamond Jubilee Celebrations. I earnestly pray to God, to Our Lady of Mount Carmel and St. Therese to bless the College and to continue their watch and protection of the College and all its activities. God bless you all.

Sr. Mary Everilda A.C
Emeritus Principal,
(06.01.1952 - 28.01.1970)

# மலர்ந்திருக்கும் யூபிலி மலருக்கு எனது ஆசிச் செய்தி



வைரவிழாக்காணும் எம்மண்ணின் வாசனையாகத் திகழும் **அச்சுநகர் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி** யூபிலி மலருக்கு எம்மிடத்திலிருந்து ஓர் சிறப்புச் செய்தியைத் தாங்கள் கோரி நிற்பதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"ஓர்நல்ல கல்விக்கூடத்தைத் திறப்பது நூறு சிறைச்சாலைகளை மூடுவதற்குச் சமம்." என்ற எமது ஆன்றோரின் வார்த்தைக்கு இணங்க 1943ல் நிறுவப்பட்ட ஓர் சிறிய பாடசாலை இன்று ஓர் 'மகளிர் கல்லூரியாய்' நிமிர்ந்து நிற்பதை எண்ணியும் இதற்காய் வித்திட்டுச் சென்ற மனித நேயநலன்விரும்பிகள் முதல் அதில் நல்ல கனிகளைத் தேட உழைத்த பல அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், அச்சுநகர் தூயசூசைமாமுனிவர் ஆலயபெருமக்கள், அனைவரையும் நன்றி நிறை உள்ளத்தோடு நினைத்துப் பார்க்கும் நேரமிது.

அறுபது ஆண்டுகால தன்சேவையில் இக்கல்லூரி பல மனிதர்களின் உள்ளங்களில், அறிவில், ஆன்மாவில் செய்த ஒருங்கிணைந்த உரமிடும் பணி மென்மேலும் இன்னும் சிறப்போடு ஆழம்பெற ஒவ்வொரு தலைமுறையும் இதற்காய் உழைத்திடல் வேண்டும். காலத்தின் தேவைகளுக்கேற்ப அதேவேளையில் தனது ஆயுளின் பாதிவயதினை போர்கால அடிமை வாழ்வின் சாசனத்திற்குள் தொலைத்துவிட்டதையும் நாம் சோகத்தோடு இங்கு நினைவூட்டியே ஆகவேண்டும். இச்சமகால கல்வி முறைகளை தன்னகத்தே இக்கல்லூரி கொண்டுள்ளமையை எண்ணி மகிழ்ச்சியடைந்து பாராட்டுகின்றேன்.


நம் மண்ணின் வாசனையாகத்திகழும் அரும்பெரும் பொக்கிசத்தை இன்று வாழும் எம் தலைமுறையினரும் பயன்படுத்தி தமது முன்னோர் சமயப்பணியிலும் (சுவாமி ஞானப்பிரகாசியார்), மொழித்துறையிலும் (முருகேசு வாத்தியார் மற்றும் தம்பி முத்துப்புலவர்) வாணிப பொருளாதார துறையிலும் (சேர் சிற்றம்பலம் காடினர்) விவசாயத்துறையிலும் பெரும் மதிப்போடு திகழ்ந்த முன்மாதிரிகளைப் பின்பற்றி இன்றைய சமூகமும் வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

ஒரு யூபிலி ஆண்டு நமக்கு விடுக்கும் அழைப்புக்களான 1) நன்றியின் உவகை, 2) வரலாற்றை மீட்டுப் பார்த்தல், 3) புதிய இலட்சியங்களை வகுத்தல் போன்ற முப்பணிகள் முழுமைபெற்று இக்கல்லூரியால் அச்சுநகர் வாழ் மக்களின் வாழ்வும் வளமும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனின் ஆசீரை வேண்டி நிற்கின்றேன்.

சூசைமாமுனிவரின் பாதுகாவலும், கல்லூரியின் பாதுகாவலியாம் தூயகுழந்தை தெரேசாளின் பரிந்துரையும் நிறைவோடு கிடைக்கப்பெறட்டும்.

**அன்புடன்,**
**அல்பேட் ஜோ. அருள்ராஜா. CMF**
**கிளாரட் அகம்,**
**இல 15, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.**

# வளமுடன் வளர என் ஆசிகள்



எனது ஆரம்பக் கல்வியின் கருவறையாம் புனித தெரேசாள் பாடசாலையின் 60ம் ஆண்டு நிறைவு விழாவில் வாழ்த்துக் கூறுவதில் பேருவகையடைகின்றேன். கல்விக் கூடங்கள், மனித வாழ்வில் குடும்பங்களிலிருந்து நாம் பெற்ற உயர்ந்த விழுமியங்களை வளர்த்தெடுக்கும் சிறந்த விளைநிலமாகும். உயர்ந்த விழுமியங்கள்தான் பண்புள்ள, சிறந்த ஆளுமை கொண்ட நல் மக்களை உருவாக்குகின்றது. புனித தெரேசாள் கல்விக் கூடமானது உயர்ந்த ஆளுமை கொண்ட நல் மக்களை உருவாக்கியது என்று கூறுவதில் பெருமையடைகின்றேன்.

நான் மட்டுமல்ல எனது சகோதரர்கள் இரத்தினகுமார், கிறிஸ்ரிற்ரா, இரத்தினகுமாரி, ஜீவகுமார் ஆகியோரும் இந்தப் பாடசாலையில் உருவாகியவர்களே. எல்லாவற்றிற்கும் மேலாக எல்லோராலும் அன்போடு திரேசா ரீச்சர் என அழைக்கப்பட்ட எனது அன்னை இப்பாடசாலையில் பதின்மூன்று வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து, இப்பாடசாலையின் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்தார் என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நன்நாளில் பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்த அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் அன்புடன் நினைவு கூர்ந்து, நன்றி கூறுகின்றேன். இப்பாடசாலையில் வளரும் சமூகம் புதிய சாதனைகள் படைத்து, நல்விழுமியங்களினூடாக புதிய சமூகமாக வாழ மீண்டும் ஆசிகள் கூறி நிற்கிறேன்.

**அருட்பணி. கி. ஜோ. ஜெயக்குமார்,**
**பணிப்பாளர்,**
**கரீத்தாஸ் - கியூடெக் நிறுவனம்,**
**யாழ்ப்பாணம்.**

# விடிவெள்ளியாகத் திகழும் கல்லூரி அன்னைக்கு எனது ஆசிச் செய்தி



வைரவிழாக் காணும் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரிக் குடும்பத்தின் பெரு மகிழ்ச்சியில் நானும் இணைந்து கொள்கின்றேன்.

நீண்ட 60 வருட மிகச் சிறப்பான கல்விப் பணியில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டி வந்துள்ளது. 1940 களில் சிறிய புளியடிப் பள்ளிக்கூடமாக மொட்டரும்பிய இக்கல்லூரி இன்று கோப்பாய்க் கோட்டத்தில் தனித்தியங்கும் பெண்கள் பாடசாலையாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றது.

பங்குத் திருச்சபையின் எல்லைக்குள் இயங்கும் ஒரு கல்விக்கூடம், அத்திருச்சபையின் விசுவாச வாழ்வில் கணிசமான செல்வாக்கைச் செலுத்தவல்லது. அந்த வகையில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலிப் பங்குத் திருச்சபையின் விசுவாசப் பயணத்தில் சிறப்பான பங்கை ஆற்றி வருகின்றது. கார்மேல் கன்னியரின் வழிநடத்துதலில் ஒப்படைக்கப்பட்டுள்ள இக்கல்லூரி பங்குத் திருச்சபைக்கு நல்கும் ஒத்துழைப்பு பாராட்டுதற்குரியது. அச்சுவேலித் திருச்சபையின் பங்குத் தந்தை என்ற வகையில் இக்கல்லூரியின் எல்லாவித ஒத்துழைப்பிற்கும் சிறப்பாகக் கடமைப்பட்டுள்ளேன்.

கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள இம் மலர் அழகாய் மலர்ந்து நறுமணம் பரப்ப என் அன்பான ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

போரின் வடுக்களைத் தாங்கிச் செல்லும் எம் தமிழ் சமூகத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி ஒரு விடிவெள்ளியாய்த் திகழ இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**அருட்தந்தை ஜே.பீ. ஜோதிநாதன்**
**முன்னாள் பங்குத்தந்தை,**
**புனித சூசையப்பர் ஆலயம்.**
**அச்சுவேலி.**

# MESSAGE FROM FORMER PRINCIPAL



It is with great pleasure and deep gratitude to God, I send you my message of warmest felicitations on this great occasion that, J/ St. Theresa's Girl's College, Atchuvely, celebrates the 60th year of its establishment at the present site. It was through the generosity of Sir (Sittan) Sittampalam Gardiner – son of the soil; that this school was erected on 06.01.1906 and given over to the management of the Holy Family Sisters, who were already functioning at Atchuvely. The school has its roots as Parish School near St. Joseph's Church from 1878.

In answer to the request of the late Bishop Rt. Rev. Dr. Emilianuspillai OMI of Jaffna, the Sisters of the Apostolic Carmelites came to the Diocese of Jaffna, and took charge of the school and the Convent of Our Lady of Lanka in December 1947.

Sr. M. Alocoque of grateful memory was the first A.C Principal who faced the challenges of pioneer days and developed the school. The school was a junior School. Sr. Sabina followed her steps. Sr. M. Everilda came with full of zeal enthusiasm, and raised the standard of the school to senior grade. Besides academic studies social moral and Religious values were imparted with the aid of competitions to bring out the best in every student. The school began to shine and got its prestige place in the map of Jaffna Peninsula, as some of you will remember was during her tenure of office.

The school became a fertile field where future Apostolic Carmelites sprouted and bloomed forth and are now continuing to spread the message of God's love everywhere.

The school continued to grow in every way under the management of A.C Principals and was raised to Maha Vidyalayam or College in 1981 by the untiring efforts of the late Sr. Cecilia Mary A.C This speedy ascent came to a halt due to civil disturbances and displacement of families far and wide. But it rose from exile and displacement from handful of 70 students to 700, with all its former glory and fame restored. Thanks to the Principals, Staff, Students and people of good will who rallied round to build up again inspite of great difficulties and draw backs.

Finally, I congratulate the Present Principal Sr. Maria Rosario A.C, Staff students and well wishers who had taken this difficult task of publishing memorial on Diamond Jubilee year as a treasure of History for future generation.

I wish and pray that they may rise from strength to strength in years to come and spread the sweet fragrance of its motto – Pure and True.

May God bless you and your Palion Saint Theresa be a model to you.

*Sr. M. Ethelviva A.C.*
*Former Principal*
*(05.03.1990 - 12.07.2000)*

# மணிவிழா காணும் சிறுமலருக்கு வாழ்த்துச் செய்தி



வைரவிழாவைக் கொண்டாடும் அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இக்காலங்களில் இதனது வளர்ச்சியானது பல பரிணாமங்களைக் கொண்டதாக விளங்குகிறது.

ஒரு சமூகத்தின் அறிவு மேம்பாடு, சிந்தனைவிருத்தி, பண்பாட்டுச்செழுமை, ஒழுக்க விழுமியங்கள், கற்பித்தலிலும், இணைப்பாடச் செயற்பாடுகளிலும் இக்கல்லூரி ஆற்றிய – ஆற்றும் பங்களிப்பானது மிகவும் மகத்தானது.

இச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்காக ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றிய என் பணிவாழ்வை எண்ணிப் பெருமிதம் அடைகின்றேன்.

தொடக்கமுதல் இன்றுவரை தம்மை அர்ச்சனைப் பூக்களாக்கி இதன் வளர்ச்சிக்காக சேவையாற்றிய – ஆற்றும், அதிபர், ஆசிரியர், பெற்றோர், சமூகம் என்பன காரணமாக இருந்துள்ளன.

இக் கல்லூரி யாழ் மாவட்டத்தின் கல்வி. பண்பாடு என்பவற்றின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் பங்களிப்பினை ஆற்ற இறையருளைப் பிரார்த்தித்து என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அருட்சகோதரி. ஆ. ஸ்ரனிஸ்லஸ்மேரி**
**முன்னாள் அதிபர்.**

# வைரவிழா நன்நாளிலே



எண்ணும் எழுத்தும் உவந்தளித்து எட்டுத்திக்கும் அறிவொளி வீசி, புகழ் பரப்பி, ஏற்றம் கொண்ட இளைய சமூகத்தை ஏற்றியே நிற்கும் கல்விச்சாலை யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரித் தாய், வைரவிழா காணும் இந்நன்நாளிலே ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகையும் பெருமிதமும் அடைகின்றேன்.


இக்கல்லூரித்தாய் நடந்து வந்த பாதைகளை சற்றே திரும்பிப் பார்த்து பழைய பசுமை நினைவுகளை மீட்டுப் பார்க்கும் இவ் வேளையிலே இயற்கை எழில் கொஞ்சும் அச்சுவேலி ஊரிலே பெருந்தகை சேர். சிற்றம்பலம் காடினர் உவந்தளித்த தோட்டத்திலே 1943ம் ஆண்டிலே இவள் மலர்ந்தாள். 1943 – 1947 வரையான ஐந்தாண்டுகளும் திருக்குடும்ப கன்னியர் பேணி வளர்த்து அருட்சகோதரி அலகொக் தலைமையிலான கார்மேல்சபை அருட்சகோதரிகளிடம் உவந்தளித்தனர். இவ் அருட்சகோதரிகளின் கைகளில் தவழ்ந்து வளர்ந்து இன்று க. பொ.த (உயர்தரம்) வரை அறிவொளி பரப்பி நிமிர்ந்து நிற்கின்றாள்.

அருட்சகோதரிகளின் அயரா உழைப்பால் அறிவொளி பரப்பி, இறையருள் விளம்பி, நிமிர்ந்து நின்ற இக்கல்லூரித்தாய் கால ஓட்டத்திலே போர் சூறாவளியில் சிக்கி தவித்து பல இடர்களை அனுபவித்தபோதும் புதுப் பொலிவு பெற்று 60வது அகவையில் காலடி எடுத்து வைக்கிறாள்.

பல கல்விமான்களையும், நீதிமான்களையும் எங்கள் சமூகத்திற்கு பிரசவித்து புத்துணர்வுடன் வீறு கொண்டு அருணோதயம் போல் எழுந்து, இளங்கிளைபோல் தழைத்து அறிவொளிவீசி பிரகாசிக்க இறையருள் வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

**அருட்சகோதரி ஆன்மாறி அ. கா**
**மடத்து தலைவி,**
**லங்கா மாதா மடம் அச்சுவேலி.**

# அயற்பாடசாலை அதிபரின் உள்ளத்திலிருந்து....



"வீடுகள் தோறும் கலைகளின் விளக்கம் வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி...." எனப் புரட்சிக் கவிஞர் பாரதி தனது கவிதையில் குறிப்பிடுவது போல ஒரு ஊருக்கு – கிராமத்துக்குப் பெருமை சேர்ப்பது பள்ளிகளே. அச்சுவேலிக் கிராமத்தின் பெருமைக்கு சான்றாய் விளங்கும் யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தனது 60ஆவது அகவையை பெருமையோடு கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற வைரவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை அன்றிலிருந்து இன்றுவரை புரிந்துணர்வுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்து விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குள்ள சகோதர பாடசாலையாக விளங்கி வருகின்றது. ஒரு கிராமத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று பேரோடும், புகழோடும் தலைநிமிர்ந்து நிற்பது அக்கிராமத்துக்கு பெருமைசேர்க்கும் விடயமாகும். இத்தகைய பெண்கள் கல்லூரிகளால் பெருமைபெற்ற பல ஊர்களை நாம் அறிகின்றோம். அந்த வகையில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியும் அச்சுவேலிக் கிராமத்துக்கு பெருமை சேர்க்கும், அழகு சேர்க்கும் ஒரு கல்லூரியாக விளங்குவதில் சந்தேகம் இல்லை.

இதற்கு மேலும் ஒருபடி நோக்கிச் சென்றால் இக்கிராமத்தின் பெண்கள் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிக் கொண்டிருப்பது இக்கல்லூரியே என்பதில் சந்தேகம் இல்லை. எமது சமூகத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கு பல தடைகள் இருந்தன. அத்தகைய தடைகளை

*"ஏட்டைப் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்*
*வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை*
*மனிதர் தலை கவிழ்ந்தார"*

எனப் பாரதி தனது பெண்கள் விடுதலைக் கும்மியில் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. பெண்கள் கல்வி பயில்வதற்கு இருந்த தடை எத்தகையது என்பதை பாரதியின் பாடலிலிருந்து நாம் அறிகின்றோம். அத்தகைய ஓர் குறுகிய சிந்தனைக்கு எதிர்நீச்சல் போட்டே அச்சுவேலியில் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

ஏழைகளுக்கு எட்டாக் கனியாக இருந்த கல்வியை நிறுவனமயமாக்கி – பாடசாலை முறைமை அடிநிலை மக்களும் கல்வியைப் பெறவும் சமூகத்தில் முன்னேறவும் வழிசமைத்தவர்கள் கிறீஸ்தவ மிசநெறிமார்களே. கல்விக்கு அவர்கள் ஆற்றிய பணி பல பிரதேசங்களை பெருவளர்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளமையைக் காணலாம்.

ஒரு பின்னணியிலேயே புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் கல்விப்பணியையும் நாம் நோக்கவேண்டும். அச்சுவேலிக் கிராமத்தின் சமூக பொருளாதார மாற்றத்துக்கு இக்கல்லூரியின் பங்களிப்பு அளப்பரியது. எழுத்தறிவுள்ள பெண்கள் நிறைந்த கிராமம் அச்சுவேலி என்ற நிலையை எய்துவதற்கு இக்கல்லூரியின் கல்விப்பணி பெரும் பங்காற்றியிருக்கின்றது. இப்பிரதேசப் பெண்களின் கல்வி அறிவு மேம்பாட்டுக்கு மட்டுமன்றி நாடு முழுவதிலுமிருந்தும் பெண்பிள்ளைகள் இங்கு வந்து தங்கியிருந்து கல்விகற்றுச் செல்கின்றனர். இதன் மூலம் இக்கல்லூரி தனது கல்விப்பணியின் இலக்கை பரந்தளவில் பேணி வருகின்றது.

60 ஆண்டுகள் கல்விச் சேவை என்பது மிகப்பெரிய காலமாகும். இக்காலப் பகுதியில் கல்லூரி அளப்பெரும் சாதனைகளை ஈட்டியுள்ளது. அதன் சாதனைகளும், புகழும், பெருமையும் பெருக வாழ்த்துகின்றேன்.

**திரு. வே. பாலசுப்பிரமணியம்**
**அதிபர்,**
**(யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)**

# உப அதிபரின் ஆசிச் செய்தி



ஈழமணித் திருநாட்டில் கோப்பாய்க் கோட்டத்தில் தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்றுள்ள யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அறுபதாவது அகவை நிறைவில் வைர விழாவைக் கொண்டாடுவதற்கு கருணை கூர்ந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.


வைரவிழாக் காண வீறு நடைபோட்டு காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் மாணவர் ஆக்கங்கள் நிரம்பிய மலரும் மணம் பரப்புவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆக்கங்களை ஒன்றுதிரட்டி இம்மலருக்கு உயிரூட்டி மலரச் செய்த எமது கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ அ.கா அவர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளையும் ஆசியையும் கூறி நிற்கின்றேன்.

சுமார் இருபது வருடங்கள் இக்கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது கல்லூரியின் மகுடவாசகமான உண்மையும், தூய்மையும் மாணவர்கள் மத்தியில் இன்றும் கடைப்பிடிக்கப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''கல்வியின் அறிவும், அறிவின் பயன் ஒழுக்கமும் ஆம்'' என்ற தமிழ் மக்களின் மரபு வழியான கருத்தை எமது முன்னோர் விட்டுச் சென்றுள்ளனர். இக்கருத்து எமது கல்லூரியில் என்றும் நிலைத்திருக்க வாழ்த்தி இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**செல்வி. இராஜமலர். இராஜதுரை**
**உப அதிபர்.**

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் சிந்தையிலிருந்து.........



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தன் பணிவாழ்வில் ஆறு தசாப்தங்களைக் கடந்து வந்து மணிவிழா ஆண்டில் கால்பதித்து நிற்கும் இவ்வேளையில் கடந்தகால சாதனைகளுக்காகவும், இலக்கு நோக்கிய எதிர்கால பயணத்தில் வீறுநடை போடவும் வாழ்த்துக்களைக் கூறி நிற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இலங்கையின் கல்வி வரலாற்று வளர்ச்சிப் போக்கில் போர்த்துக்கேயர் காலம் முதலாக கத்தோலிக்கத் திருச்சபையின் பங்களிப்பு அளப்பரியதாகும். அன்று ஆன்மீகமும், கல்வியும் இணைந்து போதிக்கும் வகையில் ஆலயச் சூழலிலேயே பாடசாலைகள் நாடெங்கும் நிறுவப்பட்டன. அந்த வகையில் கத்தோலிக்க பாரம்பரியம் மிக்க அச்சுநகர்ப்பகுதியில் புனித சூசையப்பர் ஆலயச் சூழலில் ஆரம்பகாலப் பாடசாலையும் அமைந்திருந்தது எனவும், புளியடிப் பள்ளிக்கூடம் திண்ணைப் பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட இவ் ஆரம்பப் பாடசாலையே பின்னாளில் இன்றைய இடத்தில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியாகப் பரிணமித்தது எனவும் அறிய முடிகின்றது.

இப்பிரதேசத்தின் மைந்தனும், முன்னாள் செனட்டரும், பிரபல தொழிலதிபராக விளங்கியவருமான சேர். சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் அவர்களின் பரோபகாரச் சிந்தையும், சமுதாய நோக்கும், தூரநோக்குள்ள பார்வையும் ஒன்றிணைந்து இப்பிரதேசத்தில் பிரமாண்டமான ஆலயத்தை நிர்மாணிக்கவும், வைத்தியசாலையைக் கட்டியெழுப்பவும் காரணமாக அமைந்தது போலவே அழியாச் செல்வத்தை அள்ளிவழங்கும் இக்கல்லூரியையும் ஸ்தாபிப்பதற்கு அடித்தளமாக அமைந்தது.

1946 ஜனவரி 06 ஆந்திகதி இக்கல்லூரியை நிர்மாணித்த சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் அவர்கள் கல்லூரியின் கல்விப் பணி சிறக்கவும், ஆன்மீகப் பணியாற்றவுமென கார்மேல் சபை அருட்கன்னியர்கள் இங்கு வரவழைக்கப்படவும், "லங்காமாதா" இல்லத்தை பாடசாலையருகே நிறுவவும் காரணமாக இருந்தாரெனின் எதிர்கால சமூகத்தின் முன்னேற்றம் கருதிய அவரது பணி அளப்பரியதும் என்றும் நன்றியோடு நினைவு கூரப்படவேண்டியதுமாகும்.

கோப்பாய் கல்விப்பிரதேசத்தில் ஒரேயொரு பெண்கள் பாடசாலையாக தற்போது விளங்கும் இக்கல்லூரி அதன் ஆரம்பகாலம் முதலாக சாதனைத் தடம்பதிக்கும் பாடசாலையாக விளங்கி வந்திருக்கின்றது என்றால் மிகையாகாது. கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, தலைமைத்துவம், கலை, இலக்கியம், ஆன்மீகம் என பல்துறைசார் ஆற்றல்களுக்கு முறையான அடித்தளமிட்டு வளர்த்தெடுத்து பல்வேறு சாதனையாளர்களை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்குண்டு. இப்பிரதேச மாணவர்கள் மாத்திரமன்றி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவு மாணவிகள் வந்து விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்று வந்தமை இக் கல்லூரியின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. காலத்துக்குக் காலம் பணியாற்றிய அருட்கன்னியர்களின் தன்னலமற்ற சேவையும், ஆசிரியர்களின் குறைவற்ற ஒத்துழைப்பும் இக்கல்லூரியின் கடந்தகால உயர்வுக்கு வழிவகுத்தது எனலாம்.

எண்பதுகளின் பிற்பகுதி முதலாக தொண்ணூறுகளின் பிற்பகுதிவரை இப்பிரதேசத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் பிரதேசத்தின் பொருளாதாரத்தைச் சிதைத்தது மாத்திரமன்றி பெரும்பாலானோரின் நிரந்தரமான வெளியேற்றத்துக்கும் காரணமாக அமைந்து விட்டமை கல்லூரியின் செயற்பாட்டிலும், தனித்துவத்திலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திவிட்டது. உயர் பாதுகாப்புப் பிரதேசத்தை அண்டிய சூழலில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து நின்றபோதும் கல்லூரியின் தனித்துவத்தை முற்றாகச் சிதையவிடாமல் கட்டிக்காத்து வந்த பெருமைக்குரியவர்கள் அருட்கன்னியர்களும், அவர்களுக்குத் துணைநின்ற ஆசிரியர்களுமாவர். அவர்களது அர்ப்பணிப்பான சேவை இவ்வேளையில் நன்றியோடு உணரப்படல் வேண்டும்.

மேலும் நெருக்கடி மிகுந்த இன்றைய காலகட்டத்திலும் இக்கல்லூரி தன்சிறப்பான பணியினை முன்னெடுத்து வருவது பாராட்டுக்குரியதாகும். இக்காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்துவரும் அதிபர், ஆசிரியர்களை உளமார வாழ்த்துகின்றேன். எதிர்காலத்தில் இக்கல்லூரி மேலும் புதுப்பொலிவு பெற்றுச் செயற்பட வேண்டும். போதிய வகுப்பறை வசதிகள், நூலக வசதிகள், புதிய கட்டிடத்தை அமைப்பதற்கான இடவசதி ஆகிய இன்றைய அவசிய தேவைகள் எதிர்காலத்தில் நிறைவுசெய்யப்படுவதுடன் இக்கல்லூரி பணியால் உயர்ந்து சமுதாயத்துக்கு சீரிய நெறியினைப் புகட்டும் பல்கலைக்கூடமாகத் திகழ வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு.யோ.அ. தவநாயகம்,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

# Editorial

*The year 2007 marks the historic sixtieth jubilee year of St. Theresa's Girls' College, Atchuvely. We extend our warm greetings to all on the occasion of the Daimond Anniversary of our most beloved school, St. Theresa's Girls College. It has jumped over many hurdles through sixty long years from a small foundation, by a few Catholic Missionarles in 1947. Now it has grown into a full - pledged Girl's college. It reminds us and intrigues us to recall with pride, gratitude and admiration those pioneers and stalwarts who founded the school and laboured with dedication to make it a centre of excellence. St. Theresa's stands today as a monument for women Education and culture proudly, the one and only Girls' College in Kopay Division.*

*In a jubilee year it is customary to reminisce on the past and the significant deeds of those stalwarts and we fondly remember those who sacrificed their native land, loved ones and homes to make this college what it is today. Our devoted principals and teachers gave a dedicated education full of spiritual and moral values to the students. No doubt most of our students who had walked out of St. Theresa's hold high positions not only in Sri Lanka but also in many countries as doctors, engineers, lowyers, accountants, teachers and above all good house wives, religious and celergy people too.*

*As we enjoy the Diamond jubilee Celebration we remember all the teachers, past students, parents and well - wishers with a deep sense of gratitude who generously contributed to this souvenir a great success and fruitful. Today we are releasing this magazine with proud which incorporates the present and the past, highlighting the efficiency, gaining momentum through the years, displaying a rich talent and dedication of the teachers who taught.*

*We are confident, this Rich Theresian Flavour will spread its fresh fragrance far and wide to refresh the memories, love and loyalty to the Alma mater.*

# *Editorial Board*

01. Rev. Sr. Maria Rosario A.C

02. Miss. Rajamalar Rajadurai

03. Miss. Yogeswary Kasippillai

04. Mrs. N. Gnanalingam

05. Mr. S. Vinayagampillai

06. Mr. J. A. Thavanayagam

07. Mrs. T.Parimellalagapillai

08. Mrs. S. Sandrakumar

09. Mr. K. Sutharsan

10. Mrs. T. Ganesalingam

11. Mr.P.Vakeesan

12. Miss. Judina Subagini Aloysius Paul

Designed & Printed By

Lanka Publishing House

&

St. Joseph's Catholic Press

# Jubillee Song



Our hearts are filld with Love
On this our Jubilee day
With joy we come we gather round
On this great jubilee day

Ch :-

I

Happy Happy Jubilee
Diamond Jubilee of our school
Happy Jubilee and God bless you
On this great jubilee day (2)

II

This is the special day
for which we've waited long
And now its come, our hearts are glad,
On this great Jubilee day

III

May His peace love joy
And His rich Blessings from above
May He enfold us
In His love on this great Jubilee day

IV

Gratefully we repeat
All our joy complete
Blessings ever on us fall
May His sprit guide us and lead us
- on our way.



# *Principals Of St. Theresa's Girls' College, Atchuvely*



Sr. Regina H.F.C
1942 - Dec 1946



Sr. Mary Alacoque A.C
07.01.1947 - 10.01.1949



Sr. Mary Sabina A.C
11.01.1949 - 05.01.1952



Sr. Mary Everilda A.C
06.01.1952 - 28. 01.1970



Sr. Stanislas Mary A.C
29.01.1970 - 31.12.1974



Sr. Cecelia Mary A.C
01.01.1975 - 01.02. 1981



Sr. Mary Fidelina A.C
02.02.1981 - 17.10.1986



Sr. Mary Calistra A.C
18.10.1986 - 29.03.1990



Sr. Mary Ethelviva A.C
05.03.1990 - 12.07.2000



Sr. Maria Rosario A.C
13.07.2000 - To Date

## 01. Sr. Regina H.F.C

புதிதாய் எம் பாடசாலை மலர்ந்த போதினில்
மதியென இருளை நீக்கிய அன்னை
நதியென வளைந்து நாளும் நாம் உயர
நன்றே இன்றும் வாழ்ந்திடும் மேன்மை

## 02. Sr. Mary Alacoque A.C

கல்வி வழி எங்கள் கால்கள் நடக்க
முதல் அதிபராய் முன்னின்ற தலைவி
நல்ல வழி நாங்கள் நடந்தே உயர
நற்பொருளாய் வாழ்ந்த எங்களின் முதல்வி.

## 03. Sr. Mary Sabina A.C

படிப்படியாய் எங்கள் சாலை வளர
பகல் இரவு உழைத்த எங்கள் அன்னை
துடிப்புடன் கல்வியும் கலைகளும் பயில
தளராத எம்மை ஆக்கிய வாண்மை.

## 04. Sr. Mary Everilda A.C

எட்டாண்டு காலம் எம்மை ஆண்டு
அன்பும், கவரும் தோற்றமும் கொண்டு
பட்டாம் பூச்சிகள் போலவே
பாரில் நடந்தோம் நல் ஒளி கண்டு.

## 05. Sr. Stanislas Mary A.C

ஆசானாய் இருந்து அதிபராய் உயர்ந்து
ஆண்டவன் வடிவை மாணவர் உருவில்
நேசமாய்க் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து
நித்தமும் எம்மை நினைக்கும் அன்னை.

## 06. Sr. Cecelia Mary A.C

மாணவர் உயர்ச்சி மட்டுமல்லாது
மாடிகள் உயர மனங்கொண்டவர்
கோணலானவை நேராகும் வண்ணம்
கல்வியின் கொள்கையில் உயரிய எண்ணம்.

## 07. Sr. Mary Fidelina A.C

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என
கனிந்திடும் அன்பையும் கடும் கண்டிப்பையும்
உடமையாய்க் கொண்ட உயர்ந்த உள்ளம்
உன்னதமாய்க் கல்வி ஒளியின் வெள்ளம்

## 08. Sr. Mary Calistra A.C

அமைதியை ஆடையாய் அணிந்து தினம்
அன்புடன் மாணவர் அறிவை வளர்த்து
இமைமூடாதுழைத்து இன்புடன் எம்மை
இறைவனில் வளர்த்திட நினைத்த அன்னை.

## 09. Sr. Mary Ethelviva A.C

இடம்பெயர்வு இடர்கள் இன்னல்கள் என
இதயம் தகர்ந்த வேளையில் கூட
கடமையில் தவறாது கல்வியைத் தந்த
கண்களும் சிரிக்கும் கனிவாம் அன்னை

## 10. Sr. Maria Rosario A.c

உற்சாக உள்ளம் உன்னத எண்ணம்
உணர்விலும் மாணவர் உயர்ச்சியின் திண்ணம்
வெற்றிகள் கண்டிங்கு வாழ்ந்திட மாணவர்
வழியில் ஒளிர்ந்திங்கு சுடராகும் அன்னை

மணிவிழாக் கண்டிங்கு மாண்புறும் இந்நாளில்
மாணவர் நாம் எல்லாம் மண்ணில் உயர்வுற
பணி செய்து மகிழ்வுற்ற எம் மாதைகள் இவர்களை
பண்புடன் வாழ்த்துகிறோம் வாழ்க! வாழிய! நீவிர்.

பழைய மாணவிகள்.

# YEARS AT ST. THERESA

A Jubilee is a celebration ,a day to remember ,a mile stone in the history of ST.THERESA'S GIRLS' COLLEGE, ATCHUVELY. ST Theresa ,which has completed 60 years of labour and loving service. It is an opportunity to express our deep sentiments and gratitude to Almighty God for all that has been and with the psalmist we say "It is good to give thanks to the Lord to make music to your name the most high".

Sixty years ago one elderly thinker of Atchuvely, namely Sir Gardiner Chittampalam had a vision of a bright future for the people of Atchuvely. He realized the importance and the need of English education for girls. As a result ST. Theresa was established. Along with the school a convent was also established in order to enhance the English Education.

The school had to face a number of challenges and difficulties. But the work , which was begun under the guidance of the Almighty and the watchful eyes of the Sisters, was able to spread and grow into a mighty tree bearing everlasting fruits. Today we are proud to say that our school is recognized as one of the best and the students are in top in their life all over the world. At present we have 650 students and 30 staff members.


We are celebrating the Diamond Jubilee on the 1st of October and we thank the Almighty for having led the school to achieve its sixty years mile stone. We thank our Principals for their splendid and sacrificing service for us to achieve excellence in academics sports and other co-curricular activities. The credit goes to the teachers, who left no stone unturned working for the betterment of the students. Very special thanks to the Sisters of the Convent, the Parish Priests and the School Development Societies who are truly the pillars of the institution.

I am proud to say that all work together as one family under the patronage of our Principal with the motto "Pure and True" May the God inspire our little girls to follow the way of loving God and others ,and thus reach the heights of victory and excel in every way. I conclude with the words of a great politician, who once said to the citizens of USA; "Ask not what the country has done for you rather ask yourself, what you have done for the country."

May the DIAMOND KEY open the CENTINARY DOOR in the years to come.

*Miss.Mary Agitha*
*Mariyathas*
*(Head Prefect 2007)*

# BIRTH AND GROWTH OF ST.THERESA'S



Let us praise and glorify the Good Lord, who in his merciful love and loving providence, re-planted the school of St. Joseph's Parish Atchuvely to its present location at Chankanai road.

It was the same Lord who has inspired his servant, the son of the soil, Sir Chevalier Chittampalam Abraham Gardinar to have the school built in the new location providing ample place for the school and convent ,that he had planned to build there.

Thanks to the good Sisters of the Holy Family of bordered who had arrived in the year 1944 and started the teaching there.

In 1947 December, they very graciously handed over the school and convent as arranged by the Bishop and their superiors to the sisters of the Apostolic Carmel.


Chev. Gardiner who had personally witnessed the sisters of these Apostolic Carmel managing Girls schools and colleges in Mangalore and other parts of India very much desired to have these same sisters to take over the new school at Atchuvely for the benefit of the girls of Atchuvely.

Through the assistance and goodwill of his friends and classmates, the very Revd.Father Jerome Emilianus then Vicar General, his Lordship Rt.Revd.Dr.J.Alfred Guyomar OMI was requested to invite the sisters of the Apostolic Carmel to work in the Jaffna Diocese. These sisters were already working with much success in these Trincomalee and Baticalo Diocese .It was also the great interest support and enthusiasm of the Parish priest of St.Joseph's Atchuvely the late Revd father GT.Balasundaram OMI, all arrangements were finalised to receive the apostolic Carmel sisters to work in his Parish.

On the 27th of December 1947, under the leadership of the Very.Revd. Mother .Mary Innocence ,the assistant general of the Carmelite sisters arrived at Atchuvely and was very warmly welcomed by the Parish priest and people of St.Joseph's Parish Atchuvely . These first new superior Revd.Sister.Mary.Clare was also among these arrivals to start their new mission.

The school was named St. Theresa's Girls' school and the convent ,Convent of Our Lady of Lanka. The sisters were housed temporarily in these adjoining compound belonging to Mr. B.B. Joseph that was earlier occupied by these holy Family Sisters while the new convent was being constructed. Soon after the convent complex had been completed, the sisters moved in to their new abode.

St,Theresa's school was headed by the new Principal Revd.Sister Mary Alocoque, AC and the School progressed very rapidly, from a Primary School it was raised to be the Secondary School. The School recorded phenomenal growth and development in a short



space of time, with the hard work and dedication of the Sisters who succeeded as Principals, the number of the students also grew fast as many children from other districts like Mannar, Thalayaddy and other places in the diocese joined as Boarders when the Hostel for them was started. The School achieved greatness year by year. It was during the long period of Rev.Sister Mary Everilda who headed the School it reached its peak performance in studies, sports and all co-curricular activities.

Sixty Diamond Years have gone bye by the school that had been renamed St,Theresas's Girls' College, It had its days of crisis during the pro-longed war. Three times it was displaced during different Army operations. Atchuvely being located next the Base Main camp of Armed Forces at Palaly, the entire village as well as the school and convent suffered much and were badly damaged loosing many hundreds of students who left the school and hostel seeking safety and security. In spite of all these set backs and calamities the College survived by God's unfailing help and slowly recovered its former place, and lost image.


The College has developed in many ways. It has now a Science Laboratory, Library Home Science Unit, Computer study facilities. Thanks due to the many Benefactors who have donated these to the College.

To me personally, it had been a privilege to have witnessed the growth and progress of the 60years.I was a student of the Minior Seminary who lived just opposite the new location of the school and Convent when the school was being built. I visited daily the work site and watched its growth and witnessed the transfer of the old R.C.T.M School where I had begun my Schooling, transferred to the new site under the care of the Holy Family Sisters in 1944. When the Sisters of the Apostolic Carmel arrived in December 1947, at the Parish Church, I was present among the people to receive them as an alter boy. On the next morning, the 28th,December was the feast of Holy Innocence and it was also the Pat ronal Feast of the Asst. General Mother Mary Innocence. Father Bala offered Holy Mass at the Convent and I was the server. Thus began my friendship and long association with the Sisters of the Apostolic Carmel.

One remarkable consequence of the arrival of the Sisters to the School and Convent and the outpouring of the Holy Sprit inspiring many young girls to join the Congregation of the Apostolic Carmel. both from the village as well from other places including some from the Hostel managed by the Sisters. Even some of the teachers who were on their Staff joined them. Let us Praise and thank God and our Lady of Mt.Carmel for the special love and care lavished on them.

His Lordship the late Bishop Jerome Emilianus Pillai who took over the reign of the diocese soon after the Sisters arrived here gave them full support and had been visiting the

Convent very often encouraging and guiding them. They owe him a very special debt of gratitude.



We must also remember Mr.Soosaipillai Ratnanather who is another son of soiland benefactor of the school and convent. He too contributed to the growth and development of both the Convent and school. He took special interest in helping the sisters Farm ANPAHAM which unfortunately had to be abandoned as it is within the high security zone and the inability for the sisters to benefit by it.Many years have made it veritable jungle. May the Good Lord reward him fittingly for his generous sharing in many ways.

We have to keep the memory of Rev.Father G.T.Balasundaram who received the Sisters when they arrived and cared for them lovingly and continued to show interest even after he left the Parish.

He did much for the Parish thro' the assistance of Chev.Gardinar.A housing Scheme was scared and completed for the poor relations of Chev,Gardiner.

A Rural Hospital was built and handed over to the Health Dept of the Govt, location chosen by Father Bala in a central place where all the people could have easy access. This has now developed into a periphery unit hospital with many facilities.

The youth were provided with night classes in English headed by Mr.Anthony St.George.This did not continue after Father Bala. All these were possible through the Generosity and love for his people by the Chevalier.May the Loving father reward him amply.

Let all these be the Glory of God alone .In his foresightedness Chev Gardiner created the CHITTAMPALAM GARDINER TRUST in order to keep assisting for ever these Institutions he had helped to be established. The Parish,the convent our school the Rosarian Sisters and even the Rural hospital chapel. Thanks to his kindness we all receive his continued assistance.

*Rev. Fr. Selvarajah.*

# Our Academic Staff - 2007

01. Rev. Sr. Maria Rosario A.C
02. Miss. R. Rajamalar
03. Mrs. N. Gnanalingam
04. Miss. K. Yogeswary
05. Mr. S. Vinayagampillai
06. Mrs. M. Srishkandarajah
07. Mrs. N. Gunarajah
08. Mrs. S. Shandrakumar
09. Mrs. R. Thiruketheeswaran
10. Mrs. B. Karunananthan
11. Mrs. I. Kumarakuruparan
12. Mr. K. Sutharsan
13. Mrs. S. Maheswarathasan
14. Mrs. T. Ganesalingam
15. Mrs. T. Parimelalakapillai
16. Mrs. K. Kanagalingam
17. Miss. K. Rajithahari
18. Mr. P. Vakeesan
19. Mrs. A. Baskaran
20. Rev.Sr. Mary Premala A.C
21. Miss. S. Manoja
22. Miss. A. Cawsala
23. Miss. K. Dushyanthy
24. Mrs. P. Ratnabalan
25. Mrs. Y. Thavapakkiyarajah
26. Mrs. N. Kugathasan
27. Mrs. V. Gunathevan
28. Mrs. K. Senthilvel
29. Miss.S.Rangala
30. Miss. Pushparani Asservatham at Present she is at the Kotagala Training College.

**Non Staff**

01. Mrs. J. Asokan
02. Mr. T.L. Ensilirukman

# The Administrative Sector



The Principal - Rev. Sr. Maria Rosario AC



Academic Staff



Supportive Staff



S. D. S. Committee Members



P. S. A. Committee Member



Non Academic Staff

**STUDENTS ASSOCIATION**




◄ **A/L UNION**



◄ **TAMIL SOCIAL UNION**

**ENGLISH UNION** ►



**CHRISTIAN UNION** ►





◄ **HINDU ASSOCIATION**



◄ **SCIENCE MATHS UNION**

**AESTHETIC & TECHNOLOGY UNION** ►



**HEALTH ASSOCIATION** ►





◄ **FRIENDLY ASSOCIATION**

# நடராஜ வடிவம் உணர்த்தும் சமயம் தத்துவம், கலை – ஒரு நோக்கு



செல்வி. யோகேஸ்வரி காசிப்பிள்ளை
(B.A Dip in Edu.)

"அங்கிங்எனாதபடி எங்கும் நிறைந்திருக்கும்" பரம்பொருளை உருவத் திருமேனியில் இருத்தி வழிபாடு செய்யுமிடம் திருக்கோவில் எனலாம். திருக்கோவில் மரபு சைவ சமயத்துடன் பின்னிப் பிணைந்ததாகவே இன்று வரை முக்கியத்துவம் பெற்றுள்ளது. " ஆலயம் தொழுவது சாலவும் நன்று." "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் ஆன்றோர் வாக்கு இதற்கு தக்க சான்று ஆலயங்களில் ஆராதிக்கப்படுகின்ற இறைவன் அறிஞர்க்கு மட்டுமே அறிய உகந்த காட்சிக்கு அப்பாற்பட்ட அருவ நிலை, சகலர் பொருட்டு அவர்களுக்காக உருவெடுத்த மூர்த்த நிலை ஆகிய உருவ நிலை, அருவமோ உருவமோ அற்றதாகக் காணப்படும் அருவுருவ நிலை போன்ற முறைமைகளில் உயர்நிலை பெறுகின்றார். இத்தகைய இறைவனின் அன்பு ஆன்மாக்களுக்கு அருள்புரியும் நோக்கில் மலர்ந்து, மணம் பரப்பிய சம்பவங்களாக அவர் நடத்திய திருவிளையாடல்கள் அமைந்திருந்ததை சைவ இலக்கியங்களில் சிறப்புடையதும் அறுவகை சமயத்தினதும், திருவுருவ வழிபாட்டினதும் தோற்றத்திற்கு காரணமாக அமைந்ததுமான புராணங்கள் சுட்டி நிற்கின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற திருவுருவ வழிபாடு கற்களும் முட்களுமாகக் காணப்பட்ட சீர்கேடுகளை நீக்கி இந்துமதத்தைப் பண்படுத்தி வந்துள்ளன.

"ஆதியும் அந்தமும் அற்ற அரும்பெரும் சோதி"யாக, காட்சிக்கு எழியனாக கற்பனைக்கு அப்பாற்பட்டவனாக, பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற சிவபெருமான் திருவுருவ வழிபாட்டில் பல நிலைகளில் வைத்து வணங்கப்பெறுகின்றார். இதனை " விக்கிர இயல்பு" என்ற தலைப்பில் சிவாகமங்கள் எடுத்தியம்புகின்றன. விக்கிரக இயல்பு ஊடாக சிவாகமங்கள் சிவனது உருவத்தை விக்கிரகப்படுத்துகின்ற முறையையும், அவ் விக்கிரகம் அமையவேண்டிய அங்க பாவங்களையும், அவை அமைக்கப்பட வேண்டிய காலங்களையும் தந்ததோடு மட்டுமன்றி அதன் சிறப்பு நிலைப்பாடுகளையும் குறிப்பிட்டிருக்கக் காண்கின்றோம். அந்த வகையில் சிவனது மூர்த்தி பேதங்கள் அறுபத்து நான்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும் இருபத்தெட்டு மூர்த்தங்கள் சிறப்பிற்குரியனவாகும். அவற்றுள் நடராஜ வடிவமைப்பு, தஷிணா மூர்த்தம், சோமஸ்கந்த மூர்த்தம், பிச்சாடன மூர்த்தம், அர்த்தனாரீஸ்வர மூர்த்தம், போன்ற வடிவமைப்புக்கள் சிறப்பிற்குரிய மூர்த்தங்களாகும். இவற்றிலே திராவிட நாகரிகத்தின் ஒரு பங்களிப்பாகவும், சாதனையாகவும் தோற்றம் பெற்ற வடிவமே நடராஜர் வடிவம்.

இந்துக்களால் பூஜிக்கப்படுகின்ற சிவ வடிவங்களில் உலக அறிஞர்கள் அனைவரையும் தத்துவ ஆய்வில் காணச்செய்வன சிவலிங்கமும், நடராஜ வடிவமுமே எனலாம். சிவன் நாட்டியப் பிரியன் இவன் ஐந்தொழில்களை நிகழ்த்தும் பொருட்டு நாட்டியம் ஆடுகின்றான் இதனால் சிவபெருமானுக்கு "நடராஜர்", "ஆடலழகர்", "நாட்டியவேந்தன்", "தில்லைநடராஜன்", "தாண்டவவேந்தன்", "கூத்தப்பெருமான்", " நர்த்தனன்", எனப் பல பெயர்கள் வழங்கப்பெறுகின்றன. இதில் நடராஜ வடிவம் சிவன் தாண்டவ நடனம் புரியும் திருக்கோலம் சபாபதி என வழங்கப் பெறும் இத் திருக்கோலம் பல அடியவர்களின் உள்ளங்களை நெகிழச் செய்து ஞானத்தை அருளிய திருக்கோலம். அவர்கள் கண்களிலும், கருத்துக்களிலும் நீங்காது உறையும் இவ்வடிவம் சைவ விக்கிரகக் கலையில் தலைசிறந்த கலா சிருஷ்டியாகவும் அமைந்துள்ளது. " நடராஜர் உருவமற்ற கோவில்கள் நிறைவுபெற்ற சிவன் கோவில்கள் ஆகாது" என்பது இதற்கு தக்க சான்று இம் மூர்த்தி பற்றி தத்துவ விளக்கம் "உண்மை

விளக்கம்'' என்ற மெய்கண்ட சாதிஸ்திர நூலிலே மிக விரிவாகத்தந்திருக்கக் காணலாம்.

தலைசிறந்த நர்த்தன்னான நடராஜனின் ஆடல் தோற்றம் பலவாகும். இடதுகால் தூக்கியாடும் வடிவம், வலதுகால் தூக்கியாடும் வடிவம், காலை மேல் நோக்கி ஆடும் வடிவம், நாலுகை, ஆறுகை, எட்டுக்கை, பத்துக்கை, பதினாறுகையுடைய வடிவங்கள் மற்றும் நூற்றி எட்டுவகைத் தாண்டவம் முதலிய கோலங் களில் உள்ளன. ஆயிரம் திருக்கை உடைய வடிவத்தினை உமாபதி சிவாச்சியாரின் "குஞ்சிதாங்கிரிஸ்தவம்'' என்னும் வடமொழி நூல் குறிக்கின்றது. நடராஜரின் தியான சுலோகங்களுள் ஒன்று இரண்டாயிரம் கை பற்றி கூறுகின்றது. இத்தகைய ஆடல் அழக ரான சிவன் பேருவகையுடன் சுடலையில் நின்று ஆடுவதைச் சமய நூல்களும் கூறிச் செல்கின்றன. உதாரணமாக

"முதுவாய்ஓரி கதற முதுகாட்
டெரி கொண்டாடல் முயல்வோனே...."

என்பதனூடாக நரிகள் ஊளையிடும் சுடுகாட்டிலே பிணங்கள் எரியும் தீயை ஒளி யாகக் கொண்டு ஆடல் செய்யும் சிவனின் சிறப்பை சுந்தரர் தேவாரம் வெளிப்படுத்தி நிற்கக் காணலாம். இவ்வாறு சிவனால் ஆடப் படும் கூத்துக்கள் பல தத்துவங்களை உணர்த்தி நிற்கின்றன. இக் கூத்துக்களில் சிவன் பல வடிவுகள் தாங்கி யாவற்றையும் அழித்து ஆடும் ஆடல் "கொடுகொட்டி" என வும், முப்புரங்களையும் எரித்து வெந்தநீறு பூசி ஆடும் ஆடல் "பாண்டரங்கம்'' எனவும் அழைக் கப்படும் தன்மை உணர்த்துகின்றது.

சிவபெருமான் சுடலையில் மட்டுமன்றி உயிர்களை இயக்கும் ஐந்தொழில் நிகழ்வுக் காகவும் பல நடனங்கள் ஆடியதை உண்மை விளக்கம், சிவஞான சித்தியார், சிவ வடிவங் கள், கலைகள் போன்ற பல சமய நூல்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு சிவன் பஞ:ச கிருத்தியங்களுக்காக நிகழ்த்தும் நடனம் "ஆனந்த தாண்டவம்'' எனவும், ஒரு காலை மேலே தூக்கியவாறு ஆடும் நடனம் "ஊர்த்துவ தாண்டவம்'', அல்லது "சம்மார தாண்டவம்'' எனவும் அழைக்கப்படும் தன்மை சிவனின் நடனச் சிறப்பை உணர்த்தி நிற்கின்றது.

அழகுக் கலை சிறந்து பொலியக் கண் குளிரக் காட்சி தரும் நடராஜர் திருவுருவம் கண்களுக்கு பெரு விருந்தாய் அமைவது மட்டுமல்ல உள்ளத்தைக்கழிப்புறச் செய்வது ஆனந்த அனுபவத்தை உண்டாக்குவது, மனச்சாந்தியை எழச் செய்வது தீய எண்ணங் களை அகற்றி நல்லலெண்ணங்களைத் தோற்றுவிப்பது, நானெனும் செருக்கை கெட வைப்பது, பேரொழி வீசி இருளகற்றி நல்லறிவு புகட்டி பேரானந்தப் பெரு வாழ்வாம் வீடுபேற்றை ஈற்றில் அடைவிப்பது இவ்வாறு நடராஜர் வடி வம் அதன் நிலையும் அது உணர்த்தும் கருத்துக்களுமே காரணம். அந்த வகையில் நடராஜ வடிவம் உணர்த்தும் சமயம், கலை, தத்துவம் பற்றி நோக்குதல் சிறப்பிற்குரியதாகும்.

இறைவன் தடத்த இலட்சண நிலையை அல்லது பொது இயல்பு நிலையை பெறு வதற்கான காரணம் ஆன்ம ஈடேற்றமாகும். அந்த ஆன்ம ஈடேற்றத்தைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட சிறப்பான மூர்த்த மாகவே நடராஜர் வடிவம் கருத்துக் கூறப் படுகிறது. சமயிகள் இந்த ஆடல் தோற்றத் தோடு கூடிய நடராஜரை ஐந்தொழிலின் கர்த்தா என குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம். குறிப்பாக அவரது திருமேனி அழகை

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த
மானிலத்தே''

என்ற பாடலால் இரசித்திருக்கக் காண் கிறோம். இந்த ஆடலிலே தூக்கிய திருவடியும், மிதித்த ஒரு திருவடியும், நான்கு கைகளும் ஆடல் அழகைக் காட்டி நிற்கின்றன.

இந்த ஆடற் காட்சியிலே ஒரு கை அக்கினி ஏந்த, மறுகை அபயம் கொடுக்க, இன்னொருகை உடுக்கையைக் கொண்டிருக்க, ஒருகாலைத் தூக்கியும், மறுகாலினால் முயல கனை மிதித்தும் நிற்கும் இவ்வுருவம் சடா முடியோடு கூடிய மலர்ந்த முகமும் மரவுரியும் தரித்து காணப்படுவதாகவே சித்திரிக்கப்படு கின்றது. இது போலவே சேக்கிழார் பெரு மானும் ஆற்றிலே போட்ட பொன்னை குளத் தில் எடுக்க சென்ற சுந்தரர் பொன்னம்பலத்தில் நடராஜன் ஆடிய ஐந்தொழில் அருட்கூத்தி னைக் கண்டு ஆனந்தம் அடைந்ததாகக் கூறு வது நடராஜன் ஐந்தொழிலின் கர்த்தா என் பதைப் புலப்படுத்துகின்றது. இந்த ஆடற் காட்சி சமய ஞானிகள் மனதில் இறைவன் "அண்ட சராசரங்களையும் தன் ஆட்டத்தினால் ஆட வைப்பவர்" என்பதைத் தெளிவுபடுத்துவதோடு, "அவன் ஆட்டிவிக்க நாம் ஆடுகிறோம் என உலகத்தின் தொழிற்பாட்டுக் காரணியாகவும் கூறப்படுகின்ற ஒரு சிறப்பான நிலையை நடராஜ வடிவம் உணர்த்தி நிற்கக் காணலாம்.

சமய ஞானிகளால் மட்டுமன்றி கலை ஞானிகளாலும் வியக்கப்படும் ஒரு மூர்த வடிவ மாக நடராஜர் வடிவத்தைக் குறிப்பிட முடி கிறது கலைஞர்கள் தமது கலைக்கூடங்களில் கலை உணர்வூட்டும் ஒரு சாதனமாக நடராஜர் திருவுருவை அமைத்து வழிபாடாற்றுவதைக் காண்கிறோம். ஆடற் கலையில் தாண்டவ நடனம் முக்கியம் வாய்ந்த ஒரு நடனமாகப் பேணப்பட்டு வருகிறது . ஏனைய மூர்த்தங் களுக்கு அளிக்கின்ற சிறப்பிலும் பார்க்க நடராஜ மூர்த்தம் கலைஞர்களால் சிறப்பிக்கப் பட்ட ஒரு மூர்த்த வடிவம் என்றே கூற வேண் டும். இதனால் நடராஜ மூர்த்தத்தை அடிப் படையாகக் கொண்டு பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக கலை ரசனை மிக்கவரும் சமய அறிவாளருமான கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இந்துக் கலைகளில் ஆர்வமுடையவர் அவர் தான் ரசித் கலைக் காட்சியாக நடராஜரைக் கொண்டு அவருக்கென ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளார். இது சிவநடனம் (Dance of Siva) என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

இந்த நூல் முழுமையிலும் நடராஜ உருவின் கலைச்சிறப்பு மிக நுணுக்கமாக நோக்கப்பட்டுள்ளது. அந்த ஆடல் வடிவின் பாபனைகள், அந்த பாபம் அமைந்துள்ளமைக் கான காரணங்கள், அந்த ஆடலில் கலை ஞர்கள் கொண்ட மதிப்பு போன்றவற்றை அந்நூல் வாயிலாக ஆசிரியர் விளங்க வைக்க முற்படுகின்றார்.

"கோயில்" என இந்துக்களால் அழைக் கப்படும் சிதம்பரமே நடராஜர் ஆனந்த நடனம் புரியும் சிவதலம். இங்கு எம்பெருமான் ஆடும் ஆனந்த நடனத்தை மனிதப் பிறவி பெற்ற யாவரும் காணவேண்டும். கண்டு கூத்தப் பெருமானின் கலையழகை ரசிக்கவேண்டும். ஏனெனில் இன்று இந்துக்கள் மட்டுமன்றி பல கலைகளிலும் வல்ல மேனாட்டவரும் அதி சயம் என இறும்பூதெய்தும் அளவிற்கு அவரது கலைகள் கண்ணுக்கு விருந்தாக மனதுக்கு இதமாக அமைந்திருப்பதைக் கண்டு கொள்ள லாம். இத்தகைய நடராஜரின் நடன அசைவுகளை

"மிதித்த பொற் பதமு மெடுத்த பாதார விந்தமும்
சந்த வெம்பு லித்தோல்
விளங்கிய விடையு முந்தியுஞ் சுழியும்
மேனிவெண் ணீற்றின தொளியும்
கனத்தெதிர்க் கனக மேருநான் கனைய
கனகசதுர் புயங்களும் காள
கண்டமும் முகமும் சென்னியும் சரியே
கண்டு கண் களிக்கு நாளுளதோ"

நான் கண்டு களிக்கும் நாள் எப்பொழுது என ஒரு புலவர் கனிந்துருகிப் பாடும் தன்மை நடராஜ கலைச்சிறப்பை எடுத்தியம்புகிறது.

கலைஞர்கள் வியக்கும் வகையில் அமைந்ததாகக் கூறப்படும் இந்த மூர்த்தம் தத்தவ ஞானிகளின் சிறப்பையும் பெற் றுள்ளது. தத்துவ ஞானிகள் வரிசையில் நடராஜ திருவுருவினை சிறப்பித்தவராக அருனந்தி சிவாச்சாரியார் மனவாசகம் கடந்தார் இருவரையும் குறிப்பீடு செய்ய முடிகின்றது. மனவாசகம் கடந்தாரின் உண்மை விளக்கம் "நாதன் நடம் ஐந்தெழுத்தத் தானே......"

என ஐந்தெழுத்தோடு தொடர்புபடுத்தி "அம்பலவாணனின் ஆடல் நடத்தும் இயல்பை கேட்பாயாக" என ஐந்தெழுத்தோடு தொடர்பு படுத்த முற்படுகின்றார் நடராஜரின் திருவடி – நகரம், திருவயிறு – மகரம், திருத் தோள் - சிகரம், திருமுகம் - வகரம், திருமுடி – மகரம் எனக் குறிப்பிட்டு நமசிவாய என்கின்ற ஐந் தெழுத்தின் மூலகர்த்தா என தத்துவ ஆசிரியர் கருத்துக் கூறியிருக்கும் சிறப்பினைக் காண்கின்றோம்.

"ஆடும்படிகேள் நல்லம் பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் கூடு
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம்வா முடியப் பார்

என்ற பாடல் விளக்குகின்றது. இதுபோலவே சிவாயநம ஐந்தெழுத்தோடு சிவன் தொடர்புடையவன் என்பதனை

"சிவாயநமவென்னும் திருவைந்தெழுத்தஞ்சாலே அபாயமற நின்று ஆடுவான்" என்ற பாடல் விளக்குகின்றது.

ஐந்தொழிலின் கர்த்தாவாகவும் சிவ னைத் தத்துவ ஞானிகள் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது அதாவது இதயம் இடை விடாது துடிப்பது போல் நடராஜப் பெரு மான் ஓயாது நட்டம் பயில்கின்றார். அவர் நட்டம் பயிலுதலை ஒளித்தாராயின் உலகம் ஒடுங்கி விடும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலைக் குறிப்பது சிவநடனம். அதாவது அவர் தன் திருக்கரத்தில் உள்ள உடுக்கையினால் உலகைத் தோற்றுவிக்கின்றார் அபயக் கரத் தினால் உலகைக் காக்கின்றார். அக்கினி ஏந்திய கையினால் உலகை ஒடுக்குகின்றார். முயலகனை அழுத்தி ஊன்றிய பாதத்தால் உலகை மறைக்கின்றார். தூக்கிய திரு வடியாம் குஞ்சிதபாதத்தால் உலகுக்கு அருள் புரிகின்றார் . இதனை

"தோற்றம் துடியதனில் தோயும் திதி
அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம்
- ஊற்றமாம்
ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்ற
திரோதம் முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு"

என உலக சிருஷ்டி, ஒடுக்கம், சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்கின்ற ஐந் தொழிலின் கர்த்தாவாக தத்துவ ஞானிகள் நடராஜவடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர்.

ஐந்தொழிலின் நாயகனாக இருக்கும் நடராஜன் ஆன்மாக்களை தன்னுடன் இரண் டறக் கலக்கச் செய்ய சங்கற்பம் செய்கின்றான். இதனை உண்மை விளக்கம்

"மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம் சாய வமுக்கி அருள்தானெடுத்து நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆனமாவைத் தானழுத்தல் தானெந்தையார் பரதம் தான் என உடுக்கையை அசைத்தல் மூலம் மாயையை ஆன்மாக்களினின்றும் உதறி விலக்கி, திருக்கரத்தில் ஏந்திய தீயின் மூலம் பவ வினையை எரித்து ஊன்றிய திருவடி மூலம் ஆன்மாவின் அறியாமையைப் போக்கி தூக்கிய திருவடியின் மூலம் மீண்டும் பிறவாப் பேரின் பத்தை அருள்கின்றார் என தத்துவவாதிகள் கருத்துக் கூறியுள்ளனர். இவ்வாறு நடராஜப் பெருமானால் முத்தியடைந்தவர்களாக பதஞ் சலியும், வியாக்கிரபாத முனிவரும் சிறப்படை கின்றனர். பெற்றான் சாம்பனுக்கு முத்தி கொடுக்குமாறு கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியாருக்கு "சீட்டுக்கவி" எழுதிக் கொடுத்த பெருமையும், மாணிக்கவாசகர் கூறிய திருவாசகத்தையும் திருக்கோவை யாரையும் தானே மறையவராக வந்து தம் கையால் எழுதிக் கையெழுத்திட்டு சிற்சபை யில் சேர்த்த பெருமையும் நடராஜப் பெருமானுக்குரியது.

நடராஜப்பெருமானை திருமூலர், பதஞ் சலி, வியாக்கிரபாதர், சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், கல்லாடர், திரு மாளிகைத்தேவர், சேந்தனார், கண்டராதித்தர்,

கருவூர்த்தேவர், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்மார் நம்பி, சேக்கிழார், அருணந்தி, உமாபதிசிவம் முதலானோர் வணங்கிப் பாடிப் பரவியுள்ளனர்.

சிவன் விரும்பி "சிவநடனம்" செய்யும் சிதம்பரத்தை இரட்டையர், காளமேகம், புராணத் திருமலைநாதர், திருஞானசம்பந்தர், குமரகுருபரர், வெள்ளியம்பலவாணர், படிக்காசுத்தம்பிரான், துறைமங்கலம் சிவப்பிரகாசர், சொக்கநாதப் புலவர், முத்துத் தாண்டவர், ஞானப்பிரகாசர், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், வடலூர் இராமலிங்க சுவாமிகள், பொன்னம்பலசுவாமிகள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். நடராஜப்பெருமானிடம் மறைஞாசம்பந்தர், திருநாளைப்போவார், திருநீலகண்டர், கூற்றுவநாயனார், கணம்புல்லர் , கோச்செங்கணன், பெற்றான்சாம்பான், ஆனந்த நமசிவாயப் பண்டாரம் ஆகியோர் பேரன்பு கொண்டொழுகி பேறுபெற்றனர்.

தேவாரம் திருவாசகம் என்பனவும் உமாபதிசிவம் இயற்றிய கோயிற்புராணம், புராணத் திருமலைநாதர் இயற்றிய சிதம்பரபுராணம், சபாபதி நாவலர் இயற்றிய சபாநாதர்புராணம், யாழ்ப்பாணத்து சிவானந்தையார் இயற்றிய குலியூர்ப்புராணம், திருவிசைப்பாவின் பதினைந்து பதிகங்கள், தில்லைக்கலம்பகம், தில்லையுலா, தில்லையமகவந்தாதி, சிதம்பரநாதர் பதிகம், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பர செய்யுட்கோவை, நடராஜ சதகம், புலியூர்வெண்பா, சிதம்பரவெண்பா என்பன நடராஜர் ஆடல் அழகையும், அவர் விரும்பி உறையும் சிவத்தலமான சிதம்பரத்தையும் போற்றி நிற்பன.

இவற்றையெல்லாம் ஆய்வு செய்த தத்துவ ஞானிகள் நடராஜனை பஞ்சாட்சரமந்திரத்தின் கர்த்தாவாகவும், ஐந்தொழிலின் நாயகராகவும், ஆன்மாக்களின் பவவினை அகற்றி பிறப்பற்ற பெருநிலைக்கு உதவுபவராகவும் முக்கியத்துவம் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோகமாகும் திருச்சிற்றம்பலத்துள நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

என சமய ஞானிகளாலும், தத்துவஞானிகளாலும், கலைஞானிகளாலும் போற்றப்படுகின்ற உருவ அமைப்பாக கொள்ளப்படும் நடராஜரே சேக்கிழாருக்கு "உலகெலாம்" என்றடியெடுத்துக் கொடுத்தவர் மாணிக்கவாசகர். "தில்லையில் பாதி திருவாசகத்தில்" என்றபடி பாதிக்கு மேல் சிதம்பரத்தைப் பற்றியே பாடி "திருவாசகத்திற்குப் பொருள் அவனே" எனக் கூறுதற்கு காரணமாக அமைந்தவர். தில்லை மூவாயிரரை தனது கணநாதர்களாய் திருஞானசம்பந்தருக்குக் காட்டியவர் தேவார திருமுறைகளைச் சேமித்து வைத்து உலகத்தோர் உபயோகமாகுமாறு தொகுப்பித்தவர் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்று அடியார்கள் தொகையைக் கூற வந்த சுந்தரர் முதலில் தில்லையைக் கூறிய பெருமைக்குரியவர். இவ்வாறாக சிவனது மூர்த்தி பேதங்களில் நடராஜமூர்த்தம் சமயம், தத்துவம், கலை அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு சிறப்பிற்குரிய மூர்த்தமாக விளங்குவது மனங்கொள்ளத்தக்கது.

# கல்லூரி அன்னைக்கு ஒரு கவிமாலை

சங்கத் தமிழ் முழங்கும் ஈழமணித் திருநாடு
சான்றோர் பலர் புகழும் சோலை விஞ்சும் அழகோடு
பொங்கும் செம்மண்ணும் பொன் விளையும் பசும் வயலும்
பாங்காய் வளம் கொழிக்கும் அச்சுவேலி எனும் பதியில்
கங்குல் விலகி ஒளிர் கதிரவன் எழுந்தது போல்
கடவுள் வரத் துணையுடன் கற்றவர் ஆசியுடன்
இங்கு தான் எங்கள் கல்லூரி இளைய தாய்
தங்கக் கால் பதித்துத் தளிராகி; ஒளியானாள்

சீர் பெற்று எம் மகளிர் சிந்தையில் பலம் பெற்று
சிறப்புடன் வாழ்ந்திடவும் சிறுமைகள் அகன்றிடவும்
கார்மேல் அன்னையரின் காருண்யக் கரம் பெற்றாள்
கல்வியில் வளர்ந்தாள்; கலைகளில் உயர்ந்தாள்
பேர்தனில் "புனித தெரேசாள்" எனக் கொண்டாள்
பலரும் உயர்கின்ற படிக்கற்கள் என நின்றாள்
வேர் விட்டுப் பலப்பல விழுதுகளும் உற்றாள்
விண்ணுயரத் தன்புகழை வண்ணமெனத் தைத்தாள்

எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொண்டார் - எதிலும்
எங்கள் மாணவர் எழுந்துமே நின்றார்
பண்ணும் பரதமும் பக்தி நிறை வாழ்வும் - நற்
பண்புகளும் மனதில் பதியவே பெற்றார் - மனத்
திண்மை பெறவே உடற்றிறன் பயிற்சிகளும்
தங்கியே கற்றிடத் தனியிட வசதிகளும்
அண்மையற்றிருப்போரையும் அழைத்தது - மண்ணிலே
அன்னை பெயர் தனியாக நிலைத்தது.

வல்ல தேவ வார்த்தைகள் தான் வழிகாட்டி
வாழ்த்துரைக்கும் எம் இனிய ஆன்றோரின் நிறை ஆசி
நல்லதிபர் ஆசிரியர் தம்பணி நிறைவேற்றி
நின்றார்கள்; எம் தாயைப் பணிவோடு உயர்வேற்றி
கல்வியில் ஒளி பெற்றோர் பல்லாயிரக் கணக்கானோர்
காலத்தின் விடியலுக்கு உதயத்தின் கிழக்கானார்
செல்லும் இடங்களிலே சிறப்புற்றார் - அன்னைதரும்
சாதனைகள் சொல்லி வழி நிறைவுற்றார்.

கொற்கைக் கூடாரத்தின் முத்துப்போல தாயே – உனைக்
கொண்டாடினோம் இன்று பண்பாடினோம் - கல்வி
விற்கை ஏந்தி; ஆண்டறுபது வென்று என்றும்
வழிகாட்டும் பாதை ஒளி நான் என்று
சிற்பியாய் நின்றாய்; எங்கள் வளம் நெய்தாய் - நாம்
செந்தமிழ்த் துணைகொண்டு போற்றினோம் பாவாய்
வெற்றி பல கண்டு, வீறுநடை கொண்டு
வாழ்வாய் வாழிய! வாழிய பல்லாண்டு !!

**திருமதி. றொசற் தவநாயகம் B.Sc (Hons)**
**(பழைய மாணவி)**
**உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, அச்சுவேலி.**

# Teachers Name List From 1975 – 2007

01.Mrs. Winifred Kandaiah
02.Mrs. Bridget Mariampillai
03.Mrs. Philomin Thurairajah
04.Mrs. G. Soosaipillai
05.Mrs. Y. Sivasubramaniyam
06.Mrs. R. Jeyarajah
07.Miss. I. Kumarasamy
08.Mrs. S. Sayanolipavan
09.Miss. T. Dayanandhathevi
10.Mrs. M. Kandasamy
11.Mrs. S. Thevarajah
12.Miss. Mary Ambrasiyon
13.Mrs. T. Sivalingarajah
14.Mrs. S. Kandasamy
15.Mrs. I. Sivanandan
16.Miss. M.A. John
17.Mrs. E.S. Selvarajah
18.Miss. Jesima Sultan
19.Mrs. P. Kanapathipillai
20.Miss. N. Ketheeswary
21.Miss. Lohini Thurairajah
22.Miss. M. stella Nicholas
23.Miss. K. Nadarajah
24.Mrs. Y. Nesathas
25.Mrs. A. Selvarajah
26.Mrs. P. Nallathampi
27.Miss. R. Sanmugalingam
28.Mr. K. Hengeswaran
29.Miss. S. Thevasana
30.Mrs. S. Navaratnam
31.Mrs. S. Vimalachithrapathy
32.Miss. J. karthikesu
33.Miss. A. William
34.Mr. S.J. Yogarajah
35.Mrs. J. Sivalingam
36.Miss. A.S. Daniel
37.Mr. R. Kunasingam
38.Mrs.M. Selvaratnam
39.Mrs. E. Shanmugaratnam
40.Mrs. S. Nalinishanthy
41.Mrs. S. Thivendram
42.Miss. M.S. Arumugam
43.Mrs. K. Ganesamoorthy
44.Mrs. P. Chandrasegaram
45.Miss. P. Kumarasamy
46.Mrs. P. Nallathampi
47.Miss. M. Gnanapragasam
48.Mr.P. Anthony
49.Mr. K. Namasivayam
50.Mr. V. Rajaratnam
51.Miss. J. Karthikesu
52.Mrs. P. Indrakaran
53.Mrs. Mary Stella Nicholas
54.Mrs. I. Muthurajah
55.Mrs. P. kanthagnani
56.Mrs. L. Sundralingam
57.Mrs. P. Kathiravel
58.Mrs. S. Mahendran
59.Miss. R. Rajadurai
60.Miss. S. Kandasamy
61.Miss. R. Vallipuram
62.Miss. M.P. William
63.Mr. N. Sinnathampy
64.Mrs. T. Rajathilagam

65.Mrs. S.Puwanendran
66.Miss. R. Rajeswary
67.Mr. M. Gnanalingam
68.Mrs. E. Logeswaran
69.Mrs. P. Sivagnanam
70.Mrs. N. Jeganathan
71.Mrs. S.E. Sinnaiah
72.Miss. Yogeswary Kasipillai
73.Miss. R. Thilagawathy
74.Miss. I. K. Kanapathypillai
75.Mrs. Sooriakala Amaranathan
76.Miss. Poolagarampai Thuraisingam
77.Mr. P. Thavarajah
78.Mrs. S. Maheswarathasan
79.Miss. Pusparanee Aseervatham
80.Miss. Paramapathy Thampithurai
81.Mrs. Jaculin Chadraiya
82.Miss. Thampoo Thevamani
83.Miss. Yasotha Maruthalingam
84.Miss. Selvanayagam Sumathy
85.Mr. S. Vinayagampillai
86.Mrs. Sri . Saravanabavananthan
87.Miss. Yalini Gnanatheeran
88.Miss. V. Baherathy
89.Miss. Parapari Shanmugasundram
90.Mrs. L. Ratnam
91.Mrs. S. Sandrakumar
92.Mrs. N. Kunarajah
93.Mrs. S. Eswarathasan
94.Mrs. V. Gunadevan
95.Mrs. T. Ganesalingam
96.Miss. Gnanaluxmy Gnanasubramaniyam
97.Mrs. Komathy Kanagalingam
98.Mr. K. Sutharsan
99.Mrs. Ambigadevi Senthilkumaresan
100.Mrs. N. Gnanalingam
101.Mr. R. Gnaneswaran
102.Miss. Manchula Thirukesan
103.Mrs. Rajavinothini Thiruketheeswaran
104.Mrs. M. Sriskandarajah.
105.Mrs. T. Parimelalagapillai
106.Mrs. A. Baskaran
107.Miss. Rajithagary Kandasamy
108.Mrs. N. Kugathasan
109.Mr. P. Vakeesan
110.Mrs. L. Arunthavaselvam
111.Miss. Manoja sangarapillai
112.Miss. K. Puvanendran
113.Mrs. K. Senthilvel
114.Mrs. Chithirakala Vithyyapathy
115.Mrs. Indrani Kumarakuruparan
116.Miss. Albert Gowsala
117.Miss.K. Thusiyanthy

## Non Staff

01.Mr. S.Esthaki
02.Mr. N.Vethavanam
03.Mrs.Jeyakumary
04.Mr.Nirmalan
05.Miss. K. Vathana
06.Mr.L. Encili Rukman

# AN EVENING IN THE BEACH

The sky is shaded in red and yellow,
The Sun is sinking in the shallow
Looks like a ball of fire
Sea water crawls to the beneath,
Sweeps away the crabs there.

I was sitting on the white sand
That was filled with sea shells.
And the sea shells are washed away
By the sea waves far away.
It was really fantastic to stand
In a beach to watch the evening scene.

*Miss. H.Nivetha*
*GRADE 9 A*

இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்த முகம்.

கைவிடப்பட்டோருக்குத் தந்தையாய் இரு.
ஒடுக்கப்பட்டோருக்குத் தாயாய் இரு.

பொன்னையும், முத்துக்களையும் விட, அறிவுள்ள
பேச்சே விலையுயர்ந்த அணிகலன்

# GREAT LASSES OF ST.THERESA

ST.Theresa is my school
Under Sisters' kind rules
No girl dare to play the fool
ST.Theresa's girls are ever cool.


We are the best atheletes
Come on! Try and compete
Rain or shine ever so neat
Our girls' smiles are sweet.

Maroon and yellow are our school colours
We girls have winning powers
Study or play we do not hover
On St. Theresa's Blessings do shower

Teachers always say not to disobey
And girls have to pay
Discipline is the key of ST. THERESA
And our girls are the best and first.
Our motto is 'Pure and True' and
One day we will be the first
And leave the school nest,
ST. Theresa girls will be the best of the rest.

*Miss.T.Sezin Kalista*
*GRADE 10 A*

# Our Honoured Guests





# நான் யார் தெரியுமா ?

நான் யார் தெரியுமா? சொல்லுங்கள் பார்க்கலாம். எங்கும் உள்ளவன். எங்கும் பிரயாணம் செய்பவன் அடியினைத் தேடிய பிரம்மாவும் அல்ல. முடியினைத் தேடிய விஷ்ணுவும் அல்ல. ஊர்ந்து செல்ல வாகனமோ இல்லை. பறந்து செல்ல இறகுகளுமில்லை ஆனால் நானில்லாமல் நீங்கள் இப்போதெல்லாம் நிம்மதியாக இருக்கமாட்டீர்கள்.

குயில் போன்ற குரலோசையில் இங்கிதமாகப் பாடுவேன் ஆனால் நான் குயிலல்ல. பாடிப்பாடி வானில் பறப்பேன் வானம்பாடியல்ல. ஒயிலாக வந்து நடனமாடுவேன் ஆனால் மழை மேகம் கண்டு தோகை விரித்தாடும் மயிலுமல்ல வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகில் தேனினும் இனிய செந்தமிழை தங்குதடையற்ற அடுக்கு மொழியிலே பார்புகழப் பேசுவேன். ஆனால் அறிஞர் அண்ணாவும் அல்ல. சின்னக்குழந்தைக்கும் சிங்காரப் பாட்டிசைப்பேன் ஆனால் பாரதம் பெற்றெடுத்த பாரதியும் அல்ல. கடல் சூழ்ந்த உலகதனில் பயின்று வரும் கன்னடம், தெலுங்கு, மலையாளம் மொழிகளிலும் பேசுவேன், வாசிப்பேன் தனிநாயகம் அடிகளுமல்ல. பரதக்கலையும் படைத்திடுவேன் வீரமணி ஐயரில்லை. குழந்தைகள் முதல் முதியவர் வரை பார்த்து இரசித்திட நாடகங்கள் நடித்திடுவேன். ஆனால் நான் சிவாஜியும் அல்ல.

உலக விவகாரங்கள் அறியச் செய்திடுவேன் ஆனால் பத்திரிகையும் அல்ல. தேடல் மூலம் உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன். நான் இன்ரபோல் அல்ல. Around the world the 2nd 99 தொகுப்பு மூலம் உலக நாட்டு விவகாரம் சுடச் சுட தந்திடுவேன் நான் செய்தித் தாள் அல்ல.

உடலிற்கு இதமளிக்கும் நீரருவிகள், பச்சைப்பசேலென இயற்கைக் காட்சிகள், வெண்முகில் கூட்டங்கள், மொட்டலரும் மலர்க் கொத்தில் பதிந்திருக்கும் வண்ணத்துப் பூச்சிகள், பூங்காவனங்கள் காட்டிடுவேன். அரசியல் விவகாரம் விவசாய நடவடிக்கை நவீன சமயல் முறைகளையும் காட்டி நிற்பேன். ஊரும் உலகும் அறிந்திடச் செய்வேன். இனமத பேதமின்றி ஆலய விழாக்களையும் அறிந்திடச் செய்திடுவேன். ஆனால் நான் விமர்சகன் அல்ல.

அதிகாலை விழித்திடுவேன் இரவு வந்தும் உழைத்திடுவேன். சின்னஞ்சிறார் முதல் பொக்கை வாய் பாட்டி வரை என்னையே பார்த்திருப்பர். தேர்தல் காலமெனில் கொள்கை பரப்பிடுவேன். யார் வெல்வர் என்று SMS மூலம் தகவல் பெற்றிடுவேன்.

நான் என்றும் சுறுசுறுப்பானவன். ஆனால் தேனியும் அல்ல எறும்புக் கூட்டமும் அல்ல. வீடுகளில், விமானங்களில், திருமண, பூப்புனித வைபவ மண்டபத்திலும் நான் முன்னணியில் நிறைந்திருப்பேன். சிறுவர், இளைஞர், முதியோர், பெரியோர் அனைவர்க்கும் ஏற்ற வகையில் தொழிற்படுவேன்.

மாணவச் சிற்பங்களுக்கு அறிவு, களம், விவாதம் மூலம் அறிவைப் பெருக்கிடுவேன் காலைக் கதிரவன் தன் பொற்கரங்களைப் பரப்பும் வேளையிலே இனமத பேதமின்றி நற்சிந்தனைகளைத் தந்திடுவேன். காவியா முதல் அண்ணாமலை வரை நாடகத் தொடர்களையும் ஆவலுடன் ஏக்கப் பெருமூச்சுடனே பார்த்து ரசிக்க வைப்பேன். நான் யார் தெரியுமா?

♣ **தொலைக்காட்சி** ♣

**செல்வி. டர்ஷி இராஜசிங்கநாயகம்**
**தரம் 4A**

# தமிழ் மொழியின் சிறப்பு

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த தமிழ் எமது தமிழ். தமிழ்மொழி ஒரு பெருங்கடல், தேன்குடம், சிறந்த பல்கலைக்கழக சுரங்கம். இது பற்றி அதிகம் கூற எனக்கு அறிவும் போதாது. வயதும் போதாது எனினும் என் அறிவுக்கு எட்டிய வரை தமிழின் சிறப்பைக் கூறும் ஆவலில் உங்கள் முன் வந்துள்ளேன்.

உலகிலுள்ள செம்மொழிகளில் தனித்துவம் உடையது தமிழ்மொழி. இதன் சிறப்பினை பண்டைக்காலம் முதல் இன்று வரை உணர முடிகின்றது. தமிழ் மொழியில் அல்லாத விடயங்களே இல்லை எனலாம். இயல், இசை, நாடகம் எனும் முப்பிரிவுகளைக் கொண்ட இம் மொழி தத்துவம், வரலாறு, இரசாயனவியல், புவியியல், சோதிடம், வானசாஸ்திரம், விஞ்ஞானம், தர்க்கம், சமூகவியல், அறிவியல், ஒழுக்கவியல், எனப்பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது.

மனித நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எனப் பல்வேறு விழுமியங்களை உள்ளடக்கியது எங்கள் தமிழ்மொழி.

முடியுடை மூவேந்தர் சங்கம் வைத்து வளர்த்த தமிழ் தலைசிறந்த இலக்கியங்கள் பலவற்றைத்தன்னகத்தே கொண்டது. ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றை அணிந்து தமிழ் அன்னை அழகு பெறுகின்றாள்.

இனம் மொழி மதம், என வரையறுக்கப் பட்ட இலக்கிய வகைப்பாடுகளுக்கு அப்பாற் பட்டது. வள்ளுவன் தந்த திருக்குறள், பொய்யா மொழியின் பெருமையைக் கொண்டது தமிழ்மொழி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"

எனத் தமிழின் சிறப்பை வாயாரப் புகழ்ந்தார். மகாகவி சுப்பிரமணியபாரதியார். தமிழின் பெருமையை உலகம் போற்ற உரம் ஊட்டிய மகாகவிகள் பலர்.

அன்று வேங்கடம் முதல் குமரிமுனை வரை விரிந்திருந்த தமிழ்நாடும் தமிழ்மொழியும் இன்று சர்வதேச உலகெங்கும் வியாபித்து இருப்பதோடு பன்மொழி அறிஞர்களின் ஆய்வுக்கும், ஆராய்ச்சிக்கும் உள்ளாகி வருகின்றது.

இந்த வகையில் சர்வதேச மொழிகளோடு ஒப்பியல் ரீதியில் நோக்கப்படுகின்றது. எம்மொழியின் பெருமை பற்றி வேற்று மொழியாளர்கள் ஆராய்ந்து கண்ட ஆழம் அளவிட முடியாது.

கட்டுரை, கவிதை, சிறுகதை உரைநடை என்பனவும் பக்தி இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், திருமந்திரம் என்பனவும் மனித குலத்தை ஆன்மீக வழியில் இட்டுச் செல்கின்றன.

சமகால கணனி உலகில் கணனி மென் பொருளிலும், விசைப்பலகையிலும் தமிழ்மொழி தனக்குரிய இடத்தைப்பெற்று மேன்னிலை அடைந்துள்ளது.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என தமிழர் வாழும் நாட்டினை வியந்து போற்றுகின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனத்தமிழ் மணம் கமழப்பாடினார் கவிஞன் பாரதிதாசன்.

இனிமையும் சிறப்பும் மிக்க தமிழை தமிழ் உயிர் போல நேசித்து வளர்த்தவர்கள் தமிழர்கள். ஐரோப்பியரான வீரமாமுனிவர் தமிழின் பெருமையை ஆழமாக அறிந்து உணர்ந்தவர். தமது கல்லறையில் தமிழ் மாணவன் என்று பெயர் பொறிக்கப்பட வேண்டுமென எழுதி வைத்துள்ளார். இதிலிருந்து தமிழின் சிறப்பை உணர்ந்து கொள்வோம்.

"வானமளந்ததனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே"

**செல்வி. அபிராமி ஞானலிங்கம்**
**தரம் 5 (2005)**

**தமிழ்மொழித்தின பேச்சுப் போட்டியில் வலயமட்டம் 1ம் இடம், மாவட்ட மட்டம் 1ம் இடம், மாகாணமட்டம் 2ம் இடம்**

# அன்னைக்கு நிகருண்டோ

அன்னைக்கு நிகராவார் அகிலத்தில் யாருமிலர்
அன்பொழுகு திருமுகத்தை அளவிடும் தாய்மையது
பெண்மை இனம் போற்றும் உத்தமியாய் பாரினிலே
பெருமையுடன் எமையீன்ற அன்னைக்கு நிகருண்டோ !

கருவினிலே தான் காத்த களிப்புடனே ஈன்றெடுத்து
உருவாக்கி மனிதராய் வாழ வழி தனைப் பேணி
கட்டியிறுகணைத்து கண்ணுறங்கத் தாலாட்டி
காத்திட்ட தெய்வமே பாரினில் உனக்கு நிகருண்டோ!

பாலூட்டிச் சீராட்டி பக்குவமாய் நிதம் பேணி
மேலூட்டும் உண்டியுடன் இன்பமெனும் அமுதூட்டி
தாலாட்டித் தூங்க வைக்கும் தாயினமே உனக்கு
அகிலத்தில் மேலாகப் போற்றுதற்கு நிகருண்டோ!

நெஞ்சினிக்க நாவினிக்க நிதமும் செவியினிக்க
பிஞ்சு வதன மதில் கொஞ்சியே அமுதூட்டி
பஞ்சின் மென் கரங்கள் பகலிரவாய் பாடுபட்டு
கொஞ்சு மொழி தனை மேவும் இன் மொழிக்கு நிகருண்டோ!

கல்வியில் சிறந்திட நல் அறிவினை ஊட்டி
கருத்துடன் மழலையினைக் கண்ணியமாய்க் காத்து
என்பு தோலுருக ஓடாய் நிதம் உழைத்து வாழும்
பண்புடைத் தெய்வமே பாரில் உனக்கு நிகருண்டோ!

காலமெல்லாம் தான் ஈன்ற குழந்தை நலம் பேணி
கனவு கண்ட எண்ணம் கண்முன் நினைவாக
சுமந்திடச் சுமையை உள்ளமதில் சுமந்த
சுமங்கலியே அகிலத்தில் உனக்கு நிகருண்டோ!

**செல்வி. அ. யூட்டினா சுபாஜினி**
**பழைய மாணவி**

# Academic Achievement

## 60 WINNERS

## In Grade 5 Scholarship

**1986**
**Mr. T. Thirumurugan (Island 1st)**

1990

Miss.G. Nishanthi

Miss. S. Karthika

Miss. S. Sivagamasunthary

Miss.R. Karthika

Miss. A. Narmatha

Miss. A. Thumila

**1991**

Miss. S. Pratheepa

Miss. J. Jeyabarathy

Miss. K. Tharani

Miss. T. Priyani

Mast. S. Tharseepan

1992

Miss. Vinuska

Mast. S. Srisuthan

Miss. M. Piriyanthi

Mast. B. Vasanthan

1993

Mast. S. Rajkumar

Mast. S. Vaheesan

Miss. S. Sarmila

Miss. S. Tharsika

Mast. S. Senthilkumaran

Miss. P. Poongulaly.

1994

Miss. T. Reka

Miss. Sukirtha

1995

Mast. G. Aathavan

Mast. V. Manoranjan

Mast. S. Srirajiv

Miss. S. Manoya

Miss. Ameerthavarsiny

1996

Miss. S. Kajany

1997

Miss. K. Kamaleswaran

Miss. A.G. Kajenthini

Miss. W. Niruba

Miss. V. Karthika

1998

Miss. Miss. K. Sivanuja

1999

Miss. P. Thuvaraka

2000

Mast. V. Piraveen

Miss. T. Gowsika

Miss. R. Gowritheepa
Miss. S. Vinojini
Mast. S. Jenakan
Miss. V. Thanusa

2001
Mast.M. Mayoorathas
Miss. H. Nireka
Miss. M. Nikja
Miss. K. Sinthuja

2002
Miss. T. Serin Kalista

2003
Mast. Thushanthan
Miss. Mergini
Miss. Rajina
Miss. J. Lalitha

2004
Miss. M. Yaranika

2005
Miss. G. Abirami
Miss. S. kogula
Miss. M. Vinthiya

2006
Mast. K. Kathik
Mast. P. Kirishanth
Miss. V. Lakanika
Miss. S. Thabothini
Miss. A. Mathanki
Miss. R. Sarmini

**வெறுங் கண்களினால் பார்க்கக்கூடிய**
**கோள்கள் எவை?**
**புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி**

**விண்வெளிக்கு அனுப்பிய மிகவும் பாரமான**
**விண்கலம் எது?**
**அப்பலோ**

# G.C.E. O/L 2000 – 2006

| Subject | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| R.C | 100% | 66% | 100% | 100% | 100% | 83.3% | 93.75% |
| Hinduism | 83% | 91% | 93.3% | 95.23% | 95% | 94.4% | 100% |
| Tamil | 76% | 81% | 90.4% | 92.5% | 96.1% | 86.6% | 91.66% |
| English | 12% | 14% | 4.7% | 7.4% | 17% | 26.6% | 27.77% |
| Science | 56% | 59% | 23.8% | 33.3% | 38.4% | 33.3% | 22.22% |
| Maths | 48% | 22% | 23.8% | 22.2% | 69.2% | 26.6% | 44.44% |
| Social Study | 52% | 70% | 61.9% | 92.5% | 53.8% | 83.3% | 66.66% |
| Music | 40% | 61% | 46.1% | 52.1% | 61.1% | 82.3% | 47.61% |
| Dance | 40% | 50% | 37.5% | 75% | 71.4% | 33.3% | 66.66% |
| Home Science | 38.8% | 41% | 57.1% | 46.6% | 50% | 64.2% | 80.76% |
| Commerce | 100% | 90% | 62.5% | 41.6% | 55% | 62.5% | 80% |
| Tamil – Lit | - | 37% | 47.6% | 81.4% | 76.9% | 83.3% | 75% |
| Geography | - | 62% | 23.8% | 62.9% | 46.1% | 60% | 85.71% |
| Hyg & Phy.Ed | - | - | - | - | - | - | 89.65% |
| Art | - | - | - | - | - | 100% | - |

# G.C.E. A/L 2000 – 2006

| Subject | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| Christianity | 100% | 100% | 100% | 100% | - | 100% | 100% |
| Hindu Civilization | 85.7% | 80% | 100% | 100% | 70% | 100% | 73% |
| Tamil | 90% | 66.6% | 40% | 85% | 50% | 67% | 83% |
| Drama & Theatre | 100% | 100% | 28.5% | 100% | - | - | - |
| Hinduism | 100% | - | - | - | - | - | - |
| Music | 100% | - | - | - | - | - | - |
| Logic | 50% | 57.1% | 91.6% | 66.6% | 50% | 63% | 45% |
| Geography | - | - | - | - | 50% | - | 100% |
| Business Studies | - | - | - | - | 100% | - | 100% |
| Accounting | - | - | - | - | 100% | - | 100% |
| Economics | - | - | - | - | 100% | - | 100% |

*It's better to try and fail than never to have tried at all.*

# வாழ்வின் ஆரம்பப் படிகள்

செல்வி. இராஜமலர் இராஜதுரை
பிரதி அதிபர்

உன்னதமான இலட்சியங்களுக்கும், ஒப்பில்லா நோக்கங்களுக்கும் உறுதியான அடிக்கல் ஆரம்பக்கல்வி என்றால் மிகையாகாது அத்தகையதொரு வாய்ப்பை இன்று நம் நாட்டில் பெரும்பாலான மாணவர்கள் எட்டிவிடுகிறார்கள்.

கல்விச் செயற்பாடுகள், சமூகத்தின்மீது தாக்கமேற்படுத்தும் வல்லமை என்பன ஆரம்பக் கல்வியமைப்பு முறையிலேயே தங்கியுள்ளன.

ஆரம்பக்கல்வியமைப்பு என்பது கல்வி நிறுவனங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள். செயற்றிட்டங்கள், தொடர்ச்சியான கல்விசார் உள்ளீடுகள். அவற்றின் செயல் முறையின் வினைத்திறன் வெளியீடுகள் என்பன பற்றிய எதிர்பார்ப்பு என்பவற்றைப் பொறுத்து அமைகிறது.

ஆரம்பக் கல்வியானது பின்வரும் இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- அன்பு, பண்பு, இறைபக்தி வளர்த்தல்
- தேசப் பற்றுணர்வை வளர்த்தல்
- சமத்துவ உணர்வை வலுப்படுத்துதல்
- சுய நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்
- ஆக்கத் திறனை பல நிலையிலும் விருத்தி செய்தல்

எல்லாவகையான கற்பித்தல் முறைகளிலும் இவை பரந்து காணப்பட வேண்டும். பல்வேறு அறைகூவல்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலுடையவர்களாக வளர்வதற்கு இவை இன்றியமையாதனவாகும்.

நீண்டகாலத்தில் பலமான பொருளாதாரம் ஒன்றைக்கட்டியெழுப்பவும், சமத்துவ உணர்வும். செயற்பாடுகளும் கொண்ட சமூகத்தை விருத்தி செய்யவும் தூய கலாச்சார விழுமியங்களை வளர்க்கவும், சர்வதேச முன்னேற்றங்களை உறிஞ்சிக் கொள்ளவும் கூடிய வகையில் கல்வி இலக்குகள் அடையாளம் காணப்பட்டு அதன்படி கல்விச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுமாயின் சமூக முன்னேற்றம் சாத்தியமானதாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.


ஆரம்பக் கல்வியின் முக்கிய நோக்கம் குழந்தை பலதையும், பத்தையும் கற்பதல்ல. அதன் உள்ளம் முதிர்ச்சியடைவதும், உள்ளுறை ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுவதுமேயாகும். இது பல்வேறு அறிஞர்களினதும் கருத்தாகவும் அமைகிறது. அந்த வகையில் ஆற்ற வேண்டிய பணிகள் பல அனைவரினதும் கரங்களிலேயே தங்கியுள்ளது.

ஆரம்பக் கல்வியானது சிறந்த தரத் தில் வழங்கப்படவேண்டுமேயன்றி சிறுவர் மீது திணிக்கப்படும் ஓர் சுமையாகக் காணப்படக் கூடாது. ஒரு மாடிக் கட்டிடத்தின் அடித்தளம் எவ்வளவு உறுதியாக அமையவேண்டுமென எண்ணிப்பாருங்கள். அதேபோல்த்தான் உயர் சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு இளஞ்சிறுவனது மூளை எவ்வாறு செப்பனிடப் படவேண்டுமென்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றதல்லவா?

ஆரம்பக் கல்வியானது மாணவர்களின் தன்னம்பிக்கையைத் தூண்டுவதாகவும், தாழ்வுணர்ச்சியைக் களைவதாகவும், சமத்துவத்தை ஊக்குவிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் வளர்ச்சியின் ஆரம்பகால கட்டத்திலேயே அவர்களின் உடல்நலன், கற்றல் நிகழ்வு, தொழிற்பயிற்சி என்பனவற்றிற்கு திட்டமிட்ட வளப்பகிர்வும் ஊக்குவிப்பும் அவசியமானதாகும். அப்பொழுதுதான் பயனுறுதி மிக்க வினைத்திறனும் சமத்துவமும் கொண்ட சமூகத்தை நிர்மானிப்பதும் பேணுவதும் சாத்தியமாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"



Starting with Yoga Meditation



Maintaining Physical Fitness



Learning Computer



Ready to Cook



Time of Experience



Reading Habit



Time of Experience



School Prefects



Kiddies Group Activities



Grade 10A



Grade 10B



Grade 11A



Grade 11B



Grade 12 Arts



Grade 12 Commerce



Grade 13 Arts

எமது பாதுகாவலியின் யாத்ச்சுவட்டில்

**திரு. ம. இராஜேந்திரம்**
**இளைப்பாறிய ஆசிரியர்**

அன்பின் ஊற்றாம் சிறுமலர் எனப் போற்றப்படும் புனித சின்னத் திரேசா 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி.பி. 1873 – 1897) வாழ்ந்து புனிதர்கள் வரிசையில் மங்காத் தீபமாகப் பிர காசிக்கின்றாள். மிகச் சிறிய வயதில் கார்மேல் சபைக் கன்னியாகித் தனது முன்மாதிரியான வாழ்வு, தன்னலமற்ற சேவை, மற்றவர்களின் துன்பத்தில் உருகும் பண்பு, அனைவருடனும் அன்புடனும் நட்புடனும் உறவாடும் பாங்கு, பரித்தியாக வாழ்வு ஆகிய செயற்பாடுகள் துறவற சபையின் ஏனையோரையும் கவர்ந்தது. மனித சமுதாயத்துக்கு விடுதலையும் நிறை வும் வேண்டித் தன்னையே இறை வனுக்குப் பலிப்பொருளாக்கினாள். 1896ம் ஆண்டில் சிறுமலர் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டிருந்தபோது இறுதியாக "நான் இறந்த பின் மனித குலத்திற்காக இறைவனிடமிருந்து பல வரங்களைப் பெற்றுக் கொடுப்பேன். என்னை முழுவதும் அன்புக்குக் கையளிக்கின்றேன். பாடுபட்ட சொரூ பத்தை உற்றுநோக்கிய சின்னராணி எனும் சிறுமலர் "இறைவா உம்மை நான் நேசிக்கின்றேன். எல்லாம் நிறை வேறிவிட்டது. நான் இறந்தபின் வானத் திலிருந்து றோஜா மலர்கள் பொழி வேன்" எனக் கூறி 30.10.1897ல் 24 வயதேயான சிறுமலர் இவ்வுலகை நீத்துப் புகழுடம்பெய்தினார்.

1923ம் ஆண்டில் 11ம் பத்திநாதர் பாப்பரசரால் "முத்திப்பேறு" பட்டமும் 1925 வைகாசித் திங்களில் "புனிதை" யாகவும் மகிமைப்படுத்தப்பட்டார். பிரான்ஸ் நாட்டிலுள்ள "லிசிப்பு" என்ற நகரில் சிறுமலர் வாழ்ந்த கன்னியர் மடத்துக்கருகில் புனிதையின் பெய ரால் வானளாவ உயர்ந்த பேராலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 1927 மார் கழித் திங்கள் 14ந் திகதி மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலியாக அதே பாப்பரசரால் அறிமுகப்படுத்தப்பட்டார். குழந்தை யேசுவில் அவர் கொண்ட தீராத அன்பின் காரணமாக " குழந்தை யேசுவின் சின்னத் திரேசா" என வேத போதக நாடுகளில் போற்றப்படுகின்றாள்.

இன்றைய நவீன யுகத்தில் புது மையை விரும்பி மாறிவரும் சமுதாயத்தில் கல்லூரியின் பாதுகாவலி சிறுமலரின் நல் வாழ்வும் நற்பண்புகளும் எல்லோருக்கும் எல்லாமாக வாழ்ந்து காட்டிய சீரிய ஒழுக்க நெறிகளும், தியாகம் நிறைந்த பரித்தியாக வாழ்வும் எமது கல்லூரிக்கும் அதிபர், ஆசிரி யர், மாணவர்களுக்கும், சமூகத்துக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்து கல்வி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நிறை வாகநிறைவேற உழைப்பது எம் ஒவ் வொருவரதும் கடமையாகும். அப்பொழுது தான் கல்வியின் முழுப் பயனையும் பெற்றவர்களாவோம்.

இந்த வகையில் கோப்பாய்க் கோட்டத் தில் ஒரேயொரு பெண்கள் கல்லூரியாகத் திகழ்ந்து பிரபல்யம் பெற்று விளங்கும் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதன் வைர விழாவின் நிறைவினை (60வது ஆண்டு) யும் அதனைப் பரிபாலிக்கும் அப் போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்கள் முதன் முதலில் யாழ் மாவட்டத்தில் அச்சுவேலி யில் கால் பதித்த வைரவிழா ஆண்டினை யும் கொண்டாடி மகிழும் இப் பொன்னான ஆண்டில் அதிபராகச் சேவையாற்றப் பாக்கி யம் பெற்ற அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ (அ. கா) பேறுபெற்றவரே! அவரோடு இணைந்து கற்பித்தல், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் உறுதுணை யாகச் செயற்படும் ஆசிரியப் பெருந் தகைகளாகச் சேவையாற்றிய அருட் சகோதரிகள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரையும் விசேடமாக

இப்பாடசாலையினை நிறுவிய பெருந்தகை "சேர்சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர்" அவர்களையும் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்ந்து நெஞ்சாரப் போற்றுவதும் அவர்தம் கனவை நனவாக்குவதும் எம் தலையாய கடமையாகும்.

இங்கு சேவையாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்லூரியின் விருது வாக்கில் இடம்பெற்றுள்ள "உண்மையும் தூய் மையும்" என்ற வாக்கினை ஆழமாகப் பதித்துத் தன்னலமற்ற தியாக மனப்பான்மையுடனும், சேவை மனப்பான்மையுடனும் பாதுகாவலி புனித தெரேசாளின் முன்மாதிரிகையான வாழ்வு, அன்பு, மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகும் பண்பு, அனை வருடனும் நட்புடன் உறவாடும் தன்மை எல் லோருக்கும் எல்லாமாகச் செயற்படும் பாங்கு, சிறு பிள்ளைகளை அன்புடன் அரவணைக்கும் விதம் ஆகிய பண்புகளை தம்முள் வளர்த்து பெற்றோர்கள், கல்விப் புலம் சார் உறுப் பினர்களுடன் சிறந்த உறவினைப் பேணி வருவது கண்கூடு.

கல்லூரிச் சமூகத்தில் " கற்றலும், கற் பித்தலும்" முக்கிய செயற்பாடாகும். இச் செயற்பாடுகள் இரண்டும் எங்கு முழுமையாக நடைபெறுகிறதோ அங்குதான்கல்வியின் முழுப் பயனையும் பெறமுடியும். இதில் அதிபரின் பங்கு மகத்தானது. கல்விசார் செயற்பாட்டில் பாடசாலையை நல் முகாமைத்துவத்துடன் வளர்த்தெடுப்பது அதிபரின் தலையாய கடமை யாகும். இந்த வகையில் " இறைவா உம்மை நான் நேசிக்கிறேன்" என்று புனித தெரேசா கூறிய வார்த்தைக்கிணங்க இங்கு அதிபர், ஆசிரியர்களும் அன்பும், சேவையும் கலந்த பணியிலே மாணவர்களின் நலனுக்காக உழைப் பது மாணவர்களின் சிறந்த கல்விப் பேறுபேறு களிலும், சகல துறைகளிலும் கோட்ட, வலய, மாகாணப் போட்டிகளில் முன்னிடங்களை பெறு வதிலிருந்தும் காணக்கூடியதாயிருக்கின்றது.

புனித தெரேசா எவ்வாறு தோல்வி களையும் வேதனைகளையும், துன்பங்களை யும் கண்டு துவண்டுவிடாது இறைசித்தத் துக்குப் பணிந்த மனதுடன் ஏற்றுச் செயற் பட்டாரோ அவ்விதம் அன்பின் ஊற்றான நல்லதிபரும், பாசத்தினிருப்பிடமான ஆசிரியர் களின் அன்பிலும் புனித தெரேசா மாணவர் களின் முன் என்றும் நல்லரணாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அதனால் இக்கல்லூரி செப வாழ்விலும், தியாகம், ஒருவரொரு வரிடையே புரிந்துணர்விலும், அன்புறவிலும் வெற்றி தோல்விகளை சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்திலும் பாதுகாவலி யின் அடிச் சுவட்டைப் பின்பற்றிப் புகழ் மணம் வீசிப் பிரகாசிக்கின்றது.

இறுதியாக இப்பொன்னான நன்நாளில் கல்லூரியின் முதல் அதிபராகச் சேவை யாற்றிய திருக்குடும்பத்தைச் சேர்ந்த அருட் சகோதரி மேரி றெஜீனா (தி.கு) அவர்களையும் நன்றிப்பெருக்கோடு நினைவுகூர்ந்து, வைரவிழா வாழ்த்துக் கூறுவதோடு இக்கல்லூரி சகல துறைகளிலும் மென்மேலும் சிறப்புற்றோங்கி எக்காலமும் கல்விப் பசியைப் போக்கும் நடுவூர்ப் பழுத்த நல்மரமாக, நற்கனிகளை ஈந்து ஆல்போல் தளைத்து, கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து பவளவிழா, மணிவிழா, நூற்றாண்டுவிழா எனப் பல விழாக்கள் காணப் பலகோடி வாழ்த்துக்கள்.

"புனித தெரேஸ் கன்னியின்
மகிமையை – நாமும் போற்றிடுவோமே
என்றும் வாழ்த்திடுவோமே"

# பெண் விடுதலை

பெண்ணே!
நிலவிலே நீந்திடும்
பெண்கள் வாழும் பூமியில் நீ
நிலங்குடைந்து நிலங்குடைந்து
நிழலின்றிப் போவது ஏனோ!

கணனியில் கால் பதித்து
இவ்யுகத்தை வலம் வரும்
காரிகைகள் பூத்த தேசத்தில் நீ
கருகிப்போய்
நீறாகிப்போவதும் ஏனோ!

ஆணுக்குப் பெண் சமனென்று
தலை நிமிர்த்தி வீரநடையிடும்
மங்கையர் வாழும் மானிலத்தில்
சம்பிரதாயம் எனும் போர்வையில்
சமுதாயம் உனக்கிட்ட விலங்கோடு
வாழும் வாழ்வு
இனியும் உனக்குத் தேவையா!

சிறையில் பூத்த சிறுமலராய்
சேவகம் புரிந்து
கடமை எனும் பதத்திற்காய்
கட்டிலுக்கும் தொட்டிலுக்கும்
அடுப்பங்கரைக்குமாய் வடிக்கும்
கண்ணீர் துளிகளுடன்
கவி பாடுவதுதான் உன் வேலையா!

பெண்ணே!
நிலம் நோக்கிய – நின்
விழிகளை கொஞ்சம்
மேல் நோக்கி நிமிர்த்து
நிழலாகிப் போன நின் வாழ்வு
நிஜமாக மாறட்டும்.

வான வெளியில்
இருளகற்றி ஒளியேற்றும்
சூரிய தேவனைப்பார் - அந்த
ஒளிபட்டேனும் - உன்
விழிகளும் ஒளி வீசட்டும்.

சமுதாயம் உனக்கிட்ட விலங்கொடித்து
வெளியே வா!
சரித்திரம் படைக்க காலம் கனிந்து
கிடக்கிறது
சீரற்ற சமுதாயத்தை சிதைத்தெறி
எழு.

புதியதோர் தேசத்தை
கட்டியெழுப்பு
பெண்ணடிமை ஒழிக்க
உரத்த குரல் கொண்டு கூவு
உலகப் பெண்களுக்காக நீ போராடு
விரைந்து வா
கூண்டின் வெளியே
சுதந்திரக்காற்று உன்னை
மெல்ல மெல்ல
தழுவிச் செல்லட்டும்

**செல்வி. நிஷாலினி குமாரசாமி**
**தரம் 13 கலை (2007)**

# விஸ்கி

விஸ்கி எனது செல்லப்பிராணி. எங்கள் வீட்டிலுள்ள அனைவரும் விஸ்கியில் அன்பாக இருப்பர். விஸ்கி, விஸ்கி என்று கூப்பிட்டதும் அது வாலை ஆட்டிக் கொண்டு துள்ளிப் பாய்ந்து ஓடி வரும். பகற்பொழுதில் கட்டி விடுவோம். அவிழ்த்துவிட்டதும் சந்தோச மிகுதி யால் எங்கள் மேல் கால் போட்டுப்பாயும். அங்கு மிங்குமாக ஓடித்திரியும். "பப்பி பப்பி பாய்ந்து வா, பந்தை வாயில் கவ்வி வா" என்ற பாரதியின் பாடலுக்கு இணங்க பந்துடன் விளையாடும். எமக்குப் பார்க்கச் சந்தோசமாக இருக்கும். பக்கத்து வீட்டு மாமியின் கோழிகளை விஸ்கி கண்டால் விடாது ஓடி ஓடி கலைக்கும். தான் தான் எங்கள் வீட்டுக்காவற்காரன் என்ற நினைப்பு. எங்களுடைய பூனையைக்கண்டால் அதனுடன் விளையாடுவதற்கு விரும்பி அதை உருட்டி உருட்டித் துன்பப்படுத்தும். செல்லமாகக் கடித்து விளையாடும். விஸ்கியின் உருட்டல் அதிகமானால் பூனைக்குட்டி மரத்தின் மீது ஏறியிருந்து மியா மியா எனக்கத்தும். சிறிது நேரங் கழித்து கீழே இறங்கி வந்து விஸ்கியுடன் விளையாடும். பால், பிஸ்கற், மாம்பழம், பப்பாப்பழம் என்றால் விருப்புடன் சாப்பிடும். கட்டி நிற்கும் போது தட்டில் உணவு வைத்தால் தன் முகத்தால் அந்த உணவிற்குள் மண்ணைக்குவிக்கும். அதனால் எங்கள் வீட்டுச் சீமெந்துப்படியில் வைத்துக் கூட்டினால் அடைத்து வைப்போம். எங்கள் வீட்டைக் காவல் செய்யும் நல்ல காவற்காரன் விஸ்கி.

**செல்வி. சரோன் கபோனா தேவநாயகம்**
**தரம் 2A**

**அழிவுக்கு முந்தியது அகந்தை. வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை**

**உன் தந்தையை நீ கண்ணியம் செய். உன் மைந்தன் உன்னைக் கண்ணியப்படுத்துவான்.**

**கல்விக் கூடம் என்பது சமுதாயத்தின் வயல். மாணவர் அதில் வளரும் பயிர்.**

# MY LIFE IN THE SCHOOL

I joined St. Theresa's Girls' College last year. Earlier I studied in a mixed school. Learning in a Girls' school under the strict supervision of a Rev. Sister is quite different .Though the principal is strict she is very kind with the students. We, the students obey the instructions of all the teachers as well as the prefects. The morning assembly is conducted by each class daily and it's the most thing intrigued me in my school.

I like and look forward eagerly for the Literary Association meetings which promote our talents and pave ways for leadership and team spirit. In fact I am very lucky to be a student of St. Theresa's Girls' College.

*By-Miss. T. Satuka*
*GRADE 11A*

பிழையாகவே நினைத்து, பிழையாகவே
அனுமானம் செய்து பிழையாகவே
பேசுகிறவர்கள் பத்துப்பேர் ஒன்று
சேர்ந்தால் சொர்க்கம் கூட நரகமாகிவிடும்.

பொறுமை இதயத்தின் பொக்கிஷம்,
சமாதானத்தின் தூதுவன் வீரத்தின் சிகரம்,
அமைதியின் வாய்க்கால்.

# OUR PRINCIPAL

Rev. Sister Maria Rosario is our principal. She starts the day before dawn. First she attends to the work of her spiritual duty and then comes to school by 7.30 in the morning. She supervises our work and advises us to practice the three Ds in life- Discipline, Dedication and Determination.

Our principal is very much concerned about us to make use of every second to do something useful and important. She is the livewire of our school. She is very active and strict in maintaining discipline. In the mean time she is very generous too who spends her own money on us as well as on the development of our school.

We are proud to have a beautiful garden in front of our school. Our principal looks after it very keenly. She devotes her free time to tend to it. The number of the students increase rapidly after Sister Rosario took over the school. Because of her hard work our school looks so beautiful now. Everyone who visits the school appreciates the beautiful and clean surroundings of our school.


She took a lot of trouble to recruit the much needed teachers. Now we have a good tutorial staff of 30 teachers. May the God give her a healthy and successful life.

*Miss. M.Helen Sobiya*
*GRADE 12 ARTS*

குமுறும் கடலும் பயங்கர சூறாவளியும் என்றோ
ஒருநாள் ஓய்ந்து அமைதி அடையும்.

பெண்களிடம் இருக்கவேண்டியது அடக்கம்,
அன்பு, சகிப்புத் தன்மை, துணிவு, இறைபக்தி

# என் நினைவலைகள்



பார்புகழ் தந்து வரலாற்றில் தடம்பதித்த தனயர்களை தன்னகத்தே கொண்ட அச்சுவேலிப் பதியில் அமைந்துள்ள புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து இவ்வாண்டில் வைரவிழாவைக் கொண்டாடுகின்றது. பாடசாலையின் ஆரம்பகால பழைய மாணவியும் ஒரு ஆசிரியையும் என்ற வகையில் என் நினைவுகளை பின்னோக்கி மீட்டிப் பார்க்கின்றேன். அன்று நடந்தவையெல்லாம் இன்றுபோல் மனத் திரையில் விரிகின்றது.

இங்குள்ள புனித சூசையப்பர் ஆலயத்தின் அருகாமையில் ஒரு தலைமை ஆசிரியரையும், உதவி ஆசிரியரையும் இக்கோயில் பற்று மாணவர்களையும் உள்ளடக்கிய ஒரு சிறிய பாடசாலைதான் இவ்வூர் மக்களின் கல்விக்கூடமாய் அமைந்திருந்தது. 1945ம் ஆண்டு திருக்குடும்ப கன்னியர் மடத்து அருட் சகோதரிகள் இங்கு வருகை தந்தனர். அவர்களின் வருகையைத் தொடர்ந்து புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிலையில்தான் 1946ம் ஆண்டு தை மாதம் 6ம் திகதி புனித தெரேசாள் பாடசாலையென பெயர் பொறிக்கப்பட்ட புதிய பாடசாலையில் பிரவேசிக்கும் பாக்கியம் எமக்குக் கிட்டியது. ஊர் மக்களும் மாணவர்களும் அகமகழ்ந்தனர். மொத்தத்தில் ஊரே விழாக்கோலம் பூண்டது. இருந்த பழைய தளபாடங்களையும் மாணவர்கள் தாமே சுமந்து சென்ற அந்தக் காட்சி இன்னும் நினைவில் நிற்கின்றது. அச்சுவேலி கத்தோலிக்கர்களின் வரலாற்றில் பொன் அச்சரங்களால் பொறிக்க வேண்டிய நாளல்லவா இந்நாள்.

இவற்றுக்கெல்லாம் காரணமானவர் சேர். சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் தான். எனினும் அவரின் பக்கபலமாக நின்றுழைத்தவர்களான திரு. றட்ணநாதர் அவர்களையும், வணக்கத்திற்குரிய பாலசுந்தரம் அடிகளாரையும் இன்றைய சமுதாயம் மறந்துவிடலாகாது. 1947ம் ஆண்டு கார்மேல் சபை சகோதரிகளின் வரவு இப்பாடசாலைக்கு ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்தது எனலாம். அப்பொழுது J.S.C (8ம் ஆண்டு) அரசாங்கப் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றினோம். அதனைத் தொடர்ந்து அருட்சகோதரி சபீனா அதிபராக இருந்தவேளை 1949ம் ஆண்டு இப்பாடசாலையில் இருந்து பத்து மாணவ மாணவிகள் முதல் முறையாக S.S.C(O/L) பரீட்சை எழுதினோம். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி தான் அன்றைய எங்கள் பரீட்சை நிலையம். இப்பாடசாலையின் இன்றைய நிலையுடன் அன்றைய நாட்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றேன். வளர்ச்சி கண்டு பெருமிதம் அடைகின்றேன். பரீட்சைக்குத் தோற்றியவர்களில் நானும், சிவக்கொழுந்து என்னும் மாணவியும் திறமைச்சித்தி அடைந்தோம். மற்றயோர் ஒரு பாடத்தை இழந்தனர். அன்று


அதுவும் ஒரு வகையான திருப்தியான பெறுபேறு தான். சித்தியடைந்த எங்கள் இருவரையும் இன்றுள்ள இதே மேடையில் வைத்து வண. எமிலியானுஸ்பிள்ளை ஆயர் அவர்கள் பாராட்டி பரிசும் அளித்தார்.

நினைவுகள் தொடர்கின்றன. கத்தோலிக்க பாடசாலைகள் யாவும் மறைமாவட்ட நிர்வாகத்தில் இருந்த காலம் அது. சமய சம்பந்தமான விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தது. மரியாயின் சேனையும் வேறுபல கூட்டங்களும் பாடசாலையில் நடைபெற்று வந்தன. அருட்சகோதரிகளுக்கு திருநாள் வந்தால் ஞானப்பூச்செண்டு கொடுப்போம். இப்பொழுது அந்தப் பெயர் கூட இல்லை. உபதேசியாராக இருந்த சந்தியாப்பிள்ளை அவர்களும் மாணவர்களின் மறைவழிபாடுகளில் தலையிடுவார். இப்பாடசாலைக்கு வந்தபின்னும் கூட இருநேர பாடசாலை முடிந்தபின் பெரிய கோயில் சென்று செபம் செய்த பின் வீடு திரும்புவோம். யுத்தபயம் இன்றி நானும் எனது சகோதரியும் சுதந்திரமாக இஸ்டப்படி தெருவால் நடந்து வீடு செல்லும் காட்சி நினைத்தாலே இனிக்கிறது. அந்நாள் மீண்டும் வருமா?

எங்களுக்கு பாடம் கற்பித்தவர்களையும் சொல்லித்தான் ஆக வேண்டும். அருட்சகோதரி கிறிஸ்றிற்றரா (தலைவி) ஏடா, தொமசின், றெஜிஸ் இவர்கள் ஆங்கில பாடத்தை அருமையாக நடத்திய திருமலை மண் தந்த துறவிகள். அவர்களுக்கும் எங்கள் அகவணக்கங்கள் உரித்தாகட்டும். இன்னும் விசேடமாக நான் இங்கு குறிப்பிட விரும்புவது நான், சிவக்கொழுந்து, வினிவிறெட்(வினி) மூவரும் முதற் தடவையாக இங்கிருந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவானோம். அடுத்து பிலோமினா, சூசைப்பிள்ளை (மரியநாயகம்), பரமேஸ் மூவர் இப்பாடசாலையில் இருந்து தெரிவானார்கள். S.S.C அதன் பின் Entrance class அதிலும் சித்தி அடைந்து நேர்முகப்பரீட்சையிலும் தேற வேண்டும்.

அன்று பிரத்தியேக வகுப்புகள் இல்லை. எமக்கு சகலதும் பாடசாலைதான். ஆசிரியர்கள் எங்கள் குரு. மறைந்துபோன ஒருவர் மறக்க முடியாதவர் கல்முனையைச் சேர்ந்த மேரி ரீச்சர். உருவமும் மறக்கவில்லை. ஆசிரிய உலகத்தின் எடுத்துக்காட்டு. கலைக்கும் ஓர் நிகழ்ச்சி. இன்று அருட்சகோதரியாய் இருக்கும் ஜெறோம் அவர்களும் ஞானம், பிலோமினா இருவரும் இணைந்து ஆடிய நடனம் கூட்டுறவு விழாவில் 1ம் இடத்தை பெற்றுக் கொண்டது. இந்த என் நினைவுகள் எல்லாம் 1950 உடன் முடிவு பெறுகின்றது.

**திருமதி. பிறிஜெட் மரியாம்பிள்ளை**
**பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியையும்**




M Y K



Net Ball - Under 19



Net Ball - Under 17



Band-1



Band-2



P.T. Winners - 2003




Band-3



P.T. Winners - 2004



P.T. Winners - 2005



P.T. Winners - 2006



P.T. Winners - 2007

# மனமகிழ் நடனக் கலை

**செல்வி. து. சித்திரகலா**
**நடன ஆசிரியை**

மனம் மகிழ் மங்காக் கலை
மாந்தருள் இனிய கலை
நடனபிரான் கண்ட நடனக்கலை
பரதர் தந்த சாஸ்திரத்தால்
பண்பட்டது பரதக் கலை
இதனால் பார்போற்றப் பரந்து
கலையுணர்வு கொண்ட
கலைஞர்களின் வழிகாட்டலில்
கலைக்கூடங்கள் பல கண்டன
கற்றலுக்கு உகந்த கலைகளுள்
பரதமும் கல்வியாய் அமைந்தது
கடமை தவறா ஆசான்களால்
பரதம் இன்று பார்போற்ற மிளிர்கின்றது.
இக் கலைக்கு உரமிட்டு வளர்த்த
ஆசான்களை இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

# நினைவுப் பதிவேடுகளிலிருந்து.............

என்னை வளர்த்தெடுத்து, வெற்றி நடை போடத் துணைபுரிந்த என் பாடசாலை இன்று அறுபதாவது யூபிலி ஆண்டைக் கொண்டாடு வதில் நான் பெருமையும் மகிழ்வும் கொள் கிறேன். கன்னியர் கைகளில் குழந்தையாய் தவழ்ந்து உண்மையும் தூய்மையும் கற்று உயர்ந்து நிற்கும் நாம் எமது தாயின் யூபிலியைக் கொண்டாடிக் கொண்டாடுவதில் மனம் பூரிப்படைகின்றோம்.

சொல்வதற்கு பலவுண்டு ஆயினும் சில வற்றைக் கூறுகிறேன். நான் சின்னஞ்சிறு பராயத் திலே தந்தையின் கைபிடித்து என் முதல் அடியை அன்று வைத்தேன். அன்று நான் தரம் ஒன்றில் கல்வி பயிலும் போது அருட் சகோதரி எத்தல்வீவா அவர்கள் அதிபராக இருந்தார். ரோஜாச் செடிகளுடன் பேசி அழகிய ரோஜா மலர்களைப் பெறுகின்ற, அரவணைப்பும் அன்பு மொழியும் கொண்ட அவரை என்னால் மறக்க முடியாது. நான் “அ” கரம் கற்ற அந்த நாள் ஞாபகத்தில், எனது அருமை ஆசிரி யையைக் கண்டால் என்றும் என் மனம் நன்றி சொல்லிக் கொண்டே இருக்கும்.

சிறுவயதில் கற்பிப்பது கடினம். கல்வி சொல்லித்தந்த அத்தனை ஆசான்களும் என்னைப் பெற்றெடுக்காத தாய்மார். அடித்தளம் ஒழுங்காக இருந்தாலே நிலையான சுவர் எழுப்ப முடியும். கணித பாடத்தை சிறுவயதில் கற்றுக் கொடுத்த ஆசிரியையின் நினைவு நெஞ்சை விட்டகலாது.

ஆரம்பக் கல்வியை முடித்து இடைநிலைக் கல்வியை கற்கும் காலம் அது. பாடசாலைக் காலைக்கூட்டம் வகுப்பு ரீதியாக நடைபெறுவது வழக்கம். எமது வகுப்பாசிரியையின் வழிநடத்து தலில் எமது வகுப்பு மாணவிகளும் காலையில் கூட்டம் நடத்தும் வேளைகளில், சகமாணவி களதும் ஏனைய மாணவர்கள் பயன் பெறும் வகையில் தரமான நிகழ்வுகள் செய்வோம். அதிபர் அவர்களின் பாராட்டுதல்களைப் பெறு வோம். அவ்வாறு காலைக் கூட்டம் நடாத்தும்போது தலைமைத்துவப் பண்புகளை நான் வளர்த்துக் கொண்டேன். காலைக்கூட்ட நிகழ்வுகள் தான் என்னை இந்த நிலைக்கு உயர்த்தியது என்பதில் நான் பெருமைப்படுகின்றேன்.

தரம் 10ல் கற்றுக்கொண்டிருக்கும் நேரம் அது. என்னால் மறக்க, முடியாது அந்த நாள் நிகழ்வுகள். தமிழ் மொழியும் இலக்கியமும் பாடம் தொடர்பான பாடத்தினைக் கணிப்பீடு நடைபெற ஆயத்தமானோம். அழகிய தமிழில் கணினிப் பொறியில் வடித்தது போல அதிபர், உபஅதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுத்து பாடசாலை பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த இடத்தில் நான் தரம் 11ல் சிறந்த பெறு பேற்றைப் பெற்று இப்பாடசாலையிலேயே உயர் தரம் கற்பேன் என உறுதிமொழி கூறினேன்.

ஒவ்வொரு படியும் திறமையுடன் நடத்தி சென்று என்னை தரம் 11ல் ஏற்றிவிட்டனர். போட்டியுடன் கல்வி கற்க வழியும் பிறப்பித் தனர். அவர்கள் ஒவ்வொருவரதும் அன்பான கற்பித்தலிலே, அரவணைப்பான பேச்சிலே அன்று என்னால் திறமையான பெறுபேற்றைப் பெற முடிந்தது.

இப்பாடசாலை தான் என்னை வளர்த்து விட்டது. “என்னால் பெருமை வர வேண்டு மானால் இப்பாடசாலைக்கே சேர வேண்டும்” என்று நினைத்து உயர்தரக் கல்வியை இப் பாடசாலையிலே தொடர்ந்தேன். சிறுகதைப்

போட்டி, வில்லுப்பாட்டு, குறுநாடகப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி, விளையாட்டு நிகழ்வுகள் என்று பல நிகழ்வுகளில் கலந்து மாகாண மட்டத்திலும் வெற்றி பெற இப்பாடசாலை துணைபுரிந்தது. நகரப் பாடசாலை என்று சென்றிருந்தால் இவை கிடைத்திருக்குமா?............ பாடசாலை முதன்மை மாணவத்தலைவியாகப் பதவியேற்று கடமைகளைச் செய்தேன். ஒரு முறை அருட்சகோதரி மரியரோசாறியோ அவர் களுடன் நான் மட்டுமே தனியே வேலைசெய் தேன். வேறு எந்த மாணவிகளும் நேரத்துக்கு வரவில்லை. அன்றைய நிகழ்வில் உரையாற்றும் போது அவர் "இன்று என்னுடன் தசோனியா மட்டும் கஷ்ரப்பட்டு வேலை செய்தார்" என்று தன் கண்களில் கண்ணீர் வர கூறினார். " ஆண்டவர் என்னை ஆசீர்வதித்தார் இவர் கண்ணீரால்" அந்த ஓர் நாள் நான் அதிபர் மனதில் இருக்கிறேன். என்ற எண்ணம் என்னை அறியாமலே எனக்குள் வந்தது.

தாயாய் அரவணைத்து "உலக நடை முறை இப்படித்தான், நாங்கள் நாமாக இருக்க வேண்டும்" என்ற பாடத்தோடு வாழ்க்கையையும் கற்பித்தார், எம் வகுப்பாசிரியர். அவர்களின் பிள்ளைகளாய் வாழ்ந்தோம். நட்புடன் பழகிய நினைவுகள் என் கண்களைக் கலங்க வைக் கிறது. எமது ஆசிரியர்கள் நன்றாகக் கற்பித் தனர். நாமும் சிறப்பாக கல்வி பயின்றோம். ஒரே அமர்வில் நான் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானேன். நான் மட்டுமல்ல இன்னுமோர் மாணவியும் தான். பல திறமையான பெறு பேறுகள் கிடைத்தன யூபிலி ஆண்டில். இன்று நான் அச்சுவேலி மக்கள் வங்கியினால் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடன் சேர்ந்து வங்கி வேலைகளைப் பயில்கிறேன். இது எனது வெற்றியின் 3ம் படி.

கண்டிப்பானபேச்சும், கனிவான அர வணைப்பும் கொண்ட எம் அதிபர், எனக்கு தினமும் "தோழமைக்கு இடம்கொடு, ஆனால் கடமை நேரங்களைத்தவிர" என்று கூறுவார். அன்று எனக்கு புரியவில்லை இன்று தெளி வாகப் புரிகிறது. ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு திருத்தமும் என் முன்னேற்றப்படிகள். அவற்றை அளித்த என் அருமை ஆசிரிய ஆசிரியர்கள் எனக்கு தெய்வங்களே.

அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், ஆசிரி யைகள் அனைவரது ஆசியுடன் நான் வளர்ந் துள்ளேன். நான் தெரியாமல் செய்த பிழை களை மன்னித்து ஆசியும் அருளும் புரிந்த உங்கள் நினைவுகள் என் இறுதிக்காலம் வரை என் இதயத்தில் மீட்டுக் கொண்டிருக்கிறது எங்கு சென்றாலும் என் பாடசாலைக்கு என்னா லான பணி எப்போதும் உண்டு. இந்த வசந்த கால நினைவுகளில் என் இதயத்தில்பதிந்த நினைவுகள் என் வாழ்வின் பொற்காலம்.

**செல்வி. தசோனியா துரைராஜா**
**பழைய மாணவி.**

# சங்க இலக்கியங்கள் சுட்டும் பண்பாட்டுக் கோலங்கள்

திருமதி. ந. ஞானலிங்கம்
(B.A Dip in Edu.)

உயரிய பண்பாட்டுக் கூறுகள் உலகம் முழுவதற்கும் பொதுவான ஒன்றாகும். மாந்தர் தம் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் கலையுணர்வுகள், நீதிமுறைகள், வழிபாட்டு நெறிகள் முதலியவற்றில் அவர்களுடைய பண்பாடு மிளிர்கின்றது, மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது அவர்கள் கைக் கொள்ளும் பண்பாட்டுக் கூறுகளே.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்தலும், அமுதமே கிடைப்பினும் பிறருக்குக் கொடுத்து தாம் உண்ணுதலும் பண்பாடு மிக்கவர் இயல்பு, எளியோரிடத்தில் இனிமையாகப் பேசுவதும், அயலவரை விருந்தோம்புவதும் இரப்போர்க்கு இடுவதும். இயன்றவரை பிறருக்கு உதவுவதும், கொள்கையும் மானமும் கெடின் உயிரை விடுவதும், கொண்டவனைத் தெய்வமாகப் போற்றுவதும் தமிழரின் பண்பாட்டுக் கோலங்களில் குறிப்பிடதக்கவையாகும். இத்தகைய தமிழர் பண்பாடு "சங்க இலக்கியங்களில்" செறிந்துள்ளன.

கி.பி. 1ம் நூற்றாண்டு தொடக்கம் 3ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலம் எனக் கருதப்படும் சங்க காலத்திலே தோன்றிய இலக்கியங்களே சங்க இலக்கியங்கள். தமிழர் வரலாற்றில் புதியதொரு திருப்பு முனையை ஏற்படுத்திய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற சங்க இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டுக் கோலங்களை படம் பிடித்துக் காட்டுகின்றன.

தமிழர் பண்பாட்டில் முதன்மையானவை சமூகப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கலையுணர்வுகள், நீதிநெறிகள், வழிபாட்டு நெறிகள் முதலானவை சங்க இலக்கியம் கூறும் சமூகப் பண்பாட்டில் முதன்மையானதாக விருந்தோம்பல் காணப்படுகின்றது. இது தமிழர் பண்பாட்டு வாழ்வோடு இணைந்தும் இயைந்தும் விளங்கும் கூறுகளில் ஒன்றாகும். முன்பின் அறிமுகமில்லாதோரை விருந்தோம்பலும் இருப்பதனைப் பகிர்ந்துண்ணலும் தமிழர் பாண்பாட்டின் இரண்டறக் கலந்ததொன்றாகும். இது இல்லற மாண்பு, மகளிர் மாண்பு, வாழ்வியல் நெறி, அற நெறி. சமூகவியல் பண்பு என அழைக்கத் தக்கவாறு நீண்ட பாரம்பரியம் கொண்டதாக விளங்குகிறது.

"வனபுலக் கேளிற்கு வருவிருந்தயரும்
மென்புல வைப்பினன்னாட்டுப் பொருந"

என்பதனூடாக புலவர் ஒருவர் அரசனை வன்புலத்திலிருந்து வந்த சுற்றத்தார்க்கு விருந்தாக விரும்பிக் கொடுக்கும் மென்புலத் தூர்களையுடைய நல்ல நாட்டு வேந்தே என புகழ்வதும்.

"சிறியகட் பெறினே எமக்கீயுமன்னே பெரியகட்
பெறினேயாம் பாடத் தாம் மகிழ்ந்துண்ண மன்ன"

என்பதனூடாக பகிர்ந்துண்ணும் பண்பையும் தமிழர் பண்பாட்டுக் கோலங்களின் சமூகப் பழக்க வழக்கங்களில் ஒன்றாக விருந்தோம்பல் சங்க இலக்கியத்தில் பெறும் முக்கியத்துவத்தை உணரலாம்.

நாள் பார்த்தல், தமிழர் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்த தொன்றாகவே காணப்படுகின்றது. இதனை திருமண முறைகள் ஊடாக அறிய முடிகின்றது. சங்க காலத்தில் திருமண முறை தீய கிரகங்கள் இடம் விட்டு நீங்க சந்திரன் உரோகினியோடு சேரும்

நன்நாளிலே திருமணப் பந்தலில் புதுமணம் பரப்பி, பூ மாலை தொங்கவிட்ட திருமணம் நடைபெறும். அத்தோடு முதிய பெண்கள் தம் தலையில் நீரக்குடம் ஏந்தி முன்னும் பின்னு மாக அவற்றை மாறி மாறிக் கொடுக்க புதல் வரைப் பெற்ற பெண்கள் நால்வர் கூடி "இவள் கற்பு நெறியினின்று வழுவாமல் தன் கொண்டவன் விரும்பத்தக்க மனைவியாகுக" என வாழ்த்தி மணமகளை நீராட்டுதலும் மண மகளின் பெற்றோர் "நீ பெரிய இல்லக்கிழத்தி யாகுக" என வாழ்த்துதலும் சங்ககால சமூகப்பழக்க வழக்கங்களில் சிறப்பானது.

நம்பிக்கைகளும் சங்க இலக்கியங்களில் பண்பாட்டுக் கோலங்களோடு பின்னிப் பிணைந் துள்ளன. குரவைக் கூத்து, வெறியாட்டு விழா, நடுகல் வணக்கம், என்பன நம்பிக்கைச் சின்னங் களாகும். குரவைக் கூத்து வெறியாட்டு விழா என்பன நோய் நீங்கவும் நடுகல் வணக்கம் இறந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் சங்க இலக்கியங்களில் போற்றப்படுகின்றன.

கலையுணர்வுகளும் சங்க இலக்கியங் களில் மேலோங்கிக் காணப்படுகின்றன. "ஆய கலைகள் அறுபத்து நான்கு" இதில் பெரும் பாலான கலைகள் சங்க காலத்திலேயே முளை விடத்தொடங்கியதைச் சங்கப்பாடல்கள் எடுத் துரைக்கின்றன. இசை, நடனம், இக்காலத்தில் சிறந்து விளங்கியது. இசைச்சங்கமொன்று பண்டைக்காலத்தில் இருந்ததென்றும், அதில் பல புலவர்கள் இசைப்பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்கள் என்றும் பரிபாடல் கூறுவதும் சங்க காலத்தில் முக்கியம் பெற்ற பாணர் யாழ் வாசிப்பதும், பாடினி ஆடுவதும் யாழின் வருணனைகளும் பொருநராற்றுப்படை, மலை படுகடாம் ஊடாக அறிய முடிகிறது.

சங்க காலத்தில் நாடகவியலும் முக்கியம் பெற்று விளங்கியது. சங்கப்புலவர் செய்த பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குண நூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் சடத்த நூல் என்பன இன்று கிடைக்கா விடினும் அவர் தம் நாடகப்புலமையினைக் காட்டி நிற்கின்றன.

சங்க இலக்கியங்களில் ஓவியக்கலை யெனும் சித்திர சாஸ்திரம் மிகவுயர்ந்த நிலையிலிருந்தது. இதனை மதுரைக்காஞ்சி

"எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்"

என்பதனூடாக எடுத்துக்காட்டுகின்றது. மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப் பட்டிருந்தன. இதனை "மாடக்குச் சித்திரமும் விளங்குகிறது. அத்தோடு மனதிலொரு உரு வத்தைக் குறித்துக்கொண்டு பின்பு வண்ணங் களை அமைத்து அதனை அழகுபடுத்தும் புனையா ஓவியங்கள் இருந்ததை நெடுநல் வாடை எடுத்துக்காட்டுகின்றது.

அக்காலத்தில் சித்திரக்கலையும் சிறப்புப் பெற்றிருந்தது. மண், செம்பு, பொன், உலோகம், கல், மரம் போன்றவற்றால் சிற்பங்கள் அமைக் கும் வழக்கம் காணப்பட்டது. பொன், வெள்ளி நவமணிகளால் செய்யப்பட்ட ஆபரணங்களை ஆண்களும், பெண்களும் அணிந்தனர். கை, கால், கழுத்து, தலை என்பனவற்றில் அணி கலன்கள் அணியப்பட்டன. காலில் மட்டும் பரியகம், நூபுரம், படகம், சதங்கை, காற்சரி என்ற அணிகலன்களை கலையுணர்வோடு அணிந்தனர். சங்க இலக்கியமான திருமுருகாற் றுப்படை முருகன் பல ஆபரணங்களை அணிந்ததாக கூறுகிறது.

நெய்தல் தொழிலும் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்தது. பருத்தி, பட்டு, செய்யப்பட்ட ஆடைகளும், ஆட்டுமயிர் எலிமயிர் கொண்டு நெய்யப்பட்ட கம்பளங்களும் நிற, நிற ஆடை வகைகள் பற்றியும் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஊடாக அறிய முடிகிறது. புறநானூறு

"நீலக்கச்சை பூவாராடை" எனவும் பொருநராற்றுப்படை "கொட்டைக்கரைய பட்டுடை" என்றும் குறிஞ்சிப்பாட்டு "அவிர் துகில் புரையும் அவ்வெள்ளருவி" எனவும் "இழை ஓடிய வழி இன்னது என்று பார்வைக்கு அகப்படாத மெல்லிய ஆடைகள் நெய்யப் பட்டதாக பொருநராற்றுப்படை கூறுகின்றது.

சோதிடம், நிமித்தம் பார்த்தல், தமிழர் பண்பாட்டில் சிறப்பானது. இவர்கள் காலக்கணிதர் என அழைக்கப்பட்டனர். அரசர் போருக்குச் செல்லும் போது நற்சொல், காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பதுண்டு. கட்டுவிச்சி வாளால் கட்டுப்பார்த்தல், கழங்கு பார்த்தல் சங்க இலக்கியங்களில் பேசப்படுகிறது.

சங்க பண்பாட்டுக் கோலங்களில் வான சாஸ்திரப் பயிற்சியும் ஒன்றாக இருந்தது. சந்திரன் பரிவேடங்கொள்ளுங் காலத்திலேயே குறிஞ்சி நிலத்தவர் மணஞ்செய்வர்கள். அவ்வாறு அரசர் பிரதானிகள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடும் வழக்கம் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப்புலவர்களும் இருந்ததை சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. மூலிகை ஆய்வு, தமிழ் வைத்தியம், சித்த வைத்தியம் பண்டைக்கால தமிழ் நாட்டினைப் பின்பற்றி பின் தோன்றிய அறிஞர்கள் கைக் கொண்டனர்.

கட்டடக்கலையும் இக்காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது. நகரங்களில் வீதிகள், சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் காணப்பட்டன. மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி மாநகர், காஞ்சி போன்ற நகர அமைப்புக்கள் நாளங்காடி, அல்லங்காடி, பண்டக சாலைகள் எம் பண்டைய தமிழகம் வீரலஷ்சுமி மகிழ்ந்து விளையாடிய களம் என நிருபித்தவர்கள் சங்க காலப் பெண்கள் .

இல்வாழ்க்கை அம்சங்களான அன்பு, குழந்தை, கொடை, நட்பு, செல்வம், கற்பு என்பனவும் பண்பாட்டுக் கோலங்களாக விளங்கின.

"அன்பும் மடனும் சாயலும் இயலும் என்பு நெகிழ்க்கும்"

என அன்பு பற்றி அக நானூறும் "குறு குறு நடந்து சிறு கை நீட்டி" என குழந்தையின் அழகை புறநானூறும் "ஆன்ற கற்பின் சான்ற பெரியன்" என கற்புப் பற்றி குறுந்தொகையும் சிறப்பிக்கின்றன.

"மழை வளந் தரூஉ மாவண்டித்தன் பிண்ட நெல்லின் உறந்தையாங் கண்"

என்பதும் (சித்தன் கொடையை) பாரி, காரி, சிபி என்பவர்களது கொடைகளும் நட்பும் போற்றப்பட்டதை அகநானூறு

"நானும் நட்பு இல்லோர்த்தேரின் யானதில்லை இவ்வுலகத்தானே"

என்பதும் சங்க காலத்து நட்புக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

சங்க காலத்தின் மின்னி மிளிர்ந்த பண்பாட்டுக்கோலங்கள் மக்களின் வாழ்வியலோடு இரண்டறக்கலந்து சங்க காலத்தை சிறப்பித்தன என்பது வெள்ளிடை மலை, சங்க காலப் பண்பாட்டுக் கோலங்கள் பிற்கால மக்கள் வாழ்க்கை விழுமியங்களுக்கும் வழிகாட்டுவனவாய் அமைந்துள்ளன.

# Doners & Benefactors









# Our Memories







# Our Achievements







# Different Activities



# Theresians Called to serve the Lord

01. Sr. M. Jerome A.C
02. Sr.M . Punitham A.C
03. Sr. M. Prudencia A.C
04. Sr. M. Catharine George A.C
05. Sr. Merici Angela A.C
06. Sr. M. Henrielle A.C
07. Sr. M. Ethelviva A.C
08. Sr. M. Therese Ranee A.C
09. Sr. M. Vilma A.C
10. Sr. M. Constantine A.C
11. Sr. Marie Florence A.C
12. Sr. M. Rosemalar A.C
13. Sr. M. Theresilda A.C
14. Sr. M. Delarose A.C
15. Sr. Mariamalar A.C
16. Sr. M. Gertrude A.C
17. Sr. M. Lucrease A.C
18. Sr. M. Rosalind A.C
19. Sr. M. Sebamalar A.C
20. Sr. M. Niranjali A.C
21. Sr. M. Arul Maria A.C
22. Sr. M. Shanthini A.C
23. Sr. M. Jeyabalahi A.C
24. Sr. Vilma F.M.M
25. Sr. Idá H.C
26. Sr. M. Shamila A.C
27. Sr. M. Helen Theresa A.C
28. Sr. M. Assumptina A.C
29. Sr. M. Pushparani A.C
30. Sr. M. Vijaya A.C
31. Sr. M. Fatimanayahi A.C
32. Sr. M. Sebasti A.C
33. Sr. M. Margret Moses A.C
34. Sr. Angelini A.C
35. Sr. M. Ajantha A.C

## *Theresians Colled to Priesthood (Serve as priests)*

01. Rev. Fr. J.P. Selvarajah
02. Rev. Fr. Patrick Gnapragasam
03. Rev. Fr. C. Jeyakumar
04. Rev. Fr. A. Arulrajah
05. Rev. Fr. A. Eric Roshan

# TEACHER PUPIL INTERACTION

*Mrs. T. Parimelalakapillai*
*Teacher - English*

Today children in a school are separated into classes and the teaching –learning process are carried out in these classes. All communications and discussions that take place between the teacher and the students within a classroom may be called teacher-pupil interactions.

There are two models or methods of maintaining these relationships.

I . Traditional Methods

II. Modern Methods

The traditional method of establishing teacher – pupil interaction in the teaching – learning consists of 6 stages.

1. The teacher begins the lesson. The lesson is introduced by the teacher, and it is developed by him /her.

2. Students will participate in the lesson. They will listen to the teacher's lesson or will pay attention to what he does.

3. Students will gain knowledge and skills pertaining to the lesson. They will understand the facts and make them meaningful.

4. The expected outcome of the lesson will result through the responses and the performances of the students.

5. By evaluating the responses and the behaviour of the students ,the teacher will get a feedback.

6. The teacher will experience satisfactory results of his teaching through the student's responses that were exhibited during the evaluation.

The modern method in teacher- pupil interaction carried out in the teaching-learning process is called 'Learning to Learn model'. This has been developed and is quite different from the traditional method. In this system there are six stages.

1. Students will begin the lesson. They will reveal their experiences ,abilities interests,needs,and ideas.

2. The teacher will observe children's behaviour and responses. He will study them and classify and interpret them.

3. The teacher will plan learning activities and prepare for teaching on the basis of the experiences that he has received through the study of student's responses.

4. Students will participate in the lesson. The teacher will concentrate on the differences within a child and those among children, and organize learning activities accordingly. Students will gain experience and understand the subject knowledge and interpret them.

5. Students will get the opportunity for leadership, creativity development of concepts and ability to interpret them.

6. There is provision for observation of students' behaviour and responses. There is complexity in them. It makes provision, for further activities and investigation. Students are motivated for further activities. They are learning to learn. The success of the lesson is not assessed simply through the evaluation of students' responses.

This new model helps the students in the development of their learning experiences. Teachers should be aware of new methods and make the teaching-learning more meaningful and effective

# பழைய மாணவி ஒருவரின் பதிவில்

அறுபதாவது அகவையை நிறைவு செய்து வைரவிழாக் கண்டு மகிழும் என தன்பின் கலைக் கூடமே உன்னை வாழ்க வளர்க எனப் பெருமையுடன் வாழ்த்துவதில் பேருவகை கொள்கிறேன்.

அன்று அம்மாவின் பின்னே அழுகையோடு அப்பள்ளி நோக்கி வந்த என்னை அன்றைய அதிபர் அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ்மேரி அவர்கள் என் கையைப் பற்றி அணைத்துக்கொண்டு அழைத்துச் சென்ற அந்த நிகழ்வை இன்றும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அன்றிலிருந்து என் அறிவை வளர்ப்பதற்குப் பல ஆசான்களால் கல்வி என்னும் பால் ஊட்டப்பட்டது. கல்வியில் வளர்ந்தேன். இக்கல்லூரியின் படிப்பு முடிந்ததும் மேற்படிப்புக்காக மகிழ்வோடு வெளியேறினேன். ஆனால் தாய் வீடு விட்டுப் பிரிந்த சேய் போலத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வெளியேறினேன். வேறு கல்லூரி சென்றேன். பல்கலைக்கழகம் புகுந்தேன். இன்று கனடா நாட்டில் மொன்றியல் நகரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவரோடு நான் மட்டும் ஒரு தமிழ்ப் பெண்ணாய் உயர் பதவியில் பணியாற்றி வருகிறேன்.

எனதன்பின் கலைக்கூடமே! எங்கு சென்றாலும் எப்படி வாழ்ந்தாலும் உன்னுடன் வாழ்ந்த அந்த நாட்கள், அந்தப் பசுமையான நினைவுகள், ஓடிவிளையாடிய அந்த மைதானம், இளைப்பாறிய வாகை மரங்கள் இவையெல்லாம் மறக்கக் கூடியவையா? அன்று ஆசிரியையாக என்னைக் கற்பித்த அருட் சகோதரி றோசாறியோ அவர்கள், வைரவிழாக் கொண்டாடும் இந்நேரத்தில் அதிபராக இருப் பதும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆகவே என் அன்பின் கலைக்கூடமே! ஓர் அறுபது என்ன இன்னும் பல அறுபதுகள் கண்டு ஒரு புகழ் மிக்க கல்லூரியாக விளங்குவாய் என வாழ்த்தி, உன்னிடம் கல்வி கற்கும் மாணவர்களையும் சிறப்பானவர்களாக உருவாக்குவாய் என்று நம்பி நிற்கின்றேன்.

**திருமதி. றுஷ்யந்தி மரியற்றா. யூலியன் பிறட்றிக்,**
**(B.Sc Hons)**
**மொன்றியேல், கனடா**

**எவ்வளவு படிக்கிறோமோ**
**அவ்வளவு சிந்திக்கவேண்டும்.**
**எவ்வளவு சிந்திக்கிறோமோ**
**அவ்வளவு படிக்க வேண்டும்.**

# வசந்த காலம் திரும்புமா.........?

வார்த்தைகள் பல கோடி கொண்டு வாழ்த்துக்கள் பல பல கோடி கூறி இன்று யூபிலி ஆண்டைக் கொண்டாடும் எனது பாட சாலைக்கு வந்தனங்கள். நான் பெருமையும் சந்தோஷமும் அடைவது என் பாடசாலை வளர்ச்சியின் ஏணிப்படி கண்டு.

கோப்பாய்க் கோட்டத்திலே அன்று தொட்டு இன்று வரை ஒரே ஒரு பெண்கள் பாடசாலையாக எமது கல்லூரி ஒளிவிட்டு பிரகாசிக்கின்றது. அந்த ஒளியில் ஆயிரம் பிள் ளைகள் அடைக்கலம் கொண்டனர். அவ்வாறு அடைக்கலம் கொண்டவர்களில் நானும் ஒரு வர். பழைய நினைவுகள் பசுமையானவை தான் ஆனாலும் கல்லூரி வாழ்வென்பது மிக மிகப் பசுமையானது. ஒருமுறை மட்டுமே வாழ்வில் கிடைக்கக் கூடியது. அந்த நாட்களில் என் மனதைத் தொட்ட சம்பவங்களைச் சொல்ல இடம் போதாது.

எனது கல்லூரி வாழ்வின் ஆரம்பமும் இறுதியும் ஒரே பாடசாலையிலே தான். எனது திறமைகள், ஆற்றல்கள் அத்தனையையும் கொடுத்தது என் கல்லூரியே. ஆறு வயதில் என்னைப் பெற்ற தாயுடன் என் வளர்ச்சியைத் தந்த இன்னொரு தாயிடம் அடைக்கலம் புகுந்தேன். நான் அடைக்கலம் புகுந்தபோது அதிபராக இருந்தவர் அருட்சகோதரி எத்தல்வீவா அவர்கள். கண்டிப்பும், கனிவும் கொண்ட இவர் பூமரங்களை நாட்டுவதிலும் ஆர்வம் கொண்டவர். ஒன்றுமே தெரியாமல் சென்ற என்னை ஆசிரியர்கள் அன்போடு அரவணைத்து ஒவ்வொன்றாகக் கற்றுக் கொடுத்தனர். “இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்பது போல, சிறு வயதிலே அவர்கள் கற்றுக் கொடுத்ததனால் இன்று எனது வாழ்வு நிறைவாக உள்ளது. வீட்டில் முதலாம் பிள்ளையாக வரவேண்டும் என்று சொல்லும் போது அதை நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்தது ஆசான்களே.

காலங்கள் உருண்டோடின சாதாரண தரப் பரீட்சை எழுதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றேன். உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் படிக்க ஆர்வம் கொண்டேன். இவ் ஆர்வத் தினை இப் பாடசாலையிலேயே தொடர்ந்து பயில எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத் தவர் தற்போது அதிபராக இருக்கும் அருட் சகோதரி மரிய றோசாறியோ அவர்கள். கண்டிப்பும், கனிவும் கொண்ட அருட்சகோதரி பாடசாலையின் பல முன்னேற்றங்களுக்கு காரணமானவர். ஒவ்வொன்றிலும் ஒழுக்கத் தைக் கடைப்பிடிப்பவர். சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகள் பலரும் வேறு பாடசாலைக்கு சென்று விட்ட போதும் நான் மட்டும் வேறு பாடசாலைக்கு செல்லவில்லை. காரணம் அதிபர் இப்பாட சாலையிலேயே வர்த்தகப்பிரிவை ஆரம்பித்து தருவதாக வாக்குக் கொடுத்திருந்தார். அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதையே ஆவலாகக் கொண்டு மாகாண, கல்வித் திணைக்கள பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு வர்த்தகப் பிரிவை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்று தனது வாக்குறுதியை நிறைவேற்றினார். நானும் இன்னொரு மாணவி யும் ஆர்வத்தோடு பயின்று மூன்று பாடங் களிலும் சித்தியெய்தினோம்.

பாடசாலைக் காலங்களிலே கோட்ட மட்ட, வலயமட்டத்திலே தமிழ்த்தினப் போட்டி, கணித விஞ்ஞானப் போட்டி, ஆங்கிலதினப் போட்டி, உடற்பயிற்சிப்போட்டி இன்னும் பல போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றியீட்டி னேன். சிரேஷ்ட மாணவத் தலைவியாகவும், “பான்ட்” தலைவியாகவும் பாடசாலையில் தெரிவு செய்யப்பட்டேன். இக் காலங்களில் எல்லாம் அதிபரினதும், ஆசிரியர்களினதும் செல்லப்பிள்ளையாக திகழ்ந்தேன். இன்று அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையிலே பணியாற்றுகின்றேன். இப் பெருமைகளை யெல்லாம் ஈட்டித்தந்த எனது பாடசாலைக்கு என் பணி எங்கிருந்தாலும் தொடரும். இப்படி யான வசந்தகாலம் எனது வாழ்வில் மீண்டும் திரும்புமா.....?

**செல்வி. அலக்சியா எட்வின் ஜோர்ச்**
**பழைய மாணவி**

# The A.C Sisters who rendered their dedicated services to our College

01. Sr. M. Alocoque A.C
02. Sr. M. Sabina A.C
03. Sr. M. Everilda A.C
04. Sr. M. Christita A.C
05. Sr. M. Regis A.C
06. Sr. M. James A.C
07. Sr. M. Thomasine A.C
08. Sr. M. Calistra A.C
09. Sr. M. Fidelina A.C
10. Sr. Stanislaus Mary A.C
11. Sr. M. Antonina A.C
12. Sr. Marie Louise A.C
13. Sr. Cecilia Mary A.C
14. Sr. M. Lilyosa A.C
15. Sr. M. Carmelinda A.C
16. Sr. Lisa A.C
17. Sr. M. Louralia A.C
18. Sr. M. Lourinda A.C
19. Sr. M. Erica A.C
20. Sr. M. Trasilla A.C
21. Sr. M. Leonor A.C
22. Sr. M. Cinthia A.C
23. Sr.M. Inesia A.C
24. Sr. M. Therese Grace A.C
25. Sr. M. Christella A.C
26. Sr. M. Ethelviva A.C
27. Sr. M. Rosario A.C
28. Sr. M. Henrielle A.C
29. Sr. M. Enid A.C
30. Sr. M. Rosemalar A.C
31. Sr. Mariamalar A.C
32. Sr. M. Therese Noeline A.C
33. Sr. M. Vinodha A.C
34. Sr. M. Elizebeth A.C
35. Sr. M. Sriyapushpam A.C
36. Sr. M. Dilani A.C
37. Sr. M. Premala A.C
38. Sr. M. Thevanesam A.C
39. Sr. M. Adelina A.C
40. Sr. M. Shamila A.C
41. Sr. M. Selvarani A.C
42. Sr. M. Zandra A.C
43. Sr. Joyce Marie A.C
44. Sr. M. Angelica A.C

# வைரவிழாக் காணும் யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

பழம் பெரும் புகழ் பூத்த அச்சுவேலிக் கிராமம் யாழ் பருத்தித்துறை வீதியின் நடு நாயகமாயமைந்து வலி கிழக்கையும் வட மராட்சியையும் இணைக்கும் அச்சாணியான கிராமமாகும். இங்கே நீண்ட கத்தோலிக்கப், பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் பகுதி அச்சுநகராகும். இப்பகுதியில் கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் புனித சூசையப்பர் ஆலய வளவில் இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன் 5ம் வகுப்புவரை கல்வி பயிலும் ஆரம்பப் பாடசாலையொன்று நிறுவப்பட்டது. இப்பாட சாலையில் பயின்ற பலர் பிற்காலத்தில் மேதா விகளாகிய வரலாறும் உண்டு. உலகப் புகழ் பெற்ற பன்மொழிப் புலவர் சுவாமி ஞானப் பிரகாசரது ஆரம்பக் கல்விக்கும் வித்திட்டது இப் பாடசாலையே தான். இப்பாடசாலை 1945ம் ஆண்டுவரை இவ்விடத்திலேயே இயங்கி வந்தது. அப்பாடசாலை புதிய இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு சிரேஷ்ட பாடசாலையாக இயங்கத் தொடங்கிய 60வது ஆண்டு நிறைவினையே இவ்வருடம் கல்லூரி கண்டு நிற்கின்றது.

அச்சுநகர் மண்ணின் மைந்தனும் பரோப காரியுமாகிய “செவாலியர் சேர். சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர்” அவர்கள். பிரதான வீதி யோடிணைந்த பெரு நிலப்பரப்பினை வாங்கி அதில் சகல வசதிகளுடன் கூடிய ஒரு பாட சாலையினை நிறுவி அதற்குப் “புனித தெரேசா பாடசாலை” எனப் பெயரும் சூட்டி 1946ம் ஆண்டு தைமாதம் 6ம் திகதி தனது பிறந்த நாளில் திறந்து வைத்தார். இம்முயற்சிக்குத் தூண்டுகோலாக இருந்தவர் அப்போது இங்கே பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை பாலசுந்தரம் அடிகளார் ஆவார். அப்போது பாடசாலையினை முதல் அதிபராக நிர்வகித்த வர் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி எம். றெஜினா ஆவார்.

அன்று திறந்து வைக்கப்பட்ட இப்பாட சாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து. புனித தெரேசாள் மகளிர் கல்லூரியாகத் தரமுயர்த்தப் பட்டுச் சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டு பல புதிய கட்டடங்களுடன் கம்பீரமாக 60வது அகவையில் தடம் பதித்து நிற்கின்றது. இயேசு நாதரின் “சிறியபுஷ்பம்” எனப் போற்றப் படும் புனித தெரேசாவைப் பாதுகாவலியாகக் கொண்ட இக்கல்லூரி அவரின் தினமாகிய ஐப்பசி 1ம் திகதியை கல்லூரித் தினமாக வருடாந்தம் அனுட்டித்து வருகிறது. இக்கல்லூரி கோப்பாய் வட்டாரத்தில் ஒரேயொரு பெண்கள் கல்லூரி யாக இருப்பதாலும் அருட்சகோதரிகள் தலைமை யில் நிர்வகிக்கப்படுவதாலும் தனக்கென்றொரு தனிச் சிறப்பும் பெருமையும் கொண்டது.

இன்று யாழ் மாவட்டத்தின் பல பாகங் களிலும் “அப்போஸ்தலிக்க கார்மேல்” சபைக் கன்னியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தாலும், அன்று இப்பாடசாலையில் நிறுவுனர் சேர். சிற்றம்பலம் காடினர் அவர்களதும் அருட்திரு பாலசுந்தரம் அடிகளாரதும் அயராத பெரு முயற்சியினால் 1947ம் ஆண்டில் கார்மேல் சபைக் கன்னியர்கள் முதல் முதலாக யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்து இந்தப் பாட சாலையில் தங்கள் முதற் பணியை தொடங் கிய பெருமையும் இப்பாடசாலைக்கே உரியது. அவர்கள் ‘சொக்கிளேற்” நிற உடையில் காட்சியளித்த தோற்றம் புனித தெரேசாவை

நினைவுபடுத்தியதோடு மக்களும் ஆவலாக, ஆரவாரமாக வரவேற்றனர்.

இக்கல்லூரி கல்விப் பணியில் சிறந்து விளங்குவதோடு ஒழுக்கத்திலும் நன் நடத்தையிலும் சமயப் பணியிலும் முதன்மை வகிக்கின்றது. அதற்குச் சான்றாக இங்கு கல்வி பயின்ற பல மாணவிகள், கற்பித்த பல ஆசிரியர்கள் இறைதொண்டுக்கு தம்மை அர்ப்பணித்து "கார்மேல் சபைக் கன்னியர்களாக" நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்று கிறார்கள். இது ஒரு கிராமப்புற பாடசாலையாக இருந்தபோதிலும் இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே "பான்ட்வாத்தியம்" அறிமுகப்படுத்தப்பட்டு உடற்கல்வி, நடனம், சங்கீதம் போன்ற சகல துறைப் போட்டிகளிலும் பல வெற்றிகள் கண்டு முதன்மைப் பாடசாலையாக அன்றும் விளங்கியது.

1947ம் ஆண்டில் கார்மேல் சபையைச் சேர்ந்த எம். அலகொக் என்பவரே முதல் அதிபராக பொறுப்பேற்று பணியாற்றினார். இவர் குறுகிய காலச் சேவையுடன் மாற்றலாகிச் சென்றுவிட்டார்.

இவருக்கு அடுத்ததாக வந்த அதிபர் அருட்சகோதரி சபீனா அவர்கள். இவரின் காலத்தில் தான் பாடசாலைத் தினம் நிர்ணயிக் கப்பட்டது. றோஸ், லில்லி என இரு இல்லங்கள் பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் பெரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டன. மாணவருக்குச் சீருடை அறிமுகப்படுத்தப்பட்டது. வலைப் பந்து பயிற்றுவிக்கப்பட்டது. பயிற்றுவித்தவர் அருட்சகோதரி தொமஷின் அவர்கள். இந்த அதிபரின் காலத்தில் தான் 1949ம் ஆண்டு முதன் முறையாக இப்பாடசாலையிலிருந்து அன்றைய S.S.C பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினார்கள். அதிபர் அவர்கள் பாடசாலைக்கு நற்பெயர் கிடைக்கவேண்டும் என்னும் ஆவலினால் அதிக சிரத்தையுடன் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டார். அதிபருக்கு அனைத்திலும் பக்கபலமாக இருந்தவர் மட்டக்களப்பு கல்முனை என்னும் இடத்தைச் சேர்ந்த மேரி என்னும் ஆசிரியை ஆவார்.

இவருக்கு அடுத்ததாக இப்பாடசாலையின் அதிபராக வந்தவர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அருட்சகோதரி எவறில்டா அவர்கள். அவர் தன்னுடைய 20 வருடங்களில் ஆற்றிய அளப்பரிய சேவைகளை ஒன்று திரட்டி ஒரே வரியில் "பொற்காலம் சமைத்த அதிபர்" என மக்களால் வர்ணிக்கப்படுகிறார். புனித தெரேசா பாடசாலையை வெளி உலகுக்கு தெரியவைத்தவர் அவர் தான். இவருடைய காலத்தில் மாணவர் தொகையும் அதிகரித்தது. மாணவர்கள் மனதில் மட்டுமன்றி மக்கள் மனதிலும் இடம் பிடித்தவர். அவருக்கு இடமாற்றம் வந்தபோதிலும் மக்கள் திரண்டு மறியற்போர் செய்து தடுத்து நிறுத்தினார்கள். ஈற்றில் அவருடைய சேவைக்காலம் முடிவுற்றது. தன்னுடைய சேவையில் ஓய்வு பெற்று வெளியேறினார். அவருக்கு உறுதுணையாக மடத்தின் தலைவியாகவும் ஆங்கில ஆசிரியையுமாக சில காலம் பணியாற்றிய அருட்சகோதரி கிறிஸ்ரிற்றாவின் சேவையும் இப் பொற்காலத்துக்குள் அடங்கும்.

அருட்சகோதரி எவறில்டா அவர்களைத் தொடர்ந்து அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ்மேரி, அருட்சகோதரி சிசிலியாமேரி, அருட்சகோதரி பிடலீனா, அருட்சகோதரி கலிஸ்ரா, அருட்சகோதரி எத்தல்ஷிவா ஆகியோர் அதிபர்களாகப் பணியாற்றினர். இவர்களுடைய காலத்தில் கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக அமைந்ததோடு, மாடிக் கட்டடங்கள், விஞ்ஞான கூடம் போன்றனவும் அமையப்பெற்றன. அன்று தொடக்கம் இப்பாடசாலையில் அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் என அனேகமானோர் கல்வி கற்பித்தாலும், பல ஆசிரியர்கள் இப்பாட

சாலைக்காகத் தங்களை முழுமையாக அர்ப் பணித்துச் செயற்பட்டார்கள். அந்தவரிசையில் பாடசாலையின் ஆரம்ப காலத்தில் வசதிகள் குறைந்த நிலையில் சேவைபுரிந்த அன்னம்மா என்னும் ஆசிரியையின் சேவையை நினைவு கூருகின்றேன். இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் தங்கள் தாய்வீடாகக் கருதும் இப்பாடசாலைக்குத் தேவை ஏற்படும் போதெல் லாம் தோள் கொடுத்து வருகின்றனர். உல கெங்கும் பரந்து வாழும் அவர்கள் இப்பாட சாலையின் புகழையும், பெருமையும் பறை சாற்றி நிற்கின்றனர்.

இப்பாடசாலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தக்கு அருகில் அமைந்துள்ள தால் பல படைநகர்வுகளாலும், எறிகணைகளாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த போதும். தற் போதைய அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ அவர்களின் பெருமுயற்சியினா லும் நலன் விரும்பிகள், ஆசிரியர்களின் ஒத் துழைப்பினாலும் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட 60 வது அகவையிலே அடியெடுத்து வைத்திருக்கிறது.

இப்பாடசாலையின் பழைய மாணவியான நான் ஆரம்ப வகுப்பிலிருந்து. S.S.C பரீட்சை யில் சித்தி எய்தி வெளியேறும்வரை நேரில் கண்டவைகளையும், பின்பு இந்த ஊரையே வதிவிடமாகக் கொண்டதால் பாடசாலையின் முழுவளர்ச்சி பற்றியும் அறிந்தவைகளையும் இக்கட்டுரையில் கூறியுள்ளேன்.

இவ்வைரவிழா மலருக்கு அதன் வரலாற் றினைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடை வதோடு என்னுடைய பாடசாலை வாழ்க்கை யில் நடந்த, ஆடல் பாடல் என மகிழ்ந்து நின்ற, அந்தப் பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் தந்து, இவ் வரலாற்றுக் கட்டுரையை வரைவதற்கு என் னிடம் பொறுப்பும் தந்த அதிபர் அவர்களுக்கு நன்றியும் கூறுகின்றேன்.

**திருமதி. ஞானம் இராஜேந்திரம்,**
**(பழைய மாணவியும் ஸ்தாபகரின் மைத்துணியும்)**

**செவ்வாய்க் கிரகத்தின் விட்டம் எவ்வளவு?**
**4200 மைல் அல்லது 6720 கி. மீ**

**விண்வெளியில் முதலில் உயிர் நீத்த விண்வெளி வீரர் யார்?**
**சோவியத் நாட்டைச் சேர்ந்த விளாடிமீர் கோமசோடா**

# கற்றதனால் ஆன பயன்.......

பாடசாலை தன்னிலே
பயிலுகின்ற மாணவரே
கல்வி என்னும் படகில் ஏறி
கரை கண்டு சேர வேண்டும்

நாடு போற்ற வாழ வேண்டும்
நல்லவனாய் வாழ வேண்டும்
சோர்வு இன்றி உழைத்திடவே
சொந்த நாட்டில் வாழ வேண்டும்

சீர் நிறைந்த கல்விதனை
சிறப்புடனே கற்றுவிடு
சாதிமத பேதமின்றி
சமத்துவமாய் வாழ்ந்திடு

உயர்வு தாழ்வுகளை
உதறியே தள்ளிவிடு
கல்வி என்னும் படகினிலே
களிப்புடனே ஏறிவிடு

மனம் நிறைந்த கல்விதனை
மனதுக்குள் ஏற்றிவிடு
கற்றதனால் ஆன பயன்
கடைசியிலே நீ அறிவாய்

**செல்வன் டிலக்ஷன் குகதாசன்**
**தரம் 8A**

# புனித தெரேசாள் புகழ் பாடுவோம்.

அறுபது ஆண்டுகள், சேவை செய்திட்ட
புனித திரேசா பள்ளி, புகழ் பாடுவோம்
கார்டினர் உதவியுடன், கார்மேல் கன்னியர்
கட்டி எழுப்பி, தொடர்ந்து செய்த
சேவையைப் போற்றுவோம்.

(1)

நீண்டகால அதிபரான எவரில்டாவின் கீழ்
பள்ளி பெற்ற வளர்ச்சியை இன்று – நினைவுகூருவோம்
போட்டி போட்டு குவித்த, வெற்றிக் கேடயங்களால்
பள்ளிப் பெருமை நாட்டில், உயர்ந்து
விடுதி நிறைந்தது, பெற்றோர் மனமும் குளிர்ந்தது
புதிய அதிபர் ஸ்ரனிஸ்லஸ்மேரி, சேவையும் தொடர்ந்தது

(2)

மூன்றெழுத்து கொண்ட, புனித பெயருடன் (தெரேசா)
மூன்று பூக்கள் பெயரை, கொண்ட இல்லங்களுடன் (டெய்சி, லில்லி, றோஸ்)
மூன்று கண்டங்களில் வாழும், பழைய மாணவர்களுடன்
முத்தமிழும் சுற்றிச், சுற்றி தவழ்ந்து வந்திட
அச்சு நகரினில் தொடர்ந்து சேவை புரிந்திடும்
அருட்கன்னியர், ஆசிரியரை வாழ்த்தி நிற்கின்றோம்.

(3)

அச்சு நகர் பெற்றெடுத்த தம்பிமுத்து
தமிழுக்காக சேவை செய்தார்
அந்த மண்ணில் தவழ்ந்து வளர்ந்த ஞானப்பிரகாசர்
அச்சகத்தை நிறுவினார். சமயம் தளைத்து நிற்கவே
மண்ணின் மைந்தன் கார்டினர் கார்மேல்
கன்னியர் மூலம் கல்வி அறிவு வளர
தந்தார் புனித தெரேசாள் கல்லூரியை

**பிரான்ஸ் வாழ் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கத்தினர்.**

# பூலோக கற்பக தரு

தேவலோகத்தில் கற்பகதரு என்னும் அரியதொரு மரம் உண்டு. அந்த மரமானது யார் எதை விரும்பினாலும் அவர்களுக்கு அதை வழங்கும் சிறப்பு பொருந்தியது அது போலவே பூலோகத்திலும் ஓர் ஆபூர்வமான மரம் உண்டு பூலோகத்தவருக்கு பல்வேறு பயன்களைக் கொடுக்கின்றது. அதனால் தான் "பூலோக கற்பகதரு" என அழைப்பர் அதன் பெயர் பனை.

பனை பாதாதி கேசம்வரை பல பயன் களைத் தருகின்றது. பனையின் குருத்தோலை வண்ண வேலைப்பாடுகளைக் கொண்ட பெட்டி கடகம் பாய் தொங்கும் மலர்ச்சாடி, கைப்பை, பூச்செண்டுகள், கொட்டைப்பெட்டி, நெல்லுப்பாய், நீத்துப்பெட்டி, பூக்கூடை, தொப்பி, விசிறி, முதலிய பயன்தரும் கைப்பணிப்பொருட்கள் இழைப்பதற்கு பயன்படுகின்றது. 1970 காலப் பகுதியில் யாழ் குடாநாட்டில் உற்பத்தி செய்யப் படும் வெங்காயம் பனை ஈர்க்கினால் பின்னப் பட்டகூடைகளில் அடைத்து தென்பகுதிக்கு அனுப்பப்பட்டு வந்தமை சிறப்பிற்குரிய விடய மாகும். பனை ஓலை உற்பத்திப்பொருட்கள் தனியாரின் சிறுகைத்தொழிலாக விளங்கியமை யும் குறிப்பிட முடிகின்றது. பச்சை ஓலைகள் கால் நடைகளின் தீனியாகவும், வேலி அடைக்கவும், வீடு வேயவும் பசுந்தளைகள் பயிர்செய்கையில் பச்சையாகவும் உபயோகிக்கப்படுகின்றது. ஓலை யின் அடிமட்டையின் நாரில் நார்க்கடகம் இழைக்கவும், கயிறு திரிக்கவும், பல வகையான தூரிகைகள் செய்யவும் பயன்படுகின்றது. மட்டை யால் வேலி அமைக்கவும், விறகாகவும் பயன்படு கின்றது, பன்னாடை எரிபொருள் ஆகின்றது.

பனையின் உற்பத்தி மூலாதாரம் பனம் விதையாகும். நம் முன்னோர் பனை தந்த செல்வத்தை உணவாகப் பாவித்து வளமாக வாழ்ந்தனர். அந்த வகையில் அதன் பிஞ்சு நுங்கு எனப்படும். குழந்தைகள் முதல் முதிய வர் வரை நுங்கினை பருகுவர். பனையின் பாளையிலிருந்து பதநீர் வடித்தெடுத்துப் பானமாக பருகுவர், பனங்கட்டி செய்வார்கள். வேத கால மக்கள் பதனீரைப்பருகி பொழுது போக்காக ஆடிப்பாடி மகிழ்ந்தனர் என்பது அறிய முடிகின்றது. பனங்கள்ளிலிருந்து பனஞ்சாராயம் வடிப்பர். பதனீரைக்காய்ச்சி பனங்கட்டி, பனஞ்சீனி என்பன செய்யப்படும்.

நுங்கு முற்றிக் காயாகி கனியாகும் போது பனம் பழம் எனப்பெயர் பெறுகின்றது பனம் பழமானது பனைமரத்தின் பிரதான பயன் எனலாம். பனம் பழத்தைச்சுட்டு தோல் உரித்து அதன் களியை பிசைந்து எடுத்து உணவாக உண்பர். பனங்களியிலிருந்து பனாட்டு, பாணிப் பனாட்டு, பனங்காய்பணியாரம், பனங்களிப்பிட்டு என பல்வேறு உணவுகளாக தயாரித்து உண்ண லாம். பனம் பழத்திலிருந்து பழப்பாகு (ஜாம்) தயாரித்து காலை உணவில் சிறப்பாக பாணில் பூசி உண்ணும் வழக்கம் இன்றும் காண முடிகின்றது. வடபகுதிமக்கள் 1990களில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளின் போது சீயாக்காய்க்கு பதிலாக பனங்களி கொண்டு மினுக்கி அழகு செய்தனர்.

ஆடிப்பிறப்பு வந்துவிட்டால் பனங்கட்டி முக்கியத்துவம் பெறுவதையும் நாம் காண முடியும். "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே கூடிப்பனங் கட்டி கூழும் குடிக்கலாம்" என சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார் என்றால் பனையின் மகத் துவத்தினை நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.

பனம் பழம் விழத்தொடங்கியதும் அவற் றைச்சேகரித்து மழைக்காலம் ஆரம்பித்ததும் மண்ணைவெட்டி உயரமாக சதுர அமைப்பில் பாத்திகளாக்கி பனம் விதைகளை அடுக்கி மண்போடுவர். தை, மாசி மாதங்களிலே அவை ஈன்ற கிழங்குகளை கிண்டி எடுத்து பச்சை ஒடியலாகவும் அவித்து புழுக்கொடியலாகவும் பயன்படுத்துவர். ஒடியலில்லிருந்து ஒடியற்பிட்டு ஒடியற்கூழ் ஆக்கி உண்டு சுகமாக வாழ்வர். பனங்கிழங்கு அவித்த உடன் சிறு துண்டு களாக்கி சீனிப் பாணி கலந்து சிற்றுண்டி யாகவும் உண்பர் காய்ந்த புழுக்கொடியலை இடித்து மாவாக்கியும் உண்ணலாம். இவ் உணவுகள் புரதச்சத்து நிறைந்தவை. இவை அனைத்தும் பனம் பழம் நமக்கு தரும் பரிசுகள்.

பனை மரம் மிகவும் வைரமானது. நீண்ட காலம் பழுதுபடாது இருக்கவல்லது. ஆதலால் அதற்கு சொலிக்கனம் பூசி வீட்டுக்கூரையின் மரமாக நிலைகளாக இன்றும் மக்கள் உப யோகிக்கிறனர். இன்னும் வட கிழக்கில் ஏற்படும் அசாதாரண நிலைமைகளால் காவலரண்கள் பதுங்கு குழிகள் அமைக்கவும் தங்கு தடை யின்றி பனைகள் அழிக்கப்படுவதை, தறிக்கப் படுவதை நாம் காணமுடிகின்றது. இன்று பனையிலிருந்து நவீனமான பல பொருட்கள் செய்யப்படுகின்றன. இவற்றில் பல ஏற்றுமதி யாகின்றன. அதனால் பெருந்தொகைப் பணத்தை நாம் பெறுவது மனங்கொள்ளத்தக்கது.

"பனைவளம் காப்போம்
பயன்மிகப் பெறுவோம்"

**செல்வி. ஷாதுரி பவானந்தன்**
**தரம் 10B**

**முதலில் விண்வெளிக்கு ஏவப்பட்ட விண் ஆய்வு கூடம் எது?**
**சல்யூட் – 1**

**உலகிலே மிகப்பெரிய கோள் மண்டலம் எங்குள்ளது?**
**மஸ்கோவிலுள்ளது**

**பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரக் கூட்டம் எது?**
**அன்ரோ மீடா என்ற நட்சத்திரக் கூட்டமாகும்**

# SPORTS















# SPORTS



















# முயற்சியே முதுகெலும்பு

எண்ணும் சிறுவலையை சிலந்தி செதுக்குவதும்,
வண்ணமாய் பூவிலே வண்டு தேன் எடுப்பதுவும்,
சின்னஞ்சிறு எறும்பு சீர் கொண்டு சேர்ப்பதுவும்,
புன்னுயிர்கள் புலப்படுத்தும் முயற்சிப் புதுமையன்றோ!

வட்டநிலா வென்றும் வடிவழகு வதனமென்றும்,
எட்டாத உயரத்தில் உவமை சொன்ன சந்திரனை,
தொட்டுப்பார்த்தன்று தோழமை சொன்னவர் தம்,
கெட்டித்தனம், முயற்சிக் கேண்மையில் வந்ததன்றோ!

திறமை முயற்சியுடன் தினம் வியர்வை சிந்துபவர்,
திறம் வெற்றி கண்டுலகில் திருவோடு வாழ்வதுண்மை,
கடமை தவறாது கடும் முயற்சி கொண்டவர்கள்,
கண் பார்க்கும் இடமெல்லாம் பொன்னாகப் பூக்காதோ!

சோர்ந்து நீ கிடந்தால் சுள்ளியும் சிறைக்கம்பி,
சீறினால் சீனத்துச் சுவர் கூட சிறு புள்ளி,
கனவிலும் நினைவிலும் கடுமுயற்சி நீ செய்தால்,
உனதாகும் இந்த உலகமே எந்நாளும்.

சிறு துளி பல கொண்டு சேர்வது பெருவெள்ளம்,
சிறு துளையது கொண்டாலும் தாளுமே வள்ளம்,
முடியாது என்பது முழு முட்டாள்கள் அகராதி,
முயற்சி என்பதே உலக முன்னேற்ற வழிகாட்டி.

**செல்வி. தனுஜா விஜயராஜன்**

**தரம் 11 A**

# பாடசாலைச் சூழலில் கற்பித்தல் அணுகுமுறை

திருமதி. செ. ஈஸ்வரதாசன்
விசேட பயிற்சி ஆரம்பக்கல்வி

கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரின் நலன்களிற்கு ஏற்ற வகையில் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கலாம். கல்வியையும் நற்பண்புகளையும் அதிகாரத்தினாலும் அடக்கு முறையினாலும் கொடுத்தல் இயலாதென்பது நாம் அறிந்ததே. மாணவர்களிற்கு உகந்த வகையில் தயாரிக்கப்பட்ட சூழ் நிலையில் சுயேச்சையான இயல்புகளை ஊக்குவித்துக் கொண்டு கற்றலில் செயற்பாடுகளை நடத்து தலே நல்லது.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் இரு வழித்தொடர்பாடல்களை முதன்மைப்படுத்திக் கொள்வது நல்லது. இங்கே மாணவர்கள் கதைப்பவர்களாகவும் பங்கு கொள்பவர் களாகவும் இருக்க வேண்டும். இவ்வாறான சூழலில் மாணவர்கள் வகுப்பறையில் சுறு சுறுப்பாக இயங்கிச் சுயேச்சையாகப் பயில் வார்கள். ஆசிரியர்கள் மாணவர்களது செயற் பாடுகளில் தேவையின்றித் தலையிடாமல் அவற்றை அவதானித்து நெறிப்படுத்தலாம். கற்பித்தலில் விரிவுரைகளைக் குறைத்து குறைந்தளவு உரையுடன் அவர்களுடன் கலந் துரையாடியும் அந்தப்பாடத்திற்கும் வாழ்க் கைக்குமுள்ள தொடர்புகளைப்பற்றி ஆராய்ந் தும் ஏனைய பாடங்களில் கற்றவையோடு ஒப்பு நோக்கியும் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். மாணவர்களை விடயங்களைப் பற்றி ஆராயவும் தகவல்களைத் தேடிக் கொள்ளவும் ஊக்குவிக் கலாம். தாம் கற்பது தமக்குத் "தேவையான ஒன்று" பிரயோசனமான ஒன்று என மாணவர்கள் எண்ணத் தொடங்குவார்களாயின் இயல்பாகவே கற்றலில் விருப்பம் தோன்றும்.

கற்பித்தல் செயற்பாடுகளில் கற்பித்தல் உபகரணங்களைச் சாதுரியமாக உப யோகிக்கப் பழக வேண்டும். கற்றலின் போது பிள்ளைகளின் விழிப்புணர்ச்சி, அவதானம், ஒப்பு நோக்கு, பகுத்துணர்வு முதலியவற்றிற்கு அளிக்கப்படும் விசேட பயிற்சிகள் பிள்ளை களின் மனவாற்றலை வலுவடையச் செய் கின்றன. கற்பித்தல் உபகரணங்களைத் தேர்ந்தெடுக்கும் போதும் அவற்றைக் கையா ளும் போதும் மேற்குறிப்பிட்ட விடயங்களை கவனத்திற் கொள்வது அவசியம்.

விளையாட்டிலும் நுண்கலைகளிலும் ஈடுபடுதல் எல்லாப்பிள்ளைகளிடமுமுள்ள பொது இயல்பாகும். பிள்ளைகள் குழுவாக விளையாடும் போது அவர்களிடம் உடல், அறிவுத்திறன், மனப்பாங்கு போன்றன சுதந் திரமாக விருத்தியடைகின்றன.

இதனாலேயே கற்றலில் விளையாட்டு முறைகள் கூடுதலாகப் பாவிக்கப்படுகின்றன. பிள்ளைகளின் இயல்பான முழுவளர்ச்சிக்கும் விளையாட்டு இன்றியமையாததாகும். பிள்ளை மையக்கல்வியின் பிரிக்க முடியாத கூறாக விளையாட்டு இடம்பெறுகிறது. விளையாட்டாகக் கற்றல், விளையாட்டுடன் கற்றல், விளையாட்டி னூடாக்கற்றல் போன்றன மிகவும் வலுவுடைய கற்றல் முறைகளாக அமைந்திருக்கின்றன.

நுண்கலைகளும் மாணவர் கற்றல் செயற்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆடல், பாடல், வரைதல், கதைசொல்லல், ஆக்கங்கள் தயாரித்தல், நடித்தல் முதலிய செயற்பாடுகள் பிள்ளைகளிடம் மிக இயல்பாக நடைபெறுகின்றன. இதனால் இவற்றை கற்றல் செயற்பாடுகளில் இணைக்கும் பொழுது மாணவர்களும் இவற்றை விரும்பி ஏற்கத் தலைப்படுவார்கள். பல விடயங்களை அறிவுசார் தகவல்களை ஆற்றல்களை மனப்பாங்குகளை கலைகள் மூலம் மாணவர்களுக்குப் புகட்டலாம். இங்கு ஆசிரியர் சகலகலாவல்லுநராகச் செயற்படுகின்றார். கற்றல் செயற்பாடுகள் கலைகள் ஊடாக நகர்த்தப்படுகின்ற பொழுதில் மாணவர்களது சுய ஆற்றல் விருத்தியடைகிறது. கற்றலும் சுலபமாக நடைபெறுகிறது.

பாடசாலைச் சூழலானது பிள்ளைகளது கற்றற் செயற்பாடுகளில் மாத்திரமன்றி உள நல விருத்தியிலும் உடல் நல விருத்தியிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. பாடசாலையின் கற்பித்தல் அணுகுமுறை சூழலானது ஆரோக்கியமான அமைதியான சூழலாக அமைந்து மாணவர்களது உடல் நல விருத்திக்கு உகந்ததாகக் காணப்படும் போது அவர்களது மனமும் கற்றற் செயற்பாடும் இயல்பான விருத்தி நிலையையடையும். மேலும் இவ்வாறான சூழலில் ஆசிரியர்களும் மாணவர்களது தேவையை அறிந்து நற்பண்புகளுடன் கூடிய மனப்பாங்கை வளர்த்து கற்பித்தலை நன்னெறியில் நகர்த்திச் செல்ல முயல்வார்கள் இதிலிருந்து பாடசாலைச்சூழலானது மாணவரது உடல், உள, சமூக ஆத்மீகத் தேவைகளை பூர்த்தி செய்வதாகக் கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைத்துச் செயற்படுதல் நன்று.

**விண்வெளியில் நீண்ட நேரம் ( நாட்கள்) மிதந்தவர் யார்?**
**பஜ் ஆல்பிரிஸ் எனும் அமெரிக்கர்**

**மிதக்கும் விண்வெளிக்கூடத்தை முதலில் அமைத்தவர் யார்?**
**ரஷ்யர்கள், சல்யூட் ஆய்வுகூடம் என்பது அதன் பெயர்**

# My best friend

My best friend is Nivashana. She is studying at ST. Theresa's Girls' College. Her favorite subject is Tamil. She likes ice cream .She is eight years old .She is fair and tall. She likes me a lot and I like her too.

*Miss. A. Joslin Janu*
*GRADE 3A*

# MY SCHOOL

My school is ST. Theresa's Girls' College. It is at Atchuvely.There are about twenty five teachers and seven hundred students The classes are from grade one to thirteen. The flower garden adds beauty and colour to the school and the classrooms are neatly arranged.

The principal of my school is Rev. Sister. Maria. Rosario who maintains a high discipline and proper guidance. She is very kind with the children. I like my school and I will always keep up the fame of the school.

*Master S.Sivapriyan*
*GRADE 5B*

# *Theresian who served and are gone to their eternal reward*

01. Sr. M. Alocoque A.C
02. Sr. M. Sabina A.C
03. Sr. M. Antonina A.C
04. Sr. M. Christita A.C
05. Sr. M. Thomasine A.C
06. Sr. M. Fedelina A.C
07. Sr. Cecilia Mary A.C
08. Sr. M. Carmelinda A.C
09. Sr. M. Louralia A.C
10. Sr. M. Punitham A.C
11. Sr. M. Merici Angela A.C
12. Sr. M. Michalia A.C
13. Sr. M. Michaline A.C
14. Sr. M. Liberia A.C
15. Sr. M. Ada A.C

## IN MEMORIAM

**Mr. V. Rajaratnam (Former Vice Principal)**

# THAI PONGAL

Thai pongal is a cultural festival celebrated by the farmers to thank the God Sun. It falls on the 14th of January.

When the harvest is in the farmers get their first harvest offered to the God Sun who gives rain and heat to make their harvest a good yield. People prepare milk rice and offer it to God on that day. Children light crackers and enjoy their first meal of new rice, with their kiths and kins.

*Master .S. Shangheeth.*
*GRADE 5B*

**செவ்வாய்க் கிரகத்தில் இறங்கிய முதல் விண்கலம் எது?**
**வைகிங் விண்கலம்**

**சந்திரனை அடைந்த முதல் ஆய்வு செயற்கைக் கோள் எது?**
**லூனிக் – II**

# இசை தந்த இன்பம்

திருமதி. நி.குணராஜா
**Dip. in. Music**
**Dip.in Edu**

இன்பம் தரும் இனிய கலை இசைக்கலை
இராவணன் இசைமீட்டி
ஈசனையே மயங்க வைத்தான்
இவ்வுலக மாந்தர் முதல்
ஈரறிவு ஜீவன் கூட
இசையால் வசமாகும்
படமெடுக்கும் பாம்பு கூட
மகுடி இசை கேட்டு
மயங்கி ஆடி விடும்
பாடல்கள் பல இயற்றி
பண்ணோடு பாடிப் பலர்
பரமனடி சேர்ந்தாருண்டு
பரம் பொருளை அடைவதற்கு
பாடலன்றி வேறு உண்டோ
இசை தந்த இன்பம்
ஈசனையே அடையுமின்பம்

# CURRENT DEVELOPMENTS IN MEDIA COMMUNICATION

We are living in an age of faster , more efficient and versatile communication development almost daily. A wide range of media is available for communication now. The media has always responded to developments within communication. We now have the newspapers, magazines, periodicals, film, video, television and the internet. The nature and function of many of these are constantly evolving and yet they all have an influence on public opinion and individual behavior. The current developments within media also include mobile phones with their various functions. text messages, the web, E-mail and CD/DVD digital broadcasting.

The role of newspapers changed when television became a standard equipment in almost every home. How did the newspapers change with these innovations? Is there a future for newspapers and magazines? In the past, when communication became faster, newspapers responded. Now in this digital world newspapers have to adapt and need to consider what advantages a newspaper has to offer to its readers and how to respond to the digital challenge. The introduction of the cable and satellite doubled the number of available channels.

The information technology industry and the government expect the future to bring a personal computer into every home. There are dangers from these developments too, but we are moving into a time, a time of information technology and we should be ready to face the challenges of the modern world.

*Miss.G. Jesiniya.*
*GRADE 11 B*

யுரேனஸ் கோளை கண்டு
பிடித்தவர் யார்?
சேர். வில்லியம் ஹர்சஸ்
என்பவர் 1781 இல்

# இரத்த ஒவ்வாமை – ஒரு நோக்கு

திருமதி. சு. மகேஸ்வரதாசன்
விஞ்ஞானம் விசேட பயிற்சி

வெவ்வேறு வகைப்பட்ட இரத்தங்கள் உடலினுள் சேரும்போது ஏற்பவரின் உடல் இரத்த சிவப்பணுக்கள், திரண்டு ஒட்டிக் கொண்டு இரத்தக் குழாய்களை அடைத்து இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தி விடுகின்றன. இதனால் மரணம் ஏற்படுகின்றது. இதுவே இரத்த ஒவ்வாமை எனப்படும்.

எடுத்துக் காட்டாக O வகையைச் சேர்ந்த எவருக்கும் இரத்தம் தேவைப்படுகின்றதெனின் அவருக்கு A .OT Boy AB இரத்தத்தை செலுத்தினால் உடனே இறந்துவிடுவார். இதற்கு காரணம் அவருடைய O வகை இரத்தத்தில் சுக்குளுத்தினோஜன் எனும் ஒருவகை புரதம் இல்லாததால் இரத்தம் மிகவும் வலிமை குன்றிய நிலையில் காணப்படுதலாகும். அவருக்கு A, B, AB ஏதாவது ஒருவகை இரத்தம் செலுத்தப்பட்டால் அந்த இரத்தத்திலுள்ள வேதிப் பொருள்கள் அவருடைய இரத்தத்தில் கோளாறினை ஏற்படுத்தி விடுகின்றது.

| இரத்தம் வழங்குபவர் | இரத்தம் ஏற்பவர் |
|---|---|
| A<br>B<br>AB | O |

- ஆபத்து

மாறாக O வகை இரத்தத்தை A, B, AB ஆகியோருக்கு செலுத்தினால் ஆபத்தில்லை.

| இரத்தம் வழங்குபவர் | இரத்தம் ஏற்பவர் |
|---|---|
| O | A<br>AB<br>B |

- ஆபத்தில்லை

இதேபோல A அல்லது B வகை இரத்தத்தை AB வகையினருக்கு செலுத்தினால் ஆபத்தில்லை ஏனெனின் இவர் இரத்தத்தில் A,B ஆகிய இரு காரணிகளும் உள்ளன.

| இரத்தம் வழங்குபவர் | இரத்தம் ஏற்பவர் |
|---|---|
| A<br>B<br>O | AB |

- ஆபத்தில்லை

ஆனால் AB வகை இரத்தத்தை A/B /O வகையினருக்கு செலுத்தினால் உடனே மரணம் ஏற்படும் இதற்கு காரணம் ஏற்பவர் இரத்தத்தில் இல்லாத வேறொரு காரணி அவருடைய இரத்தத்தில் இருப்பதே ஆகும்.

| இரத்தம் வழங்குபவர | இரத்தம் ஏற்பவர் |
|---|---|
| AB | O<br>A<br>AB |

- ஆபத்து

இதனைக் கட்ட முறையில் பின்வருமாறு விளக்கலாம்.

| | | O | A | B | AB |
|---|---|---|---|---|---|
| வழங்குபவர | O | - | - | - | - |
| | A | + | - | + | - |
| | B | + | + | - | - |
| | AB | + | + | + | - |

இக்கட்டத்தில் + குறி ஆபத்தையும் - குறி ஆபத்தின்மையையும் குறிக்கும். இதன் படி பார்த்தால் O வகையினர் எல்லோருக்கும் இரத்தம் வழங்க தகுதியுள்ளவராகிறார். இவரை அனைத்தும் வழங்குபவர் எனலாம். AB

யாரிடம் இருந்தும் இரத்தம் பெறக்கூடியவர் அதாவது அனைவரிடம் இருந்தும் ஏற்பவர்.

ஆராய்வின்படி இந்த நான்கு வகையிலும் பல உட்பிரிவுகள் உள்ளனவெனவும் கண்டு பிடித்துள்ளனர். மேலும் (Rh) என்ற காரணியும் இரத்ததில் உண்டு. இந்த Rh அடிப் படையில் சில மனிதர்களில் காணப்படு வதில்லை. Rh உள்ளவர்களை ($Rh^+$) எனவும் இல்லாதவர்களை ($Rh^-$) எனவும் குறிப்பிட லாம். கணவன் மனைவி இருவருக்கும் $Rh^+$ உள்ளவராக இருப்பின் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் ($Rh^+$) உள்ளவராகவே இருப்பார்கள் ($Rh^-$) இல்லாதவராயின் குழந்தை எல்லாம் ($Rh^-$) இல்லாதவராகவே காணப்படுவர். கணவன் ($Rh^+$) உள்ளவராகவும் மனைவி ($Rh^-$) இல்லாதவராகவும் இருந்தால் அவருக்கு ($Rh^+$) உள்ள குழந்தை பிறக்கும் ஆனால்($Rh^-$) இல்லாத தாயின் கருவில் ($Rh^+$) உள்ள குழந்தை வளருமாயின் தன் இரத்தத்தில் தாயின் இரத்தத்திற்கு எதிராக (Rh) எதிர்ப்புப் பொருட்களை உண்டுபண்ணி இவ் எதிர்ப்புப் பொருள் நஞ்சுக் கொடி (தாய்,சேய் இணைப்புப் பகுதி) ஊடாக தாயின் இரத்தத்தை அடையும் இதனால் தாயின் இரத்தத்திற்கு எதிராக Rh எதிர்ப்புப் பொருட்களை உண்டாக்கி மீண்டும் நஞ்சுக் கொடி மூலம், சிசுவுக்கு அனுப்பி இரத்த அணுவை அழிப்பதால் கருச்சிதைவு, குறைபாட்டு சிசு, குறைப்பிரசவம் போன்றவை ஏற்படுகின்றன.

அடுத்துவரும் கருத்தரிப்பின் போது தாயின் இரத்தத்தில் முதற் குழந்தையின் போது உண்டான Rh எதிர்ப்புப் பொருள் இருப்பதால் அவை வீரியத்துடன் தொழிற்பட்டு கருத்தரித்த சில நாட்களிலேயே கருச்சிதைவு ஏற்படுகின்றது.

(Rh) இல்லாத பெண்ணுக்கு திருமணத்தின் முன்பு ஏதாவது காரணத்தால் குருதி ஏற்பட்டபோது (Rh) சோதனை செய்யாமல் தவறுதலாக ($Rh^+$) உள்ள இரத்தம் ஏற்றப் பட்டிருப்பின் அவளுடைய இரத்தத்தில் Rh எதிர்ப்பு பொருள் உண்டாகிவிடும். இப் பெண் ($Rh^+$) உள்ள ஆணைத் திருமணம் செய்து கொண்டால் அவளுக்கு குழந்தை பிறப்பதில்லை. காரணம் அவள் உடலில் Rh எதிர்ப்புப் பொருள் உள்ளமையேயாகும்.

இம்மாதிரியான சிக்கலைத் தீர்க்க திருமணத்தின் முன்பாக மற்றப் பொருத்தங்களைப் பார்த்து முடிவெடுப்பதற்கு முன் (Rh) சோதனையை செய்து கொள்வது சிறந்தது.

**நெப்டியூன் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது?**
**1846 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லிவேரியரால்**

# ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதில் கிறிஸ்தவரது பொறுப்புக்கள்.

இறைவன் பல முறைகளில், பல வகைகளில் தம் மக்களுடன் பேசி வந்துள்ளார். இன்றும் அவர் நம் நாட்டில் நம் காலத்தில் நடைபெறும் சம்பவங்கள் நிகழ்ச்சிகள் வாயிலாக எம்மோடுபேசி, எம்மை வழிநடத்தி வருகிறார். அவனின்றி அணுவும் அசையா தென்பர். தந்தையின் அனுமதியின்றி நம் தலையிலிருக்கும் ஒரு முடிதானும் விழாதென்று நம் ஆண்டவர் இயேசுவே கூறியிருக்கிறார். இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், சம்பவத்திலும் இறைபிரசன்னம் உண்டு என்றால் அச்சம்பவத்தின் ஊடாக கடவுள் நமக்கு வெளிப்படுத்தும் ஓர் செய்தி நம் நாட்டில் நம் காலத்தில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள், சம்பவங்கள், பிரச்சனைகள் போன்றவற்றை நாம் "காலத்தின் குறிகள்" என அழைக்கின்றோம். இக் காலத்தின் குறிகள் வழியாகவே இன்று இறைவன் எம்மை சந்தித்து, எம்மோடு பேசி, எமக்கு தன் விருப்பத்தைத் தெரிவித்து, எம்மை வழிநடத்தி வருகின்றார். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம், நம் நாட்டில் நடைபெறும் சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் உற்று நோக்கி அவற்றின் வழியாக இறைவன் வெளிப்படுத்தும் அவரது செய்தியை, விருப்பத்தை, எதிர்பார்ப்பை அறிந்து செயல்ப்படுவது அவசியமாகின்றது.

இன்று நம் நாட்டில், நம் சமுதாயத்தில் பல்வேறுபட்ட பிரச்சனைகளைக் காண்கின்றோம். அவற்றில் சிறப்பாக வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, தொழில்வாய்ப்பின்மை, தேசியவாதம், இனவாதம் போன்றவற்றை நாம் குறிப்பிடலாம். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருப்பது நம் நாட்டில் பல்லாண்டு காலமாக நிலவிவரும் இனப்பிரச்சனையும், அதன் விளைவாக நடந்துகொண்டிருக்கும் உள்நாட்டுப்போருமாகும். இப்போரினால் இலட்சக்கணக்கானோர் அகதிகளாய், அனாதைகளாய், கைம்பெண்களாய் ஆக்கப்பட்டு உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இல் இடமின்றி அந்தரிக்கின்றார்கள். எத்தனையோ இளைஞர்களும் யுவதிகளும் தினமும் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இக் காலத்தின் குறிவழியாக இறைவன் நம் நாட்டிலே இன வெறியை, இன வேற்றுமையைக் களைந்து, ஒற்றுமையை வளர்த்து, ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முயற்சி எடுக்கும்படியாக கிறிஸ்தவர்களாகிய எமக்கு அவசர அழைப்பு விடுக்கின்றார்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்தவேண்டுமென்றால், ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் அதற்கு முதல் நிபந்தனை மனிதர்களிடையே நிலவும் பிணக்குகளுக்கான காரணங்களை அறிந்து, அவற்றை அகற்ற முயல வேண்டும். இக் காரணங்களுள் குறிப்பாக அநீதிகள், பாரபட்சங்கள், இனமத வேற்றுமை பாராட்டுதல், பொருளாதாரத்தில் நிலவுகின்ற ஏற்றத் தாழ்வுகள், அடக்கி ஆளும் ஆதிக்க மனப்பான்மை, அதிகார வெறி, ஆட்கள் மேல் கொள்ளுகின்ற வெறுப்புணர்வு போன்றவற்றை நாம் வேரோடறுக்க வேண்டும். மேற்கூறிய பிணக்குகள், மனிதனின் போட்டி, பொறாமை பிறர்மேல் அவநம்பிக்கை, ஆணவம், தன்னல எழுச்சி, பழிவாங்கும் மனப்பான்மை போன்றன தீய நாட்டங்களிலிருந்து எழுகின்றன. இத் தீமைகளை முறியடிக்கவும்

அனைத்து மக்களின் ஒத்துழைப்பும், ஒருங் கிணைப்பும் அவசியம். மக்களின் உணவு, உடல், உளநலம், உறைவிடம், கல்வி, உழைப்பு போன்ற வெவ்வேறு தேவைகளை நிறைவு செய்ய உழைக்க வேண்டும். சமூக கலாச்சார பொருளாதார, அரசியல், தொழில் நுட்பத் துறைகளில் பங்கேற்றுத் திறம்படச் செயலாற்ற வேண்டும். இலங்கை சிங்களவர் களின் நாடு, பௌத்தர்களின் நாடு, தமிழர் களின் நாடு, இந்துக்களின் நாடு என்று சிந்திக்கும் முறையை ஒழித்து, அது இங்கு பிறந்து, வாழ்ந்து வளரும் அனைவரின் நாடு என்ற கருத்தை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஏற்கச் செய்ய வேண்டும். அனைத்து இன மக்களும் இலங்கையின் சுதந் திரத்துக்காக தோளோடு தோள் நின்று போராடி யவர்கள். எனவே இந்நாடு அனைவர்க்கும் உரியதென்பதை மக்கள் உணரச் செய்ய வேண்டும். இதற்கு மக்களின் உள்ளங்கள் மாற வேண்டும்.

அனைத்து மனிதர்களையும் படைத்தவர் இறைவன். இறைவன் எம் தந்தை நாம் அவரின் பிள்ளைகள் ஆதலால் மனிதர்கள் எல்லோ ரும் ஒருவர் ஒருவருக்குச் சகோதரர்கள் சம நிலை மாண்பு கொண்டவர்கள். இன அடிப் படையில் அவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு களை, வேறுபாடுகளைக் கடைப்பிடிப்பது முரணான செயலாகும். மற்றும் மொழி, அர சியல், பொருளாதாரம், பண்பாடு, மதம் இவற் றின் அடிப்படையில் வேறுபாடு காட்டுவதும் தவறாகும். மாறாக ஒருவர் மட்டில் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய மதிப்பு, மரியாதை, ஒற்றுமைப்பண்பு ஆகியவற்றை நாம் வளர்ச்சி யுறச் செய்யவேண்டும். கிராமங்கள் தோறும் சிறு சிறு குழுக்களை அமைத்து கலந்துரை யாடல் மூலம் வீண் சந்தேகங்களையும், வெறுப்பு களையும் களைந்து, பரஸ்பர அன்பையும், நல்லுறவையும், நம்பிக்கையையும், ஒருவரை யொருவர் ஏற்று, மதித்து வாழும் பெருங் குணத்தையும் வளர்ப்பதன் வழியாக ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் உதவலாம்.

இன்று நம் நாட்டில் ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப பல ஸ்தா பனங்கள் உழைக்கின்றன. அவற்றில், சமூக சமயத்திற்கான நடுநிலையம், நீதி சமாதானத் துக்கான திருச்சபையின் ஆணைக்குழு, இலங்கைத் தேசிய கிறிஸ்தவசபை, மனித பொருளாதார முன்னேற்ற நடுநிலையம் போன்ற வற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இன் றைய இப்போர் நமக்கு வெளிப்படுத்தும் காலத்தின் அறிகுறிகளை துய்த்துணர்ந்து புதுலகு படைப்பதன் மூலம் ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முயலுவோம்.

**செல்வி. வீ. சகாயமேரி**
**பழைய மாணவி**

# நிலம் மாசுபடுவதால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள்

திருமதி. நளினா குகதாசன்
B.A. Hons (Geography)

நாம் வாழும் புவிச் சூழலானதுநிலம், நீர் வளி என மூன்று கோளங்களாக வகுக்கப் பட்டுள்ளது. இதில் நாம் நிலம் மாசுபடுவதனால் பல்வேறுபட்ட சூழல் பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றோம். சூழலில் பல தசாப்தகாலங் களுக்கு முன்னர் சனத்தொகை மிகவும் குறை வாக இருந்தமையால் மக்களின் தேவையும் கிடைக்கக்கூடிய நிலவளங்களுக்குமிடையே ஓர் சமநிலை காணப்பட்டது. ஆனால் இன்று சனத் தொகை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் மனிதன் தனது தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்காக உற்பத்திக்கு வாய்ப்பற்ற பகுதிகளிலும் சூழலியல் ரீதியில் எளிதில் பாதிப்பிற்குட்படக்கூடிய பகுதிகளிலும் உற் பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். அதேநேரம் மாற்றமடைந்துவரும் பொருளாதார, சமூக நிலமைகள் நில மூலவள முகாமைத் துவம் சம்பந்தமான பாரம்பரிய ஒழுங்குகளை பலவீனப்படுத்திவிட்டது இதனால் நிலத்தின் பௌதீக இரசாயன உயிரியல் பண்புகள் பாதிக் கப்பட்டு நிலவளம் பாதிக்கப்படுவதனால் இதனைச் சார்ந்த சூழல் பிரச்சனைகளும் தோற்றம் பெறுகின்றன.

மூன்றாம் உலக நாடுகள் அழிவினை ஏற்படுத்தும் வகையில் பிறப்புவீதங்களைக் கொண்டுள்ளதாக விருத்தியற்ற நாடுகள் ஒரு புறம் குறை கூறுகின்றன. மறுபுறத்தில் விருத்தியுற்ற நாடுகள் அளவுக்கு அதிகமான மூலவளங்களை நுகருகின்றன என குறை விருத்தி நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன.

நிலத்தின் மீதுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் போது கடல் மீதும் வளி மண்டலத்தின் மீதும் பாதிப்புக்கள் ஏற்படு கின்றன. பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுக்கப் படும் தீர்வுகள் வேறுசில பிரச்சினைகளை உருவாக்குகின்றன. சவுதி அரேபியாவிலும் அமெரிக்க மேற்கு நிலங்களிலும் உள்ள பாலைநிலங்களை விளைநிலங்களாக்குவதற் காக மேலதிகநீர்ப்பாசனத்தை மேற்கொள்ளும் போது இரண்டு மூன்று பரம்பரைகளில் அந் நிலங்கள் உவர்நிலமாகிவிடுகின்றன. கடலின் வள மீன்கள் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக உள்நாட்டு மீன் பண்ணைகளை ஊக்குவித்தால் ஐஸ்லாந்தில் அத்தகைய மீன் பண்ணைகள் தானியங்களிலிருந்து பெறப்படும் மீனுணவு களை பெருமளவுக்கு நுகர்வதால் தானிய பற்றாக்குறையினை ஏற்படுத்துகின்றன. தொழிற்சாலை புகை போக்கிகளை வானுயர அமைத்து ஐக்கிய அமெரிக்காவின் ஒஜியோ நதிப்பள்ளத்தாக்கில் சூழலை வளி மாசடை வதிலிருந்து பாதுகாக்க செய்யும் முயற்சிகள் கியூபெக் மாகாண சீனி உற்பத்திப்பகுதிகளில் அமிலமழையினை ஏற்படுத்திவிடுகின்றன.

குடியானவர் விவசாயத்துக்கு கூடியநிலம் வேண்டும் என்பதற்காக வருடாவருடம் பிரேசி லின் அமேசன்பகுதிகளில் அடர்ந்து வளர்ந் துள்ள மழைக்காடுகளில் மரங்களை வெட்டி எரித்துவிடுகின்றனர். அவர்கள் காடுஅழிக்கும் பகுதிகளில் உள்ள காட்டுமண் விவசாயத்துக்கு ஏற்றது அல்ல ஒருசில பருவங்களுக்கே பயிரிட முடியும் நிலம் வளமற்றதாகியதும் இக்குடியான வர்கள் ஏனைய நிலங்கள் நோக்கி பெயர்ந்து செல்கின்றனர். உலகின் மிக முக்கியமான சூழல் தொகுதியினை அழித்து இவர்கள் நிலம் தேடிக்கொண்டுசெல்லும் இச்செயல் முடிவற்ற தாக தொடர்கின்றது.

வங்காள தேசத்தில் நிலத்துக்கான தேவை மிகவும் அதிகஅளவில் காணப்படு கின்றது. வங்காள விரிகுடவின் வாய்ப்பகுதியில் உள்ள ஆற்றுக்களிமுகப்பகுதியில் 120மில்லி

யன் மக்கள் நெரிசலாக வாழ்கின்றனர். காடு அழிக்கப்பட்ட வடக்கு மலைப்பகுதிகளில் மழைநீர் மிகவும் மோசமாக மண்ணரிப்பினைச் செய்கின்றது.

வரண்ட பிரதேசங்களில் செறிவாக இடம் பெறும் விவசாய நடவடிக்கைகள் அல்லது மந்தைகளை மேய்த்தல் என்பன காரணமாக நிலங்கள் வளமிளந்து பாலைநிலங்கள் ஆகின்றன. உலகில் 30வீத நிலங்களுக்கு இந்தப்பாதிப்பு உண்டு ஆபிரிக்கா வட அமெரிக்கா வரண்டநிலங்களில் 75 வீத பாலை நிலங்கள் செயல்முறைக்கு உட்பட்டுள்ளன.

உலகெங்குமுள்ள விவசாயிகள் கூடிய விளைச்சலைப் பெறுவதற்காகவும் பாலை நிலமாக்கப்படுதலுக்கு எதிராகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதிக பசளைப்பயன்பாடு கிருமிகொல்லிகளின் பயன் பாடு நீர்பாசனம் என்பன இத்தகைய நட வடிக்கைகளில் முக்கியமானவையாகும். ஆனால் அவ் உபாயங்கள் பல பக்கவிளைவு களை அளித்துள்ளன. நீண்டகால பயன்பாடாக விவசாய இரசாயனங்கள் மண்ணில் நஞ்சுத் தன்மையை ஏற்படுத்துகின்றன. நீர்ப்பாசனத்தால் தீமையை விளைவிக்கும் எச்சங்கள் பெருகி விடுகின்றன. உதாரணமாக நீர் ஆவியான பின்னர் சில வகையான உப்புக்கள் கடலில் படியவிடப்படுகின்றன. அதனால் பின்வரும் காலங்களில் மண்ணில் உப்புமூலங்கள் இயற்கையாக வளரமுடிகின்றன. ஆனால் உவ ராக்கம் ஏற்பட்டு அன்நிலம் பின்னர் பயிர்ச் செய்கைக்கு ஏற்றதல்லதாகிவிடும் ஆபத்து உண்டு. உலகவங்கியின் அறிக்கையின் படி ஐக்கிய அமெரிக்காவின் நீர்பாசன நிலங்கள் 28 வீதமும், சீனா 23 வீதமும், இந்தியா 11 வீதமும் உவராக்கம் காரணமாக பாதிக்கப் படுவதாக கூறப்படுகின்றது.

இதனால் தாழ்நிலப்பகுதிகள் பெரும்பா லும் வெள்ளப்பெருக்கினால் அழிவுக்குள்ளா கின்றன. அவ்வாறான செயற்பாட்டால் நிலப் பற்றாக்குறையும் அழிவும் காரணமாக மேற் கிந்தியாநோக்கி இடம் பெயர்கின்றனர். கடந்த முப்பது வருடங்களில் உலகில் தலா பயிர் செய்நிலம் 0.2 கெக்ரேயராக இருந்த நிலம் குறைந்து இப்போது 0.1 கெக்ரேயருக்கு சற்று அதிகமாக மாத்திரமே காணப்படும் நிலமை யினை வாசிங்டனில் இயங்கும் உலக அவ தானிப்பு நிலையம் கணிப்பிட்டுள்ளது.

உலகின் அயனக்காடுகளில் 8வீதம் வெட்டி எரித்து அல்லது வேறுவகையில் அழிக் கப்படுகின்றது. இவ்வாறு காடுகள் அழிக்கப் படுவதால்

1) பிரதேசம் காடுகளை இழக்கின்றது.
2) இப்பிரதேசம் நீரினை தேக்கிவைக்கும் திற னையும் உறிஞ்சும் திறனையும் இழக்கின்றது.
3) தாவரப்போர்வை நீக்கப்பட மண்ணரிப்பு தூண்டப்படுகின்றது இதனால் மண்வளம் அற்றுப் போகின்றது.
4) விவசாயிகள் காடழித்தபகுதிகளில் தொடர்ந்து பயிர் செய்வதனால் மண்ணானது காற்றினாலும் நீரினாலும் தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாகின்றது.

நிலம் மாசடைதலை ஏற்படுத்தும் காரணங்கள் பலவாறாக இருந்தபோதும் இத னால் ஏற்படும் நேரடியான விளைவு நிலம் தனது உள்ளார்ந்த உற்பத்தித் திறனை இழத்தலாகும் இதனால் பல்வேறு பௌதீக உயிரியல் பொருளாதார சமூகப் பாதிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இப்பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்புச் செய்வதற்கு வேண் டிய நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே இடம் பெற்று வருகின்றன. எனினும் இன்று நிலம் மாசடைதலைக் குறைப்பதற்காகவும் கட்டுப்படுத்தவும் பகுத்தறிவான நிலப் பயன் பாட்டுத் திட்டமிடல் நிலைத்து நிற்கும் அபி விருத்தி போன்ற சில சிறப்பான நடவடிக் கைகள் பல பகுதிகளில் இடம்பெற்று வரு வது குறிப்பிடத்தக்கதாகும். எவ்வாறெனினும் நிலம் மாசடைதலைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என் பதை இன்று எல்லா நாடுகளும் உணர்ந் துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

# வியாபாரம் வந்த வழி

ஆதியிலே அனாதியிலே
கூட்டமாய் குழுக்களாய்
ஊர்இன்றி உறவுகளாய்
ஊமை மொழி பேசி உண்மையாய்
பசிக்கும் போது பண்டம் தேடி
பக்குவமாய் பகிர்ந்தளித்து
வாழ்ந்தார்கள் வளமாய் முன்னோர்

உணவும் உடையும்
உறையுளுமே உற்பத்தி அங்கே
கூட்டுறவாய் உயர்வு தேடி
கூட்டமாக சேர்ந்து அதை
கூடியுண்டு வாழ்ந்தார்கள்
தனதென்று எதையும்
தனியாக்கி கொள்ளாமல்
தமதென்று அனைத்தையும்
போற்றியே வாழ்ந்ததால்
வியாபாரம் என்பது அவர்களுக்குத்தெரியாது

வேட்டையாடி வெறுத்த மனிதன்
ஒன்று இரண்டாய் தொடங்கி
முந்தைக் கூட்டத்திற்கு சொந்தமாகி
முந்தைகட்கு உணவு வேண்டி
காடு விட்டு காடு சென்று
பல நூறு மைல்கள் கூட்டமாய் இடம் பெயர்ந்து
வாழ்க்கை முறைமையை மாற்றிக் கொண்டான்
இடையார் சமூகமாக

குழுக் குழுவாய் மந்தைகளுடன்
கூட்டமாய் இடம் பெயர்ந்து
கூடி வாழ்ந்த மனிதன்
மந்தைகள் பெருகின் பயனும் பெருகுமென்று
குழு தத்தமும் செய்தான்
முந்தைகளை பரிமாற்றியும் கொண்டான்
பின்னாளைய பண்டை மாற்றுக்கு
சொத்து சேர்க்கும் இவ்வெண்ணம் அடிப்படையே

அலைந்து இளைத்த மனிதன்
ஆற்றையே கரைகண்டு அருமை வளம் கண்டு
பயிரை நாட்டி பயன் பெற எண்ணி
நல்ல பயிரைக்கண்டு பலனைக்கண்டு
பெற்ற பலனை சேமித்து
நீண்ட கால ஓய்வும் பெற்று
நிலையான வாழ்க்கைக்கு
அடித்தளத்தை இட்டுக் கொண்டான்
ஒருவனிடம் இருந்த காய்
இன்னொருவனிடம் இருக்கவில்லை

ஒருவனிடம் இருந்த பழம்
இன்னொருவனுக்கு தேவையாய் இருந்தது
மாற்றிக்கொண்டு பொருட்களை
பண்டைமாற்றை ஆரம்பித்தான்
வியாபாரத்திற்கான வித்து

இங்கு தான் நடப்பட்டது.
உலோகத்தின் பயனை நன்கு
அவன் அறிந்ததனால்
நீண்டகாலம் அது
கெட்டுவிடாமல் இருந்ததனால்
கிடைப்பதற்கு அரிதாய்
அது பெருமை பெற்றதனால்
சிறதுண்டு உலோகம் கொடுத்து
பெரும் பண்டம் மாற்றிக் கொண்டான்

எப்பொருளும் எப்போதும்
தேவைக்கு கிடைப்பதில்லை
தன் பொருளின் பெறுமதியை
தான் உணர்ந்து கொள்வதுமில்லை
பண்டை மாற்றின் பெருங்குறையை
அனுபவமாய் அறிந்து கொண்டு
பொதுவான ஊடகமாய் உலோகத்தை ஆக்கி
நாணயத்தை நல்கி வியாபாரத்தை தூண்டி விட்டான்.

தன் பொருளை தந்து நாணயத்தை பெற்றிடவும்
வீட்டிலிருந்தால் ஆகாதென்று கூடிவந்து ஓரிடத்தில்
சந்தை என்று பெயரிட்டு
வியாபாரத்தை சிறப்பாக்கினான்
நித்தம் நித்தம் சந்தைக்கு
சென்று வந்து கொண்டிருந்தால்
உற்பத்திக்கு காலம் போதாத உண்மையால்
வேண்டிவிற்க ஒருவன் தேவையாகி போனதனால்
வியாபாரி தோன்றினான் வியாபாரம் செழித்தது
நட்டங்கள் பெருக உற்பத்தி பெருக
ஒன்றை பலர் போட்டியாய் பெருக்கி வர
இன்னதன் பயன் இன்னதென்று
ஊரறியச் செய்வதற்கு
விளம்பரம் என்றொன்று விவேகமாய் உதித்தது
வியாபாரத்தை விறுவிறுக்கச் செய்தது
இந்த வழி வந்த வியாபாரம்
மானிட வழியெல்லாம் பரந்து
விண்முட்டி நிற்கின்றது.

**கலையரசி கணபதிப்பிள்ளை.**

**தரம் 13 வர்த்தகப்பிரிவு (2007)**

# எம்மூத்தோரை அரவணைப்போம்

நிழல் தந்த விருட்சங்கள் ஈடாடும் வேளை
நிலத்திலே விழுதுகள் நிலையெனத்தாங்கும்
பலங்கொண்ட காற்றிலும் எதிர்த்துநின்றாடும்
வலுவது இளவல்கள் அணைப்பினாலாகும்.

மரஞ்செடி கொடிகளில் மலர்கின்ற பண்பு
மனுக்குலம் எங்கிலும் மறைந்திட்டதென்ன?
இளைத்திட்ட முதியவர் துன்பம் துடைப்போம்
இனிவரும் காலங்கள் இனிதெனச்செய்வோம்

உடலினை ஊறுசெய் உற்ற நோய் நீக்கி
உளமது மகிழ்ந்திட உதவிகள் செய்வோம்
தக்கதாய் ஆடியும் பாடியும் அவர் முன்
பொக்கை வாய்ச் சிரிப்பிலே பூரிக்கலாமே

படகிற்குத் துடுப்பது சுமையாகலாமோ? — நடுக்
கடலிலே கலத்திற்குத் துணையாக யாரோ?
வேரை வெறுத்திட்ட பூக்களும் உண்டோ?
நரை கண்ட மாந்தரை ஒறுப்பது முறையோ?

சுற்றங்கள் சூழ சுதந்திர சுகவாழ்வில்
நற்றுணை அவர்க்கு நாம் செய்ய வேண்டும்
பெற்றெம்மை வாழ்விலே பெரிதாக்கி விட்டோரை
போற்றுவோம் தினம் புகழ் பாடி வாழ்வோம்.

**செல்வி. கணேசலிங்கம் விஷ்னுகா**
**தரம் - 5A**

*Live every day as though it were your last and death will not take you by surprise.*

*Make prayer the soul of you apostolate.*

# ஆக்கச் செயற்பாடுகளைக் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும்

**திருமதி. அம்பிகாதேவி செந்தில்குமரேசன்**
**ஆசிரியர் - ஆரம்பக் கல்வி**

ஆக்கச் செயற்பாடுகள் என்பது பிள்ளையினது உள்ளார்ந்த ஆற்றல்களை உயிர்த் துடிப்புடன் பிரதிபலித்துக் காட்டும் ஒரு செயல்முறையாகும். இத்தகைய செயல்முறையானது பிள்ளைகள் உடல், உள மனவெழுச்சிப் பண்புகளை மேலோங்கச் செய்து சமநிலையின் ஆளுமைத் தன்மையை வளர்த்தெடுக்கின்ற செயற்பாடுகளை ஆக்கச் செயற்பாடு என அழைக்கின்றோம். இதனால்தான் ஆரம்ப பிள்ளைகளுக்கு இது கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும். என்கின்ற நிலையில் ஆரம்பக் கல்வி கலைத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இச்செயற்பாடுகளை வகுப்பறையிலே முன்னெடுப்பதற்கு அழகியல் உணர்வுள்ள ஆசிரியர்களே வேண்டப்படுகின்றனர். இப்போதுதான் திட்டமிட்ட அடிப்படையில் உணர்ந்த வினைத்திறனுடன் செயலாற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் துலங்கல்கள் வெளிக் காட்டப்படும். அழகியல் லயப்பட்டவர்களும் குழந்தைகளின் உள்ளங்களை உளவியல் ரீதியில் அறிந்து அதற்கேற்ப பரிகாரம் காணக் கூடியவராக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் விளங்க வேண்டும். அப்போதுதான் உயிர்த் துடிப்புள்ள மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வகுப்பறையிலே ஆக்க பூர்வமாக அமையும்.

இன்று கல்வி வரலாற்றில் அதன் வளர்ச்சியானது உலகமயமாதல் தாக்கத்திற்கு ஈடு கொடுக்கக் கூடியதாக வியாபித்து நிற்கின்றது அதற்கு கல்வியை போதிக்கின்ற ஆசிரியர்கள் நிதானமாகவும் செயலுறுதியுடனும் செயற்பட வேண்டியுள்ளது இங்கு ஆரம்பக் கல்வியை எடுத்து நோக்குகின்றபோது ஒரு ஆசிரியரே எல்லாப் பாடங்கள் பற்றியும் பூரணமான அறிவை பெற்றிருத்தலே அதற்கு சாதகமாக அமையும் ஆனால் இன்று அநேக ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியில் ஆக்கச் சித்திரப் பாடம் கற்பிக்கின்ற போது இடர்படுகின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது. பாடத்தில் விருப்பமின்மை காணப்பட்டால் பிள்ளைகள் கற்றலில் பிழையையே சந்திக்க நேரிடும் ஆதலால் அவர்கள் பாடத்தில் விருப்பத்தையும் இரசனையையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். அப்போதுதான் வகுப்பறையும் மகிழ்ச்சிகர மானதாக அமையும்.

எனவே ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திலும் தேடியறிந்து வினைத் திறனான செயற்பாடுகளை முன்மொழிய வேண்டும். ஆக்கச் சித்திரப் பாடமானது சூழலை மையமாகக் கொண்டு திட்டமிடப் பட்டிருப்பதனால் சூழலை இரசிக்கக் கூடியதும் சூழலை விளங்கிக் கொள்ளக் கூடியதும், உணர்ந்து கொள்ளக் கூடியதுமான கருத்துக் களை வெளியிடுவது இரசிப்பது இவை அனைத்தையும் உரிய முறையில் விளங்கிக் கொண்ட ஆசிரியர்களே ஆரம்ப வகுப் பறைக்குத் தேவைப்படுகின்றனர். எனவே ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் ஞானவிளக்கு களாக சமூகத்தில் மதிக்கப்படுகின்றனர்.

ஆனால் இன்று அநேக ஆசிரியர்கள் ஆக்கச் செயற்பாட்டிற்கு பாடத்தின் அடிப் படைகளை விளங்கிக் கொள்ளாமையினால் செயற்பாட்டை போதிக்கும் போது கடும் சவால்களை எதிர்கொள்கின்றனர் இவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் உத்திகள் நவீன மாதிரிகள் தொடர்பயிற்சிகள் என்பவற்றை காலத்திற்கு காலம் பெற்றுக் கொள்வதன் மூலம் நல்லதோர் ஆசிரியர் என்ற இடத்தை

அதாவது மாணவர் விரும்பும் ஆசிரியர் என்ற இடத்தை அடைய முடியும்.

எனவே ஆரம்பக் கல்வியில் ஆக்கச் சித்திரம் கற்பிக்கும் போது உருவங்களையோ காட்சிகளையோ அல்லது அலங்காரங் களையோ வரைந்து காட்டுகின்ற போது பிள்ளைகளுக்கு புரிந்து கொள்ளக்கூடியதாக புலன்களால் வரக்கூடிய விதமாக சுதந்திர மாகவும் மகிழ்ச்சியாகவும் கற்கக் கூடிய விதமான செயற்பாடுகளை வழங்குதல் வேண் டும் அதுவும் பிள்ளையின் வயது, வகுப்பு, முதிர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் திட்ட மிட்டு வழங்குதல் வேண்டும் அவ் வேலைதான் பிள்ளையினது மூளையில் ஆழப்பதிந்து விடு கின்றது. ஆக்கச் செயற்பாட்டுப் பாடமானது வெறுமனே கொள்கை ரீதியில் போதிக்கப்படக் கூடிய்தன்று. அது அவதானிப்பு, பரிசோதனை, பயிற்சி, ஆக்கம், நுண்நோக்கு என்பவற்றின் ஊடாக மாணாக்கர் தாம் வாழும் சுற்றாடலைக் காண உதவுவது ஆகும்.

எனவே ஆரம்பக் கல்விப் பாடவிதானத் திலும் ஆக்கச் சித்திரப் பாடமானது சுற்றாடலை மையமாகக் கொண்டு சுற்றாடற் கல்விப் பாடத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் பாடத் திலும் சிறப்பாகத் தொடர்புபடுத்தி கற்பிக்க முடிகின்றது. ஒவ்வொரு பாட அலகுகளையும் கற்பிக்கின்ற போது உருவப்படங்கள் வரைய வேண்டிய தேவை இன்று கட்டாயமாக எழுந் துள்ளன. காட்சிகள் படங்கள், செயற்பாடுகள் என்பவற்றின் மூலமே மனதில் நிலைநிறுத்தப் படுகின்றன. எனவே அவற்றை வெளியிட அனுபவத்தைத் திரும்பத் திரும்பப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும் இந்த அனுபவம் இரசனைக்கு உட்படுத்தப் படுவதால் அறிவு இரசனையுடன் கற்பனை உருவாக்கம் பெற்று ஆக்கமாக நிலை நிறுத்தப்படுகின்றது.

ஆகவே ஆக்கப் பாடத்திற்கு ஆயத்த மாகும் ஆசிரியர்கள் அதற்கான வினை யாற்றலைப் பெற்றிருக்க வேண்டும். அப் போதுதான் சவால்களுக்கு முகம்கொடுக்க கூடியதாக இருக்கும் ஆரம்பப் பிள்ளைகளுக்கு ஆக்கச் செயற்பாடுகளைக் கற்பிக்கின்ற போது உருவங்களை வரைவதற்கு அவற்றில் அடிப்படை வடிவங்களுக்கான பயிற்ச்சிகளைத் திரும்பத் திரும்ப வழங்குதல் வேண்டும் அப் போதுதான் கைகளின் அசைவுகள் சுதந்திரமாக ஆக்குவதற்கு வழிவகுக்கும் இப்பயிற்சிகளின் வழியில் அவற்றை இணைப்பதன் மூலமாகவோ அல்லது தொகுப்பதன் மூலமாகவோ எடுத்துக் கொள்ளப்பட்ட உருவத்தைக்காண முற்படுவர். இதனை மிகவும் இலகுவாகவும் ஆறுதலாகவும் இரசனையுடன் செய்விப்பதன் மூலமே பிள்ளை கள் இலகுவாக கற்க வழி ஏற்படும்.

பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்ற அடிப் படைக் குறியீட்டு வடிவங்கள் நாளாந்தம் அவர் களது புலக்காட்சிகளுக்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் பிள்ளை இலகுவாக அவற்றை வரைய முடியும். எனவே ஆக்கச் சித்திரப் பாடத்தில் ஒழுங்குபடுத்தி தேவையினைத் தீர்க்கும் முறையிலே பின்வரும் செயற்பாடுகளை வழங்குவதன் மூலம் ஓரள வுக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வரையும் திறனைப் பயிற்சி பெற்று அவற்றைப் பிள்ளை களுக்கு வெளிக்காட்டுவதன் மூலம் பிள்ளை களது மூளையிலே அவை எண்ணக்கரு ஆக்கமாக நிலைநிறுத்தப்படுமென ஊக்குவிக்க இடமுண்டு. எனவே ஆரம்பக் கல்வி ஆக்கச் செயற்பாட்டுப் பாடத்தை போதிக்கும் ஆசிரி யர்கள் உருவங்களை வரையும் போது இடர் படுகின்ற நிலமையை நிவர்த்தி செய்ய மேலே கூறப்பட்ட முறைகளிலே நடைமுறைப்படுத் தினால் ஆசிரியரும் மாணவரும் நன்மை யடைந்து கற்றல் கற்பித்தல் மகிழ்ச்சிகரமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

# எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி ஆகும். 1947ஆம் ஆண்டு சேர் ஏபிரகாம் சிற்றம் பலம் காடினர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. கோப்பாய் கோட்டத்தில் சிறப்பாக இயங்கி வரும் ஒரு பெண்கள் கல்லூரி என்பதில் நான் பெருமையடைகிறேன். தரம் 1 - 5 வரை ஆண்களும் கல்வி கற்கின்றனர். தரம் 6 - 13 வரை பெண்கள் மட்டுமே கல்வி பயில்கின்றனர். பாடசாலைச் சின்னத்தில் உண்மையும் தூய் மையும் என்ற மகுடவாசகம் பொறிக்கப் பட்டுள்ளது. பாடசாலையின் கொடி கரும் சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்கள் கொண்டது. ஆரம்ப காலம் முதல் ஆளுமை மிக்க அதிபர் களால் நடத்தப்பட்ட எனது பாடசாலையின் தற்போதைய அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ அ.க. ஆவார்.

1990 களில் 1500 மாணவர்களுடன் இயங்கி வந்த எமது பாடசாலை நாட்டின் அசாதாரண நிலமைகள் காரணமாக மாணவர் தொகையில் வீழ்ச்சி கண்டது. ஆனால் இன்று வருடாவருடம் மாணவர் தொகை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அறிவொளி புகட்டும் நிரந்தர ஆசிரியர்கள் 25 பேரும் நலன்புரி ஆசிரியர்கள் 4 பேருடன் நலன்புரி ஆசிரியரின் உதவியுடன் கணனிக் கல்வியும் நடைபெற்று வருகின்றது.

வானுயர்ந்த இருமாடிக் கட்டடங்கள் இரண்டும் சிறுவர் பூங்காவும், பிரதான மண்டபமும், அதிபரின் காரியாலயமும், தரம் 2,3 வகுப்பறைகளும் "ப" வடிவில் அமைய கிழக்குப் பக்கமாக விளையாட்டு மைதானம் அமைந்திருப்பது பாடசாலையை அழகு செய்கின்றது.

கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் எமது பாடசாலை கல்லூரி ஸ்தாபகர் தினம், பரிசுத்தினம், அதிபர் தினம், பெற்றோர் தினம், வாணி விழா, ஒளிவிழா, உயர்தர மாணவர் ஒன்றுகூடல் வருடந்தோறும் கொண் டாடி வருகின்றது. தூர இடங்களிலிருந்துவரும் மாணவர்களின் வசதி கருதி விடுதிச்சாலையும் இயங்கிவருவது பெருமைக்குரிய விடயமாகும். எமது கல்லூரியில் நான் கல்வி பயில்வதில் பெருமையடைகின்றேன்.

நன்றி

**செல்வன் அஜந்தன் டெறின்சன் டெறிஸ்ற்**
**தரம் 3B**

*God weans you to woo you*
*and he woos you to wean you.*

*Love is always tried and*
*tested; it thrives on suffering.*

# ஐ.நாவின் மணியொலி

புரிதலே பிணக்கினைப் பிளந்திடும் என்றார் ~ மனித
உரிமைகள் மதித்திடல் மாண்புறச் செய்தார்
சரிசமம் ஆனவர்க்கும் சகலதும் கொண்ட ~ போர்
தரிசான பூமியை செழிப்பாக்க எண்ணினார்.

வீசும் இரத்தநெடி துடைத்துப் புதுவுலகில்
தேசங்கள் இணைந்து புதுவாசம் பரப்பிடவே,
நாசம் புரிந்தவர் நடுங்கியே ஓட — ஐக்கிய
நாடுகள் என்றே அமைந்தனர் நன்றாய்.

பனிவிழும் நகரம் "சான்பிரான்ஸிஸ்கோ"வில்
கனி பல விளையும் "லம்பாட்டன் ஓர்க்ஸ்" இல்
இனி வரும் காலங்கள் இனிதென செய்ய — வெண்
மணியென ஐ.நாவின் முதலொலி எழுந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முதலரை இறுதியில்,
அருகவே நாற்பத்து ஐந்தாவது ஆண்டிலே,
பெருகிடும் சமாதான போராதரவு வெள்ளத்தில்,
மிருக குணமழித்து மீட்ட நாள் அன்று.

பொதுச்சபையோடு, பாதுகாப்பு சபையும்,
பொருளாதாரம் உயர்த்தும் சமூக சபையும்,
பொல்லாப்பழிக்கும் நம்பிக்கை சபையுடன் ~ யாரும்
போய்க் கேட்டும் சர்வ மன்றுடன் செயலகம்.

அறுசபை இணைந்து அமைத்தவுயர் அதிகாரம்,
நெறிதவறாத நேரிய செயலாளர் நாயகம்,
வறிதயர் போக்கியே வல்லமை கூட்டிட,
செறிபுகழ் கொண்டு உலகில் ஐக்கிய நாடுகள்.

சமாதானம் இன்னும் சந்தியில் தான் நிற்கின்றது,
சரிநிகர் சொல்லில் மட்டுமே சார்கிறது,

சமவுரிமை சாசனங்களின் சாதனைகள் எங்கே?
சர்வலோக நாசம் தான் சமகால கொள்கையா!
கழுகுகள் தேசத்தின் காற்பிடியில் ஐ.நா,
எழுவது இனிமேல் எப்போது என்றால்,
வறியவர் சிறியவர் வகுப்பின்றி உலகில்,
கலிபோக்க கரங்கள் நீள்கின்ற நாளில்.

சீறி வரும் போர் மேகம் சிதைத்திடல் வேண்டும்,
மாறு பாடின்றி மக்கள் உரிமைகள் வேண்டும்,
தேறுதல் உலகிலினில் தேய்ந்தவர்க்கு வேண்டும்,
மாறுபட்டுலகில் புது மணம் பரப்ப வேண்டும்.

புரிதலே பிணக்கினைப்பிளந்திடும் என்றார் ~ மனித
உரிமைகள் மதித்திடல் மாண்புறச் செய்தார்
சரிசமம் அனைவர்க்கும் சகலமும் கொண்டு — போர்
தரிசான பூமியை செழிப்பிக்க எண்ணினார்.

வீசும் இரத்த நெடி துடைத்துப் புதுவுலகில் ~ பல
தேசங்கள் இணைந்து நறு வாசம் பரப்பிடவே,
நாசம் புரிந்தவர்கள் நடுங்கியே ஓடிவிட — ஐக்கிய
நாடுகள் என்றே அமைந்தனர் நன்றாய்.

பனிவிழும் நகரம் "சான்பிரான்ஸிஸ்கோ" வில்
கனி பல விளையும் "லம்பாட்டன் ஓர்க்ஸ்" இல்
இனிவரும் காலங்கள் இனிதெனச் செய்ய — வெண்
மணியென ஐ.நாவின் முதலொலி எழுந்தது.

**செல்வி. சிவர்சனா தம்பிஐயா,**
**தரம் 13 கலை (2008)**

# நாம் கி.பி 2007 இல் வாழ்கிறோம் என்பதற்கான அடையாளங்கள்

திரு. க. சுதர்சன்
(B. com. Dip in Education)

நாம் கி.பி 2007இல் வாழ்கிறோம் என்பதற்கான அடையாளங்கள் என்ன? என்கிற ஒரு சங்கதி நெற்றில் பரவிக் கொண்டிருக்கிறது இதை முதலில் துலக்கியவர் ஆண்ட்ருகிரஹாம் என்பவர்.

நாம் கி.பி 2007இல் வாழ்கிறோம் என்பதற்கான 20 அடையாளங்கள்.

1. யாரைச் சந்தித்தாலும் ஈமெயில் விலாசம் கேட்பீர்கள்.

2. உங்கள் 6ம் வகுப்பு பிள்ளைகளுக்கு (Jpeg) பற்றித் தெரிந்திருக்கும் பிளப்பி போன்ற வார்த்தைகளை பிரயோகிப்பார்கள். தானாகவே கணிப்பொறியை On செய்வார்கள் எட்டிப் பார்த்தால் சட்டென்று அணைத்து விடுவார்கள்.

3. உங்கள் வீட்டில் குழந்தையையும் சேர்த்து மூன்றுபேர் தான் இருப்பார்கள் ஆனால் வீட்டில் நாலு போன் இருக்கும்

4. வீட்டு வாசலிலிருந்தே வீட்டில் யாராவது இருக்கிறார்களா என்று செல்போன் பேசுவீர்கள். நடக்கும் போது பேசவில்லையென்றால் ஜென்மம் சாபல்யம் அடையாது பொலிஸ் பிடிக்கும் வரை காரில் ருவீலரில் போகும் போதும் பேசுவீர்கள்.

5. எல்லா விளம்பரத்தின் கீழேயும் ஒரு WWW அட்ரஸ் இருக்கும் கிராமத்தில் பஸ் ஏறுபவரிடம் விவசாயி மாப்பிள்ளை போய்ச் சேர்ந்ததும் E-mail போடுங்க பழனிச்சாமி @hotmail.com என்பர்.

6. கடைசியாக கம்பியூட்டர் வாங்கி 6 மாதத்தில் கீபோட்டில் கைவைத்து பழகுமுன் அது பழசு என்று உங்கள் மகள் சொல்வாள்.

7. எங்கே சென்றாலும் கையில் செல் போன் இல்லையெனில் கை ஒடிந்தாற் போலிருக்கும் டாய்லெட், பொதுக்கூட்டங்கள், இரங்கற் கூட்டங்கள் உட்பட சினிமா பார்க்கும் போது அது ஒரு முறை சிணுங்கியே ஆக வேண்டும். தியேட்டரில் எல்லோருக்கும் ஸ்பஷ்டமாக கேட்கும்படியாக "இன்னும் வாங்கலைம்மா.. புடலங்காய் விலை ரொம்ப அதிகம் வேணும்னாவரும்போது இரண்டு கிலோ கத்தரிக்காய் வாங்கிக் கொண்டு வாறன்..." என்று கத்துவீர்கள்.

8. அது போல கிரடிக் கார்ட்டு இல்லையெனில் கைகள் எல்லாம் நடுங்க ஆரம்பித்து விடும். காகித நோட்டுக்கள் போதாதால் கை வைத்த பனியனுக்கும் ஒரு ஜோடி சொக்சுக்கும் கிரடிக் கார்ட்டு கொடுக்க விரும்புவீர்கள்.

9. ஏ.டி.எம் நம்பரை உங்கள் ரி.வி ரிமோட்டில் உள்ளிடுவீர்கள்.

10. தபாலில் போட்ட கடிதம் அடுத்த நாள் போய்ச் சேருவது உங்களுக்கு ரொம்ப லேட்!

என்ன டிப்பார்ட்மென்ட் நடத்துறாங்க கவர் மென்டில் என்று அறுத்துக் கொள்வீர்கள்.

11. உங்கள் வீட்டுச் சாப்பாட்டு மேசைதான் அத்தனை காகிதங்களும், ஆவணங்களும், செக்புக்கும், சாவிக் கொத்தும் படிக்க மறந்த கடிதங்களும், மனைவி வாங்கிய காய் கறிகளும், மகனின் பீட்ஸா மீதியும், இன்றைய செய்தித் தாள்களும் வைக்கும் இடம்.

12. "பேஸ்ட் இட்" என்னும் மஞ்சள் கடி தாசியில் எதையாவது எழுதி ஒட்டி வைத்தால் தான் உங்கள் வாழ்க்கை ஒழுங்காகும் அதற்குப் பின் அதை மறக்கலாம்.

13. நீங்கள் ஜோக் படிப்பதும் பத்திரிகை பார்ப்பதும் "நெட்டில்" தான்.

14. உங்களிடம் இருப்பவற்றில் ஒரு போன் நம்பராவது உங்களுக்கே ஞாபகமிருக்காது. வங்கிச் சேமிப்புக் கணக்கு எண்ணிக்கையுடன் குழப்பம் வரும்.

15. "இன்டர் நெட்" வேலை செய்ய வில்லையெனில் உங்களுக்கு கைகால் நடுங்கும் ISP யைக் கூப்பிட்டுத் திட்டுவீர்கள்.

16. அதிகாலை எழுந்து காபி குடிப்பதற்கு முன் நெட்டில் அலைவீர்கள்.

17. பாத்ரூம் போவதற்கு முன் "E-mail" பார்ப்பீர்கள். இல்லையெனில் பாத்ரூம் வராது போய் வந்ததும் பதில் வந்ததா என்று பாப்பீர்கள்.

18. புன்னகைப்பதற்கு தலையை பக்க வாட்டில் சாய்த்துக் கொள்வீர்கள் ":-" (எஸ்.எம்.எஸ்)

19. இந்த பட்டியலை உங்கள் நண்பர் களுக்கு உடனே அனுப்புவீர்கள்.

20. இதை முதலில் ஆரம்பித்து ஆண்ட்ரு கிரஹாம் அல்ல., நான்தான் என்று பத்திரிகை ஆசிரியருக்கு மெயில் அனுப்புவீர்கள்.

*Seek silence and commune with God who dwells within you.*

*Do not be anxious. Trust God for he is still the Master of the Universe.*

# கல்லூரி நாட்கள்

எல்லோரும் ஏறும் இளமை பஸ்ஸில் இப்போது - நாங்களும்
இனிய பயணம் தான் போகுமிடமெல்லாம்
இறங்குமிடத்தில் இறங்க மறுத்தால் இழுக்கு எமதே!

வழுக்கு மரத்தின் உச்சியிலே தான் வாசனைப் - பொதி
பாதை சரியானதே - எங்களின் பார்வை தவறாத வரை

கல்லூரி நாட்கள் என்ற கனவுச் சோலையில் தான்
- பள்ளிச் சிட்டுக்களின் வர்ண ஊர்வலம்
- வானவில் நிறங்களின் வாகனத் தொடரணி
- தெவிட்டாத கல்வியின் தேன்துளி விருந்து
- வானத்தையே வளைக்கும், வார்த்தை ஜாலம்
- பூமிப் பந்தைப் புள்ளியாக்கும் புதுமனத் தெம்பு
- விண்மீனால் கூடுகட்டும் வீர சாகஸம்

தளிர்க்கும் மீசை முத்துக்களுக்கும், தாவணிக் கனவுகளுக்கும்
தினம் தினம் தீபாவளிதானே இங்கு!

மணியடிக்கும் இடைவெளியில் மாவட்ட மாநாடுகள்
முடிந்த பரீட்சைகளின் பிரிவுபசார விழாக்கள் -
புதிய புத்தகங்களின் மாலை மரியாதைகள்
புள்ளிகளும், பிரம்புகளுமாய் இனிக்காத தேர்தல்கள்
நட்பின் கட்சித் தாவல்கள், நடைபாதை நாடாளுமன்றங்கள்
கடைவீதிக் கதைச் சோடனைகள், கலகலக்கும் பேரணிகள்
பாடசாலைக்கான கதவடைப்புகளுடன், கல்விக்கான ஹர்த்தால்கள்
காரசாரமான கண்டனக் கூட்டங்கள், காதைப் பிளக்கும்
கருத்து மோதல்களுடன் - கைகலப்பும் நிறைந்த நிழல் அரசியல் இது!

நிஜத்தைப் போலவே - இந்த நிழல் அரசியலிலும்
எதுவும் நிரந்தரமாய் இல்லை.

கல்லூரி தானே எம் வளர்ப்புலகின் களம்,
புடங் கொண்ட பொன்னாய் புத்தெழுவது இங்குதானே!

தடம் பல பதித்துலகில், திடங்கொண்டு தினம் வாழ
இடம் தந்த இனிய பூங்கா
கடம் போலவே இங்கு கையாள்வது கவனம்
களிப்பிசை கூட்டும் கைதவறின் கடிந்துடையும்

இந்த வர்ணக் கலவை வரையப்படுத்த வேண்டும் என்பதற்காகவே,
இந்த சந்தனக் குழம்பு சாக்கடையாகக் கூடாதென்பதற்காகவே,
ஏணித் தடிகள் எரிவிறகாகக் கூடாதென்பதற்காகவே,
எம் கனவுகளின் கதவில் கண்டிப்பின் பூட்டு –
தொங்கிக்கொண்டிருக்கிறது.

அம்மாவின் விசும்பல்களும், அப்பாவின் அதட்டல்களும்
ஆசிரியரின் அடிப்பிரம்பும், அதிபரின் சுடுமொழியும்
அரை நெல்லிக்காய் போல
முன் கசந்தாலும் பின் இனிக்கும்.

எரியும் பெருநெருப்பாய் எம்மிடத்தில் கல்வி
விளக்கும் எரிக்கலாம், வீடும் எரிக்கலாம்!
நாம் ஒளியூட்டவே விரும்புகிறோம் !
அணையாட விடிவிளக்காய் எழுவோமினி!

**செல்வி. நிஷா இராஜகோபால்**
**தரம் 13 கலை (2008)**

*Be at peace with yourself to be at peace with others.*

# நீர்போர் – ஒரு கண்ணோட்டம்

செல்வி.ச.மனோஜா
*B.A. Hons (Geography)*

நீரானது தீயை அணைக்கக்கூடியதேயல் லாமல் தீயை மூட்டக்கூடியதல்ல ஆனால் இனிமேல் போரை மூட்டக்கூடிய பொருளாக இதுவே இருக்கப்போகின்றது என்ற அச்சம் இப்போது சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ளது.

எண்ணெய்க்காக போர்கள் நிகழ்ந்தது போல தண்ணீருக்காகவும் போர்கள் ஏற்படும் என்று அரசத் தலைவர்களும் ஐ.நாவின் உயர் அதிகாரிகளும் எச்சரிக்க ஆரம்பித்துள்ளார்கள். 1979இல் எகிப்து அதிபர் "அன்வர் சதாத்" எகிப்து இனி சண்டையில் இறங்க நேரிட்டால் அது நைல்நதி நீராகத் தான் இருக்கும். 1990 இல் ஜோர்டான் மன்னர் "சேன்" இஸ்ரேலுடன் தண்ணீருடனான போர் வரும் என்றார். ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் "நீர் விவ காரங்களில் பெரும் வன்முறைக்கான வித்துக் கள் புதைந்து போயிருக்கின்றன. என்ற அச் சத்தை நீர்வள ஆதாரங்களின் மீது தேசிய அளவில் ஏற்பட்டுள்ள கடுமையான போட்டிகள் கொண்டுள்ளன." எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

வளைகுடா போரின் போது ஈராக், குவைத்தில் இருந்து உப்புநீரை குடிநீராக மாற்றும் இயந்திரங்களைத் தகர்த்து குடிநீருக்கு பஞ்சம் உண்டாக்கியது. பக்தாத் நகரத்துக்கு குடிநீர் வசதிகளை நேசநாட்டுப்படை குறி வைத்துத் தாக்கியது. 1999இல் நேட்டோ படைகள் கொசோவோவினுள் நுழையமுன்னர் சேர்பியப் பொறியியலாளர்களால் நீர் வழங்கு அமைப்புக்கள் செயல் இழக்க வைக்கப்பட்டன. இவ்வாறு போரில் ஒரு உத்தியாகப் பயன்பட்ட நீரினால் இனிமேல் போரே உருவாகப் போகின் றது என எச்சரித்துள்ளனர்.

